# மாதவமித்திரன்

புஸ்தகம் 9 இல. 6 — 8

ஜனவரி — மார்ச் 1937

208170



ர:, सत्यं जगत् , तत्वत:भे

# மாத்வமித்ரன்

# THE MADWA MITRAN

EDITOR:
**Adyam Bhagavatha Ranganathachar**
**KUMBAKC M.**

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 9. | தாத்ருநாம ஸம்வத்ஸரம். | No. 6. |
|---|---|---|
| புஸ்தகம் 9 | மார்கசிர்ஷ மாஸம். (25—1—1937.) | நெ. 6. |


28 JAN


| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 161 |
| 2. | விதவா விவாக கண்டனம் | 169 |
| 3. | ஸ்ரீ மத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) | 173 |
| 4. | சங்கர லீலா விலாசம் (ஸ்ரீமான் H. சுப்புராவ் M.A.,) | 177 |
| 5. | ஸ்ரீ அக...ஜத்தின் மகாத்மியம் | 179 |
| 6. | மதுரூஸ் கவர்ன்மெண்டார் கூறும் ஸ்ரீ ராகவேந்திரரின் மகிமை | 185 |
| 7. | ஸ்ரீமத்வாசாரியாரே சரியான ஆசாரியன் (உபன்யாஸம்) | 187 |
| 8. | விசேஷ தினங்கள் | 192 |


...ரியர்:— ஆத்யம் பாகவத ரங்கனாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் பு[illegible] வகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வே[illegible] ...மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி கு[illegible] மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வால்யங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் கா[illegible] அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீநிவாஸ விலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன் பழைய வால்யங்கள்

## வெகு சொற்பந்தானிருக்கின்றன.

## உடனே அவைகளைப்பெற

## முந்துங்கள்.

28 JAN 193

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வ மித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

Vol. 9 | தாத்ரு நாமஸம்வத்ஸரம். மார்கசீர்ஷ மாஸம். | No. 6

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

ஸ்ரீமு. வே. பாகவத ரங்கனாதசாரியாரின் மொழிபெயர்ப்பு.

### இருபத்தி ஏழாவது அத்தியாயம்.

(முன் 138ம் பக்கம் தொடர்ச்சி, காபிரைட்.)

திருஷ்டத்யும்னனுக்கும் கிருதவர்மாவுக்கும் மகாக்ரூரமாயும் ஆச்சரியமாயுள்ள யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் பிரயாசையன்னியில் திருஷ்டத்யும்னன் கிருதவர்மாவை ரதம் ஆயுதம் இல்லாமற் செய்தான். கிருபாசாரியார் கிருதவர்மாவை தன் ரதத்தில் உட்கார்த்திவைத்துக்கொண்டு வேறு இடத்திற்கு அழைத்துப்போனார். பிறகு துரியோதனன் நகுல சகாதேவர்களிடம் யுத்தத்திற்கு வந்தான். அவர்களுக்கும் துரியோதனனுக்கும் கோரமானதும் அற்புதமானதுமான யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் அதிகம் பிரயத்னமன்னியில் நகுல சகாதேவர்

களை ரதமில்லாமல் செய்தான். அப்பொழுது தர்மபுத்திரர் சுயம் தடுத்தார். துரியோதனன் தர்மபுத்திரரை யுத்தத்தில் குதிரை ஸாரதி த்வஜம் இவைகளில்லாமற் செய்தான். பிறகு மறுபடியும் யுத்தத்திற்கு வந்த கர்ணனிடம் பீமசேனர் ரதமேறி கோபத்துடன் யுத்தத்திற்கு வந்தார். வீரரான பீமசேனர் துரியோதனனின் எதிரில் ஓர் க்ஷணத்தில் கர்ணனின் ரதத்தை நாசம் செய்தார். பாணங்களால் கர்ணனைத் தடுத்து அவனுடைய குமாரனான ஸுஷேணனின் சிரத்தை பாணத்தால் சேதித்தார். கர்ணனின் சமீபத்தில் அவனுடைய பிள்ளையான ஸத்திய ஸேனன் பீமசேனரால் எப்படி கொல்லப்பட்டானோ முன்பு நடந்த ராத்திரி யுத்தத்தில் கர்ணனுடைய இரண்டு தம்பிமார்களும் கர்ணனின் எதிரில் பீமசேனரால் எப்படி கொல்லப்பட்டார்களோ, அப்படியே பீமசேனரால் கொல்லப்பட்ட ஸுஷேணன் தந்தையான கர்ணனுடைய சமீபத்தில் விழுந்தான். கொல்லப்பட்டிருக்கும் ஸுஷேணனைப்பார்த்து கர்ணன் கோபமடைந்தவனாய் பீமசேனரை விட்டுவிட்டு ஸைனியங்களை நாசம் செய்துகொண்டு உத்தமமான குதிரைகள் [illegible] ரதத்தில் உட்கார்ந்திருக்கும் தர்மபுத்திரரிடம் சென்றான். ஸாத்யகி த்ருஷ்டத்யும்னன் ஸோமகராஜர்களின் கூட்டங்கள் கூடிய த்ரௌபதி குமாரர்கள் கர்ணனைத் தடுத்தனர். கர்ணன் இவர்களை எல்லோரையும் ரதமில்லாமல் செய்து நகுலன் சகாதேவன் இவர்களோடு கூடிய தர்மபுத்திரரிடம் வந்தான். கர்ணன் தர்மபுத்திரனின் குதிரைகளை யுத்தத்தில் ஸம்ஹாரம் செய்து நகுல சகாதேவர்களை ஆயுதமில்லாமல் செய்தான். ஒரே ரதத்தில் உட்கார்ந்திருந்த தர்மபுத்திரர் நகுலன் சகாதேவன் இவர்களை மறுபடியும் கர்ணன் க்ரூரமான பாணங்களாலும் பேச்சாலும் ஸங்கடப்படுத்தினான். அப்பொழுது தர்மபுத்திரரை தப்புவிக்கிறதற்காக பீமசேனர் துரியோதனனை ரதமில்லாமற் செய்து மிக்க க்ரூரமான பாணங்களால் மர்மஸ்தானங்களில் அடித்தார். சல்யன் துரியோதனனுடைய நிலைமையை கர்ணனுக்கு காண்பித்தார். அப்பொழுதே கர்ணன் தர்மபுத்திரரை விட்டு துரியோதனன் [illegible]குமிடத்திற்கு சென்றான். தர்மபுத்திரர் சங்கடத்துடன்

உ0870.



மெதுவாய் தன் டேராவுக்குப்போய் அங்கு படுத்து விட்டார். கர்ணன் துரியோதனனைக் காப்பாற்ற விருப்பங்கொண்டு போகவும் அப்பொழுதே அசுவத்தாமா கிருபாசாரியார் இவர்கள் அங்கு சென்றனர். அப்பொழுது பீமசேனர், அசுவத்தாமா கர்ணன் இவர்களிடம் சென்றார். பீமசேனரின் புஜத்தால் விடப்பட்ட பாணங்களால் அடிபட்ட துரியோதனனை கிருபாசாரியார் தன் ரதத்தில் போட்டுக்கொண்டார். துரியோதனனை எடுத்துக் கொண்டு கிருபாசாரியார் ஓடிவிடவும் அசுவத்தாமா கர்ணன் இவர்கள், பீமசேனரின் பாண சமூகங்களால் ஹிம்சிக்கப்பட்டவர்களாய் பீமசேனனை விட்டு பாணசமூகங்களால் வீரர்களை தள்ளிக்கொண்டு ஸோமகராஜர்களின் ஸைனியத்திற்கு சென்றனர். பிறகு அர்ஜுனன் யுத்தரங்கத்தில் தர்மபுத்திரரைக் காணாமல் ஸ்ரீகிருஷ்ணரால் பிரேரிக்கப்பட்டவனாய் டேராவுக்கு சென்றான். திருஷ்டத்யும்னன் கர்ணனால் கொல்லப்பட்ட தன் ஸைனியத்தைப் பார்த்து கௌரவர்களை ஹிம்சித்தான். டேராவுக்கு செல்லும் வானரத்வஜனை அர்ஜுனனை அசுவத்தாமா தடுத்தார். துச்சாசனன் திருஷ்டத்யும்னனை தடுத்தான். அதிரதனை துச்சாசனனும் திருஷ்டத்யும்னனும் பாணத்தால் இருளச் செய்துகொண்டு சஸ்திராஸ்திரங்களை விருஷ்டி செய்தனர். அந்த யுத்தத்தில் எக்களித்துவரும் த்ருஷ்டத்யும்னன் துச்சாசனனால் அசைவற்றுப் போய் யுத்தத்தில் யத்தனமில்லாமலும் ஆயுதமில்லாமலும் செய்யப்பட்டான். அப்பொழுது அசுவத்தாமாசாரியாருக்கும் இந்திர புத்திரனை அர்ஜுனனுக்கும் மகா க்ரூரமான யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்திலும் அர்ஜுனன் அசுவத்தாமாவின் பாணக் கூண்டால் கட்டுண்டான். காண்டீவதனுஸின் கயிறு சேதிக்கப்பட்டது. பிறகு அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணரின் ஆலிங்கனத்தால் விருத்தியடைந்த பாஹுவின் வீரியமுள்ளவனாய் அசுவத்தாமாவின் ஸாரதியை ஸம்ஹாரம் செய்து, அந்த குதிரைகளின் லகான்களை சேதித்து, அந்த குதிரைகளையும் பாணங்களையும் வெகுதூரம் விரட்டினான். இவ்வாறு அர்ஜுனன் அசுவத்தாமாவை ஜயித்து புறப்படவும் கர்ணன் பாண விருஷ்டியின் தொடர்ச்சியுள்ளவனாய் பாண்டவ ஸைனியத்தை

ஓட்டினான். துரியோதனன் கர்ணன் பின்னாடி புறப்பட்டான். தன் ஸைனியங்களை விரட்டிக்கொண்டு கர்ணன் வருவதைப் பார்த்து த்ருஷ்டத்யும்னன் மற்றொரு தனுஸ்ஸை எடுத்துக் கொண்டு கர்ணனைத் தடுத்தான். கர்ணனுக்கும் த்ருஷ்டத்யும்னனுக்கும் சிரம பரிகாரமில்லாததும் ஸமமுமான மகா யுத்தம் வெகுகாலம் நடந்தது. அப்பொழுது வீரனான ஸாத்யகி துரியோதனனைத் தடுத்தான். யுத்தத்தில் ஸாத்யகியால் தடுக்கப்பட்ட துரியோதனன் ஸாத்யகியின் குதிரைகளைக் கொன்று த்ருஷ்டத்யும்னனுடைய தனுஸ்ஸை சேதித்தான். அந்த சமயமே கர்ணன் த்ருஷ்டத்யும்னனுடைய குதிரைகளை சம்ஹரித்தான். ஸாத்யகி த்ருஷ்டத்யும்னன் இருவர்களும் ரதமில்லாமல் நிற்கவும் பாண்டவர்களின் ஸைனியம் ஓடிற்று. தன் ஸைனியம் ஓடுவதைப் பார்த்து ஸிம்ஹத்தை த்வஜமாகக் கொண்ட பீமசேனர் பூமியை நடுங்கச்செய்யும் க்ரூரமான சப்தத்தைச்செய்து யுத்தம் செய்வதற்காக துரியோதனின் ஸைனியத்திற்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது பீமசேனரின் கர்ஜனையாலும் பாணங்களாலும் முறியடைந்து கௌரவர்களின் ஸேனை சீக்கிறமே மூலைக்கொன்றாய் ஓடிற்று. துரியோதனனும் பீமசேனரால் ஆயுதம் வாஹனமுமில்லாமல் யுத்தத்தில் நிறுத்தப்பட்டான். பீமசேனரின் செயலைப் பார்த்து தடுக்கமுடியாத பராக்கிரமுள்ள பாண்டவ ஸேனை சீக்கிரம் திரும்பிற்று. அந்த சேனையால் கௌரவ ஸைனியம் திரும்பவும் தோற்றுப்போய் வெகுதூரம் ஓடிற்று. பீமசேனரின் ஸகாயத்தால் பாஞ்சாலராஜர்கள் அடித்து பத்து திக்குகளுக்கும் ஓடும் துரியோதனின் ஸைனியத்தைப் பார்த்து அதிரதனின் மகனான கர்ணன் கோபத்தால் ஜ்வலித்தான். அந்த கர்ணன் அமோகமாயுள்ள பரசுராமரை தேவதையாகக் கொண்ட எல்லா அஸ்திரங்களையும் நாசம் செய்யும் திவ்யமானதும் பதில் அஸ்திரமில்லாததுமான பார்கவாஸ்திரத்தை ஜபித்தான். அந்த அஸ்திரத்தை பீமசேனர் முதலான ஸைனியங்களில் ப்ரயோகம் செய்தான். க்ரூரமான அந்த பார்க்கவாஸ்திரம் பரசுராமரின் அனுக்ரஹத்தால் பீமசேனரை ஹிம்ஸிக்காமல் விட்டது. சிலர்கள் ஓடினார்கள். ஓடாமல் எதிர்த்து நின்றவர்கள் மய



லோகம் சென்றனர். அந்த பார்கவாஸ்திரம் ஓடுபவர்களைக் கொல்லாது. ஆகவே த்ருஷ்டத்யும்னனுடன் கூடிய பாஞ்சால ராஜர்களும் திரௌபதி குமாரர்களும் ஸாத்யகி முதலானவர்கள் எல்லோரும் ஓடிப்பிழைத்தார்கள். அர்ஜுனன் பதில் அஸ்திரமில்லாத அந்த பார்கவாஸ்திரத்தை கர்ணன் பிரயோகம் செய்ததைப் பார்த்து அவனிடம் வராமலேயே ஸ்ரீகிருஷ்ணரைப் பார்த்து இவ்வாறு பேசினான். ஹே கிருஷ்ணா! கர்ணனை விட்டுவிட்டு வேறு இடத்திற்கு போகிறேன். அவனிடம் சென்றால் இந்த பார்க்கவாஸ்திரத்தால் நான் பிழைக்கமாட்டேன். என்றிவ்வாறுசொன்ன அர்ஜுனனை விஸ்வகர்த்தாவான ஸ்ரீகிருஷ்ணர் கர்ணனிடம் போகாமல் வேறொரு வழியாய் பீமசேனரிடம் அழைத்து வந்தார். அப்பொழுது அர்ஜுனன் பீமசேனரைப் பார்த்து ஹே பீம! தர்மபுத்திரரைப் பார்க்க டேராவுக்குச் செல். அவருடைய க்ஷேமத்தை தெரிந்துகொள். கொல்லப்பட்டுப்போய் மிச்சம் மீதியுள்ள ஸம்ஸப்தகர்கள் என்னை யுத்தத்திற்கு அழைக்கின்றனர். அவர்களிடம் யுத்தம் செய்ய நான் போகிறேன், என்று சொன்னான். அதற்கு பீமசேனர் தன்னுடைய பாஹுபலம் அபரிமிதமானது என்று தெரிந்துகொண்டு இவ்வாறு பேசினார். நான் ஸம்ஸப்தகர்களுடனும் கௌரவர்களுடனும் கர்ணனுடனும் ஒருவனே இருந்து யுத்தம் செய்கிறேன். நீதான் தர்மபுத்திரரிடம் செல். நான் யுத்தத்தை விட்டு இந்த இடத்திலிருந்து போகமாட்டேன். பீமசேனர் யுத்தத்திலிருந்து பயந்தவர் என்று யாரும் என்னை சொல்லவேண்டாம். என்றிவ்வாறு பேசின தன் அதிகமான ப்ரீதிக்கு பாத்திரரான பீமசேனரை அனந்த சக்தி படைத்த ஸ்ரீகிருஷ்ணர் ப்ரீதிகொண்டு ஸிலாகித்தார்.

## அர்ஜுனன் தர்மபுத்திரரைக் கொல்லப்போனது.

அர்ஜுனனுடன் கூடிய ஸ்ரீகிருஷ்ணர் தர்மபுத்திரரைப் பார்க்க டேராவுக்குச்சென்றார். தர்மபுத்திரர் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனர்களைப் பார்த்துவிட்டு கர்ணன் அர்ஜுனனால் கொல்லப்பட்டு போனான் என்று நினைத்து அர்ஜுனனை ஸ்தோத்திரம் செய்தார். அதற்கு அர்ஜுனன் தர்மபுத்திரரை நமஸ்கரித்து இனிமேல் நான்

கர்ணனைக்கொல்லப்போகிறேன் என்று சொல்லவும், தர்மபுத்திரர் கோபத்தால் அர்ஜுனனை வெகுவாய் தூஷித்து, இந்த காண்டீவத்தை ஸ்ரீகிருஷ்ணரிடம் கொடு. அவர் ராதாபுத்ரனை கர்ணனை கொல்வார். அதில் சந்தேகமில்லை. அல்லது நீ யுத்தம் செய்யாமல் திரும்பிவிட்டால் பீமசேனனே கர்ணனைக்கொல்வான். ஹே அர்ஜுனா! நீ யாதொரு பிரயோஜனமின்றி குந்தியால் பெற்றெடுக்கப்பட்டாய். நீ நபும்ஸகன். பொய்யான ப்ரதிக்ஞையைச்செய்தவன். கர்ணனால் சங்கடப்பட்டுபோன நான் பீமசேனனின் ஸாமர்த்தியத்தால் பிழைத்தேன் என்று தர்மபுத்திரரால் சொல்லப்பட்ட அர்ஜுனன் உத்தமமான தன் கத்தியை உறையை விட்டெடுத்தான். ஸர்வக்ஞரான ஸ்ரீ கிருஷ்ணர் உடனே "அர்ஜுனா! இது என்ன?" என்று கேட்டார். அப்பொழுது அர்ஜுனன் கிருஷ்ணா என் காண்டீவ தனுஸ்ஸை பிறருக்கு கொடு என்று யார் சொல்கிறாரோ, அவரைக்கொல்வதாய் நான் பிரதிக்ஞை செய்திருக்கிறேன். அந்த காரணத்தைக்கொண்டு நான் தர்மபுத்திரரைக்கொல்லப்போகிறேன் என்று சொன்னான். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனைப்பார்த்து அர்ஜுனா ஸத்யம் பேசுவது புண்யத்திற்கு ஸாதனம்.. ஸத்யம் இன்னது என்பது அறிவது சாத்யமில்லை. எந்த வார்த்தை ஸாது ஜனங்களுக்கு மிக்க அதிகமாய் ஹிதமோ அதுதான் சத்யம் என்று சாஸ்திரத்தால் ஏற்படுத்தப்பட்ட நிச்சயம். தர்மத்தைச் செய்யும்படி சொல்வது புண்யத்திற்கு ஸாதனம். தர்மம் இதுதான் என்று அறிவது ஸாத்யமன்று. எது ஸாதுக்களுக்கு போஷகமோ அது எப்பொழுதும் தர்மமென்று சாஸ்திரத்தின் நிச்சயம். கௌசிகன் என்ற ஓர் பிராம்மணன் ஓரிடத்தில் மறைந்திருந்தான். அவன் அவ்வூர் ஜனங்கள் இவ்விடமிருக்கின்றனரென்று கள்வர்களிடம் சொல்லி கள்வர்களால் அந்த ஜனங்களை ஹிம்சிக்கச்செய்து நரகத்தையடைந்தான். ஆகவே யதார்த்தம் பேசுவதே ஸாத்யமாகாது. ஓர் வேடன் மாதாபிதாக்களுக்கு ஆகாரம் தருவதற்காக மிருகத்தைக்கொன்று ஸ்வர்க்கத்தை அடைந்தான். அந்த மிருகம் துர்புத்தி பிடித்த ஓர் அசுரன். உலகத்தை உபத்ரவம்செய்ய அந்த ரூபத்துடன் தபஸ் செய்துசெய்துகொண்டிருந்தான். ஆதலாலும் அந்த மிரு-



கத்தைக் கொல்வது தர்மமாயிற்று. ஆகையால் சாதுக்களுக்கு போஷகமாய் இருப்பது தர்மமென்று நிச்சயம் செய்துகொண்டு தர்மபுத்திரரைக் கொல்லாதே. ஆனால் நீ கொல்வதாய்ச்சொன்ன பிரதிக்ஞையையும் ஸத்யமாக்கிக்கொள். கொல்வதற்கு பதிலாய் தர்மபுத்திரரை தூஷணம் செய் என்றிவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணரால் சொல்லப்பட்ட அர்ஜுனன் கோபத்துடன் தர்மபுத்திரரை அநேக வகையாய் நிந்தித்தான். ஹே தர்மபுத்திரா! நீ கடுமையானவன், செய்த உபகாரத்தை நாசம் செய்தவன். வீரியமில்லாதவன். நிஷ்டூரமான வார்த்தையைப் பேசுகிறவன். உன்னால் எங்களுக்கு கொஞ்சமேனும் சுகமேயில்லை. இப்பேர்ப்பட்ட நீ என்னை நிந்திக்க அருகனல்ல. எந்த பீமசேனன் இப்பொழுதும் எல்லா வீரர்களுடனும் யுத்தம் செய்கிறானோ எங்களுக்கு எப்பொழுதும் கதியைத்தருபவனோ அப்பேர்ப்பட்ட பீமசேனன் என்னை நிந்திக்க அருகன். நீ கேவலம் நித்ரையை மட்டில் செய்பவன். இத்யாதி வார்த்தைகளை அர்ஜுனன் பேசிவிட்டு தன்னை மாய்த்துக்கொள்ள கத்தியை உறையைவிட்டு எடுத்தான். மறுபடியும் இது என்னவென்று ஸ்ரீகிருஷ்ணர் கேட்கவும் நான் குருநிந்தையைச்செய்ததால் அதற்கு பிராயசித்தமாய் என்னை வதம் செய்துகொள்ளுகிறேன். என்று தன் அபிப்பிராயத்தை அர்ஜுனன் சொன்னான். இதைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனை நிந்தித்து மறுபடியும் பேசினார். ஹே அர்ஜுனா! தன் புத்தியுடன் தேகத்தை தொலைத்துக்கொண்டால் மகாபாபம் வந்துசேரும். சரீரத்தால் தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் இவைகளை ஸம்பாதிப்பதால் சரீரத்தை தொலைத்துக்கொள்ளாதே. சரீரம் விடுவதற்கு பதிலாய் உன்னை ஸ்தோத்திரம் செய்துகொள். குருமார்களை, த்வம் நீ என்று ஏக வசனத்தால் நிந்திப்பதே அவர்களைக்கொல்வதாகும். என்று ஸ்ரீ கிருஷ்ணரால் சொல்லப்பட்ட அர்ஜுனன் கர்வத்துடன் தன் குணங்களை மிகவும் சிலாகித்துக்கொண்டான். குருநிந்தையும் ஆத்ம ஸ்தோத்திரமும் எப்பொழுதுமே தர்மத்திற்கு காரணமன்று. ஆயினும் ஸ்ரீ கிருஷ்ணர் தன் அபிப்பிராயத்தை அர்ஜுனனுக்கு வெளிப்படுத்தி அர்ஜுனனுக்கு லஜ்ஜையை உண்டுபண்ணி நான் தர்மமறிந்தவனென்று அர்ஜுன

னுக்கு இருந்த கர்வத்தைப்போக்கி எல்லா தோஷங்களும் தொலைந்து போவதற்காக 'எனக்கு முக்யதர்மத்தின் அறிவில்லை. எனக்கு ஸ்ரீகிருஷ்ணர் தான் கதி' என்று அர்ஜுனனுக்கு அபிப்பிராயத்தை உண்டாக்கி, ஜகத்பதியான ஸ்ரீகிருஷ்ணர், அர்ஜுனனை கொண்டு குருநிந்தை ஆத்மப்ரசம்சை முதலியவைகளை செய்வித்தார். பிறகு இந்த விஷயங்களை அறியாமல் தர்மபுத்திரர் மகா கோபங்கொண்டு இவ்வாறு பேசினர். ஹே அர்ஜுனா! பீமசேனன் அரசனாகட்டும். நீ யுவராஜாவாய் ஆகு. நீ என்னைக் கொல் அல்லது நான் பிரயோஜனமற்றிருப்பதால் நானும் வனத்திற்கு செல்கிறேன் என்று சொல்லி தர்மபுத்திரர் தன் படுக்கையைவிட்டு எழுந்தார். நியாமகரான ஸ்ரீ கிருஷ்ணர் தர்மபுத்திரரைப் பிடித்துக்கொண்டு எல்லா காரணங்களையும்சொல்லி சமாதானம் செய்தார். அர்ஜுனன் மன்னிப்புக்கேட்டுக்கொண் தர்மபுத்திரரின் பாதங்களில் விழுந்தான். தர்மபுத்திரர் அவனிடம் அதிகமான அன்பைக்கொண்டார். அண்ணன் தம்பிகளான தர்மபுத்திரர் அர்ஜுனன் இவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் அருளால் மரண ரூபமான ஆபத்தினின்றும் தப்பி மிக்க சந்தோஷமடைந்தவர்களாய் "ஹரியே! எங்களுக்கு ஹிதம் செய்கிறவர்களில் உனக்கு ஸமானம் யார் இருக்கிறார்." என்று பக்தியுடன் ஸர்வ ஸ்வாமியான ஸ்ரீகிருஷ்ணனை ஸ்தோத்திரம் செய்தார்கள். பிறகு அர்ஜுனன் அண்ணாவான தர்மபுத்திரரை நமஸ்கரித்து அவரால் தழுவப்பட்டவனாய் அன்புடன்செய்த ஆசீர்வாதத்தால் சந்தோஷமடைந்தவனாய் யுத்தத்திற்கு புறப்பட்டான். அப்பொழுது கர்ணனை ஜயிக்கும் விஷயத்தில் சந்தேகங்கொண்டு வேர்க்கும் சரீரமுள்ள அர்ஜுனனைப்பார்த்து ஸ்ரீகிருஷ்ணர் அவன் பின்னடி செய்த நிவாதகவச ஸம்ஹாரம் முதலான செயல்களைச்சொல்லி அவனிடமுள்ள தனுடைய ஆவேசத்தை அதிகமாய் வெளியாகும்படிச்செய்தார். அதனால் அர்ஜுனனுக்கு மிக்க ஸ்திரமான தைரியம் உண்டாயிற்று.

(தொடரும்.)



# விதவா விவாக கண்டனம்.

(முன் 117ம் பக்கம் தொடர்ச்சி.)

25 விதவா கபரீ பந்தோ பத்ருபந்தாய ஜாயதே।
சிரஸோ வபனம் தஸ்மாத் கார்யம் விதவயா ஸதா॥

(வசிஷ்டர்)

விதவையின் தலை முடியானது லோகாந்திரத்திலுள்ள பர்த்தரைக்கட்டி நரகத்தில் வீழ்த்தும் பாசமாகையால் விதவையானவுடன் அதை எடுத்து தலையை மொட்டையடித்துக்கொள்ளவேண்டும்.

[குறிப்பு:—இந்த ஸ்மிருதியை ஆதாரமாகக்கொண்டு பிராம்மண விதவைகள் தலையை மொட்டையடித்துக்கொள்வது அவசியமென்றும், ஸ்ரீ வைஷ்ணவர்களில் தென்கலையார் மட்டில் அவ்வாறு செய்து கொள்ளாதது பிசகென்றும், விபவ-ஞு புரட்டாசி மாதத்திய வேதாந்த தீபிகைப்பத்திரிகையில் மாயவரம் ஸ்ரீமான் நடேச சாஸ்திரியின் பெயரால் வெளிவந்த வியாஸத்திற்கு கண்டனமாக பெருமாள்கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய ஸ்வாமிகள் இயற்றிய ஸமயோசித சஞ்சிகையில் ஐந்தாம் பாகமாக வெளியான விதவாவபந வித்வம்ஸநம் என்னும் சிறுநூலில் கூறப்பட்டிருக்கும், இந்த ஸ்மிருதிக்கு விரோதமான பிரமாணங்களையும் யுக்திகளையும் ஆசாரத்தையும் விமரிசைசெய்து நம்மவர்களுக்குத்தகுந்த ஸமாதானத்தை அறிவிக்கும்படி, ஸ்ரீரங்கத்திலுள்ள எமது நண்பர் ஒருவர் வற்புறுத்தினதால் விதவா வபனம் அவசியம் என்பதைப்பற்றி இந்த நிரூபத்தின் முடிவில் தகுந்த பிரமாணங்களுடன் காட்டப்படுமென்பதை வாசகர்கள் அறிவார்களாக. ப-ர்]

ப்ராகிருதத்தில் மேற்கண்ட வசிஷ்டரின்வாக்யத்தால் மொட்டையடித்துக்கொண்ட கைம்பெண் மணப்பெண்ணாக எப்படி ஆகக்கூடும் என்று கேள்வியும் உண்டாகலாம். விதவை என்ற பதத்திற்கே கேசமில்லாத தோல் தலையுள்ளவள் என்று வியாகரணத்தின்படி ஏற்படுவதாய் யாஸ்கபாஷியம் அறிவிக்கிறது.

26 ம்ருதே ஸப்தபதே பர்த்து: வியோகோ யதிஜாயதே।
நதேயா புனரன்யஸ்மை கலௌ கன்யா மனீஷிபி:॥

(பாப்ரவ்யர்)

ஸப்தபதியான பின்பு பர்த்தாவின் மரணமேற்பட்டுவிட்டால் அந்த கன்னிகையை கலியுகத்தில் புத்திமான்கள் அன்னியனுக்கு புனர்விவாகம் செய்துவைக்கலாகாது. இவ்வாறு கலியுகத்தில் செய்யலாகாதென்பதால் யுகாந்திரத்தில் செய்யலாமோவென்று சந்தேகிக்ககூடாது. கலியுகம் என்று சொன்னதால் விசேஷமாய் இக்கலியிலும் கூடாதென்று தாத்பரியமாகும். இந்த ஸ்ம்ருதி பிரசித்தமாயில்லையென்று ஹிந்து பத்திரிகை மூலமாய் நான் செய்து வந்த விதவா விவாக வாத காலத்தில் மதராஸ் பார்த்தசாரதி என்பவர் சொன்னார். ஸ்மிருதி கிரந்தங்களைப் பார்க்காதவர்களுக்கு எதுவும் அபிரசித்தமாகவே தோன்றும். இந்த விதவா விவாகத்தை இவ்வளவு ஸ்பஷ்டமாய் எதிர்க்கும் ஸ்மிருதிதென்பட்டிருக்கிறதே என்ற துக்கம் தான் அவ்வாறு அவரைத் சொல்லத் தூண்டியது. நாம் அறியமுடிந்தவரையில் இந்த பாப்ரவ்ய ஸ்மிருதியை ஸ்மிருதி நிபந்தம் செய்தவர்களில் ஐந்துபேர்கள் தம் நூல்களில் உதாஹரணம் செய்திருக்கின்றனர்.

27 ஏகாஹாரஸ்ஸதா கார்ய: நத்விதீயஸ்ச கதாசன।
யவான்னேன பலாஹாரை: சாகா ஹாரை: பயோவ்ரதை:।
ப்ராணயாத்ராம் ப்ரகுர்வீத யாவத் ப்ராண: ஸ்வயம் வ்ரஜேத்।
பர்யங்க சாயினீ நாரீ விதவா பாதயேத் பதிம்।
தஸ்மாத் பூசயனம் கார்யம் பதி ஸௌக்ய ஸமீஹயா॥

(வசிஷ்டர்)

விதவையானவள் ஒரே தடவைதான் போஜனம் செய்யவேண்டும். எப்பவும் இரண்டாவது தடவை அவள் போஜனம் செய்யலாகாது. நெல்லரிசி பழங்கள் கிழங்குகள் கீரை தண்ணீர் இவைகள் தான் அவளுடைய ஆகாரங்கள். இவைகளையும் வேண்டுமளவு அவள் புஜிக்காமல் அவளுடைய ப்ராண தாரணத்திற்கு மட்டில் போதுமான அளவுதான் புஜிக்கவேண்டும். அவள் வெறும் தரையில்தான் படுக்கவேண்டும். அப்போதுதான் அவளுடைய பதியானவன் நல்ல லோகத்தை அடைந்திருப்பான். ஏனெனில் கட்டிலில் விதவை படுத்தால் அவளுடைய பதியை அவள் நரகத்தில் வீழ்த்துவாள். என்றிவ்வாறு விதவையின் போஜனத்திற்கும் படுக்கைக்கும் நிர்பந்தமிருக்கும்போது மறுமணம் செய்து காமசுகத்தை அனுபவிக்க அனுமதி இருக்குமாவென்பதை யோசிக்க வேண்டும்.



28 யாவஜ்ஜீவம் ப்ரேதபத்யுதக ஸ்பர்சம் ஏகபுக்தமசய்யாம்:।
பிரம்மசர்யம் க்ஷாரலவண மதுமாம்ஸவர்ஜம் ச॥

(ஆபஸ்தம்பர்)

விதவையானவள் தான் பிழைத்திருக்கும் வரையில் இறந்துபோன தன் பர்த்தாவை உத்தேசித்து தர்ப்பணம் செய்யவேண்டும். ஒருவேளைதான் போஜனம் செய்யவேண்டும். படுக்கையில் படுக்கக் கூடாது. பிரம்மசரிய விரதத்தையே ஆசரிக்கவேண்டும். உப்பு தேன் மாமிசம் இவைகளைச்சேர்த்து கொள்ளலாகாது என்கிறார். இந்த அபிப்பிராயத்தை வெளியிட்ட ஆபஸ்தம்பர் ஓர் தர்மசூத்திரகாரர். இவருடைய சூத்திரங்களை பலவகை த்விஜர்களும் பின்பற்றி வருகின்றனர்.

29 க்ஞாத்வா விப்ரஸ்ஸம்ருத்கத்வா விதவாம் காமபீடித:।
நதஸ்ய நிஷ்க்ருதி: த்ருஷ்டா காரீஷகமனாத்ருதே॥

(பராசரர்)

விதவை என்றறிந்து ப்ராம்மணன் காமாதுரத்தால் அவளிடம் ஒரு தடவை ஸங்கமம் செய்தாலும் அந்த பிராம்மணனுடைய பாபத்திற்கு பரிகாரமே இல்லை. முட்டைகளைக்கொண்டு அவனுடைய சரீரம் கொளுத்தப்படவேண்டுமேயல்லாமல் அவனுடைய பாபம் நீங்க வேறு வழியில்லை. விதவையிடம் ஸங்கமம் செய்யலாகாதென்பதை தாம் ஒப்புக்கொள்வதாயும் ஆனால் அவள் மறுவிவாகம் செய்துகொண்டால் சுகானுபவம் பெறலாம் என்றும் சொல்வது பொருந்தாது. புனர்விவாகம் செய்துகொள்வதால் முதல்தடவை ஏற்பட்ட வைதவ்யம் நீங்குகிறதென்று சொல்லும் பிரமாண வசனங்கள் யாதோ புலப்படவில்லை.

30 யோ விப்ரோ விதவாம் ஸாத்வீம் கச்சேத ஆகர்ப்பதாரணாத்।
ஸ சண்டாள ஸமோக்ஞேயோ பதிதஸ்யான் ந ஸம்சய:॥

(யமஸ்ம்ருதி)

எந்த பிராம்மணன் ஸாதுவான ஓர் விதவையை மோகித்து அவளை கெடுத்து அவள் கர்பம் தரிக்கும் வரையில் அவளிடம் சென்று வந்தால் அவன் சண்டாளனுக்கு ஸமானன் என்று கருதப்படவேண்டும். அவன் மகாபாபத்தைச் செய்தவனாய் ஆவான். இதில் சந்தேகமில்லை.

31 விதவா ஆயுஸ் ச்ரியம் ஹந்தி ஸர்வம் ஹந்தி பாபகம்॥

(மார்க்கண்டேயர்)

விதவையிடம் பிரவேசித்தால் அவள் பிரவேசித்தவனுடைய ஆயுஸ்ஸையும் ஐசுவரியத்தையும் தொலைத்துவிடுகிறாள். பரஸ்திரீயிடம் பிரவேசித்தால் அவள் அந்த மனுஷ்யனுடைய எல்லா சம்பத்துக்களையும் நாசமாக்கி விடுவாள்.

32 தஸ்மின் குலக்ரமாயாதம் ஆசாரம் வாசரேத்புத:।
ஸகரியான் மகாபாஹோ ஸர்வசாஸ்திரோததபி॥

(மகாபாரதம் ஆதிபர்வம்)

ஞானியானவன் குலக்ரமமாய் நடந்தேறிவரும் ஆசாரத்தைத் தான் அனுஷ்டிக்கவேண்டும். ஹே மகாபாகுவே! எல்லா சாஸ்திரங்களும் சேர்ந்து சொல்லியவைகளைக்காட்டிலும் அந்த ஆசாரம்தான் சிரேஷ்டம் என்று மகாபாரதம் ஆதிபர்வத்தில் ஸுமந்துவின் வாக்யம் இருந்துவருகிறது. மகாபாரதம், இதிஹாஸ புராண: பஞ்சமோ வேதானாம் வேத: என்று ஐந்தாவது வேதமாக கூறப்பட்டிருக்கிறது. புனர் விவாகம் என்பது நவீன சீர்திருத்தக்காரர்களின் ஏற்பாடென்றும் இதுவரை அனுஷ்டானத்தில் இல்லை என்றும் விளக்கிக்காட்டியிருப்பதால் இது ஸ்பஷ்டமான பாதகமான பிரமாணமாகும்.

33 அத்ய ப்ரபிருதிமர்யாதா மயா லோகே ப்ரதிஷ்டிதா।
ஏக ஏவ பதிர்நார்யா: யாவஜ்ஜீவம் பராயணம்॥
மிருதே ஜீவதிவாதஸ்மின் நாபரம் ப்ராப்னுயாத் நரம்।
அபிகம்ய ப்ரம் நாரீ பதிஷ்யதி ந ஸம்சய:॥

(ஆதிபர்வம்)

இன்று முதல் என்னால் இந்த விவஸ்தை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு ஸ்திரீக்கு அவள் சாகுமளவும் ஒரே புருஷன் தானுண்டு. அவன் பிழைத்திருக்கும்போதும் சரிதான், இறந்துபோன பின்பும் சரிதான், அவனுடைய பத்னி வேறொரு புருஷனை அடையலாகாது. அப்படி வேறொருவனை அடைந்தால் அவள் மகாபாபம் செய்தவளாய் ஆவாள். இதில் சந்தேகமில்லை என்று தீர்க்கதமஸ் என்ற மகரிஷி சொல்லியுள்ளார்.

34 ஏகஸ்ய பஹ்வ்ய: விஹிதா: மஹிஷ்ய: குருநந்தன॥
நைகஸ்யா: பஹவ: பும்ஸ: ச்ரூயந்தே பதய: க்வசித்॥

(ஆதிபர்வம்)

ஒரு புருஷனுக்கு பத்னிகள் அநேகம் பேர் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு ஸ்திரீக்கு புருஷர்கள் பலர் உண்டென்று எங்கும் சொல்லப்படவுமில்லை; கேட்கப்படவுமில்லை.

(தொடரும்.)



ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமத்வ விஜயம்.

## பத்தாவது ஸர்க்கம்.

(முன் 146ம் பக்கம் தொடர்ச்சி.)

### பலவகை சரித்திரங்கள்.

இந்த ஸர்க்கம் பலவகை விருத்தமுள்ள சுலோகங்களால் சொல்லப்படுகிறது:—

1. (ஆர்யா விருத்தம்) இரண்டாம் முறை பதரிகாசிரமத்திலிருந்து உடுபிக்கு திரும்பி வந்தபின் எவ்வாறு மாதவனென்ற வஸந்தருதுவின் குணங்களாகிய மல்லிகை சம்பகம் முதலிய பலவகை புஷ்பங்கள் மலர்தல் குயில்கள் சப்தித்தல் முதலியவைகளை ஸாதிக்கிறவனும் வழிப்போக்கர்களை வெய்யிலால் வருத்துகிறவனுமான சூரியன், சுக்கிர கிரஹத்தின் வீடாகிய விருஷபராசியை அடைந்து அலங்கரிப்பானோ, அவ்வாறு மாதவனென்ற ஸ்ரீ விஷ்ணுவின் க்ஞானனந்தாதி கல்யாண குணங்களை ப்ரதிவாதிகளை ஜயித்து ஸ்தாபிப்பவரும், வழியிலுள்ள பாபிகளான மாயாவாதிகளை வருத்துகிறவருமான ஸ்ரீ மத்வாசாரியாராகிய சூரியன் பிருகுரிஷியின் வம்சத்து திலகரான பரசுராமரால் சிருஷ்டியடைந்த சோழநாட்டை சீக்கிரமே அடைந்து அலங்கரித்தார். 2. (கீதி விருத்தம்) அந்த சோழநாட்டிலுள்ள மகாஜனங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் பதரிகாசிரமம் போய்வந்தது முதலிய மகிமைகளைக்கேட்டு மிகுந்த ஆச்சரியமுள்ளவர்களாய் அவருடைய சரித்திரத்தை விஸ்தாரமாய் கேட்கவிரும்பி சிலர் பிரசினம்செய்ய, பூர்ணப்ரக்ஞரான ஸ்ரீமத்வாசாரியாரின் சிஷ்யரொருவர், சந்தோஷமிகுதியால் தலைவணங்கிய நல்ல மனதுடன் கூடிய ஜனக்கும்பலுக்கு பலவகை விருத்தாந்தங்களுடன் கூடியதும் நாயகரான ஸ்ரீமத்வாசாரியாரின் புகழ்ச்சியுடன் கூடியதுமான உபன்யாஸத்தை, பலவகை விருத்தங்களுடன் கூடியதும் நாயகனின் ஸ்தோத்திரமும் கூடியதுமான

ஓர் இனிய காவ்யம்போல் சொன்னார். 3. (ஸுந்தரீ விருத்தம்) ஜனங்களே! நானும் சரியே; நீங்களும் சரியே, மற்றெவர்களும் சரியே, எங்களுடைய நூறு வருஷம் ஆயுஸ் மட்டிலல்ல தேவர்களின் நூறு வருஷம் ஆயுஸ் பூராவும், எல்லா லோகங்களிலும் அத்யத்புதமான ஸ்ரீமத்வாசாரியாரின் சரித்திரத்தைச் சொன்னாலும் ஸம்பூர்ணமாய்ச் சொல்லிமுடித்ததாய் ஆகாது. ஆயினும் அதைக்கேட்க ஆசைப்படும் ஜனங்களாகிய உங்களுக்கு அந்த சரித்திரத்தில் சிலதை மட்டில் நான் சொல்கிறேன்.

## குளம் வெட்டச்செய்தது.

4. (சந்திரிகா விருத்தம்) ஸ்ரீமத்வாசாரியார் பதரிகாசிரமத்துக்கு போகும் வழியில் ஈசுவரதேவன் என்ற அரசனொருவன், வழிப்போக்கர்களை எல்லாம் கட்டி நிர்பந்தித்து அவர்களின் கையில் மண்வெட்டி முதலிய ஆயுதங்களைக்கொடுத்து ஓர் குளத்தை வெட்டும்படி செய்துவர, அந்த வழியாய் வந்த ஸ்ரீமத்வாசாரியாரையும் அவ்வாறே வெட்டும்படி பிரேரிபிக்க, அந்த ராஜனைப் பார்த்து, வெட்டத்தெரியாத எங்களுக்கு நீர் சுயம் மண்வெட்டியால் வெட்டிக்காண்பித்து சொல்லிக்கொடும் என்று ஆசாரியாள் சொன்னார். 5. (பத்யாவக்ர விருத்தம்) அந்த ஈசுவரதேவன், குளம் வெட்டுகிற மாதிரியை தான் வெட்டிக்காண்பித்து சொல்லிக்கொடுக்க அவ்வாறு வெட்டத்தொடங்க, மகத்தான ப்ரக்ஞையுள்ள ஸ்ரீமத்வாசாரியாரின் மகாமகிமையால் சுயப்ரக்ஞையன்றி அஸ்வதந்திரனாய் ஆகி அன்று மாலைவரையில் வெட்டிக்கொண்டே இருந்தானேயன்றி வெட்டுவதை நிறுத்தி ஆசாரியாரை பிரேரிக்கவில்லை.

6. நாநேநாநேநேநாநேநோநூநேநநுநுந்நா:
நாநா நாநோ நூநம் நாநே நாநூ நநா நுந்ந:||
(ஏகாக்ஷரம் உபகிதி விருத்தம்)

பதச்சேதம்:—
ந, அநேந, அநேநேந, அநேநோநூநேந, நநு, நுந்நா:|
நாநாநா:, நோ, நூநம், நாநேநாநூநநா, அநுந்ந:||

அன்வயம்:—
அநேநோநூநேந அநேநேந அநேந நாநாநா:|
நநுந்நா: இதிநோநநு நாநேநாநூநநா நூநம் அநுந்ந:||



அர்த்தம்:—
அநேநோநூநேந (அநேந:) ஏனஸ்ஸாகிய தோஷம் பாபமில்லாதவரும் (அநூந:) ஊனமில்லாதவரும் அதாவது ஸர்வ ஜீவோத்தமரும் அநேநேந அநங்களாகிய பஞ்சப்ராணங்களின் (இனர்) அதிபதியான முக்யப்ராணரின் அவதாரமுமான அநேந ஸ்ரீமத்வாசாரியாரால் நாநாநா: (நாநா) அநேக வகையான (ஆநா:) பிராணிகள் அதாவது சேதனர்கள் நநுந்நா இதி ப்ரேரிக்கப்படவில்லை என்று நோநநு இல்லவே இல்லை. ஆனால் நாநேநாநூநநா: (நாநா) தாரதம்யத்துடன்கூடிய பலவகை ஜீவர்களுக்கு (இநா:) ஈசுவரர்களான பிரம்மாதிகளில் (அநூந) குறைந்தவரில்லாத பூர்ண (நா) புருஷரான லக்ஷ்மீபதி நாராயணன் வாயுபகவானால் நூநம் நிச்சயமாய் அநுந்ந: பிரேரிக்கப்படுவதில்லை.

தாத்பரியம்:—
ஈசுவரதேவன் வெட்டிக்காண்பிப்பதை நிறுத்தமுடியாமல் ஏன் வெட்டிக்கொண்டே இருக்கநேரிட்டதென்றால் தோஷமற்றவரும் ஸர்வ ஜீவோத்தமருமான முக்யப்ராணரின் அவதாரமான ஸ்ரீமத்வாசாரியாரால் அவ்வரசன் அப்படிச்செய்ய பிரேரிக்கப்பட்டான். உலகிலுள்ள எல்லா சேதனர்களும் அவரால்தான் எல்லா காரியமும் செய்ய தூண்டப்படுகிறார்கள். இதில் சந்தேகமில்லை. இதா எல்லா சேதனர்களை பிரேரிப்பவர் வாயு பகவான் தான். ஆனால் பிரம்மாதி தேவோத்தமர்களில் பூர்ண புருஷரான லக்ஷ்மீபதி ஸ்ரீநாராயணனை மட்டில் பிரேரிப்பவர் அவரல்ல. அவர் ஸ்வதந்திரன். 7. (தோடக விருத்தம்) எந்த முக்யப்ராணரை ஸ்மரிக்கும் ஸாது ஜனங்களுக்கு ஸம்ஸாரத்திலுண்டான ஸம்பூர்ணமான துக்க சமுத்திரம் நாசமடைகிறதோ, யமன் ஆதிசேஷன் பரமசிவன் முதலான ஜகதீசுவரர்கள் எந்த வாயு பகவானின் ஸ்தோத்திரத்தில் ஈடுபட்டவர்களாய்விளங்குகின்றனரோ, அப்பேர்ப்பட்ட மகாத்மியமுள்ள முக்யப்ராணரின் அவதாரமான ஸ்ரீமத்வாசாரியார் விஷயத்தில் ஈசுவரதேவன் ஸ்வாதந்திரியமின்றி பரவசனாய் பூமியை வெட்டிக்கொண்டே இருந்தது ஆச்சரியமன்று. ஜகதீசுவரர்களான சேஷருத்திராதிகளே வாயுபகவானுடைய அதீனர்களாயிருக்கையில் ஈசுவரதேவன் அவருக்கு அதீனமானது என்ன ஆச்சரியம்.

## கங்கையை நீந்தித் தாண்டியது.

8. (ஸ்ரக்விணீ விருத்தம்) வடதேசத்துக்குச் செல்லும் பொழுது வழியிலுள்ள மகாஜனங்களால் பூஜிக்கப்படும் விஷ்ணு பக்தர்களில் முதல்வராயும், க்ஞான பூர்ணராயுமுள்ள ஸ்ரீமத்வா சாரியார், ஒருசமயம் தம்முடன் கூடவந்த ஆப்தர்களான தம் சிஷ்யர்களுடன் சூழ்ந்தவராய், சத்ருக்கள் வருவார்கள் என்னும் சந்தேகத்தால் எல்லா படகுகள் எடுக்கப்பட்டதாயுள்ள ஓர் கங்கைக்கரைக்கு வந்து சேர்ந்தார். 9. (புஜங்கப்ரயாத விருத்தம்) கங்கையைத்தாண்ட படகு இல்லாதிருப்பதைக்கண்டதும், சிஷ்யர்களிடம் கருணையுள்ள ஸ்ரீமத்வாசாரியார் சுயம்தான் எல்லா சிஷ்யர்களுக்கும் மூலபூதமான ஆசிரயமாயிருந்து, பின்னேயுள்ள எல்லா சிஷ்யர்களையும் அவரவர்கள் முன்னேயிருப்பவர்களை இறுகப்பிடித்து ஆசிரயிக்கும்படி தன் வார்த்தையால் சொல்லி, படகு அன்னியில் தாண்டமுடியாததான கங்கையில், ஜலத்தில் இறங்கிவரவேண்டாமென்று தடுக்கும் அக்கரையிலுள்ள ராஜ படர்களை அலக்ஷியம்செய்து, எப்படி ஒருவராலும்தாண்டமுடியாத ஸம்சாரத்தை சுயம் மோக்ஷத்திற்கு விரோதிகளாயுள்ள காம க்ரோதாதி சத்ருக்களை அலக்ஷியம்செய்து, க்ரமமாய் தம் உத்தமர்களிடம் பக்திகொண்ட, தம்மிடம் மூலாசிரயமாகவுள்ள ஸாதுக்களை தாண்டிவைப்பாரோ, அப்படித்தாண்டி வைத்தார். 10. (இந்துவதனா விருத்தம்) கைமாறுபோட்டு நீந்திக்கொண்டே கங்கையைக் கடக்கும் சத்ருக்களின் நண்பர்களான "இந்த ஜனங்களை கரை ஏறவொட்டாதென்று சொல்லி தடைசெய்யுங்கள். நாம் எவ்வளவு சொல்லியும் அவர்கள் திரும்பியும் நேராக இங்கு நீந்திவருவதால், அவர்கள் கரையேறுவதற்கு முன்பே இவர்களைக் கொல்லுங்கள்," என்று மிகுந்த பரபரப்புடன் கூவுகிறவர்களாயும், ஜலத்தில்தங்கள் நேராக குதிக்கிறவர்களுமான மகம்மதிய ராஜபுருஷர்களை, ஸ்ரீமத்வாசாரியார் அவர்களுக்கேற்ற பார்ஸி பாஷையில் உரக்க இவ்வாறு பேசினர். 11. (மஞ்ஜுபாஷிணி விருத்தம்) விவேக சூன்யர்களான சிப்பாய்களே! துணிவுடன் பயங்கரமான கங்கையின் ஜலத்தில் குதிக்காதேயுங்கள். நீங்கள் எங்களைவிட அதிக ஜனத்தொகை கொண்டிப்பதால் குறைந்த ஜனங்கான எங்களால் உங்களுக்கு பயம் எப்படி வரும். இதை அறிந்துகொள்ளாததால் நீங்கள் அவிவேகிகள் தான். ஆகையால் ஜலத்தில் விழாதேயுங்கள். உங்களுடைய எஜமானரான அரசனைப் பார்க்கவிரும்பித் தான் வருகிறோம். அப்படியிருக்க எங்களுடன் விரோதம்செய்ய ஏன் விரும்புகிறீர்கள்?

(தொடரும்.)

# சங்கரலீலா விலாஸம்.

---

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M.A., எழுதுவதாவது:—

ஏகாதசி சிராத்தம்.

(முன் 141ம் பக்கம் தொடர்ச்சி.)

அச்சாகியிருக்கும் வராஹபுராணம் சாதுர்மாஸ்ய மகாத்மியம் நான்காவது அத்யாயத்தில் சொல்லப்படுவதாவது:—

ஸூதகாதௌ யதா ச்ராத்தம் ஸூதகாந்தே விதீயதே ॥ ததைவ ஏகாதசீ ச்ராத்தம் விதத்யாத் த்வாதசீதினே ॥ ப்ரேததாஹேது ஸம்ப்ராப்தே ஜுஹுயாத்வை க்ருதாஹுதிம் । ந சரும் ஸ்நபயேத்தத்ர ப்ரேத பிண்டம் ச ஸக்துபி:। விதத்த த்விதீயேன்ஹி தத: ச்ராத்தம் ஸமாசரேத்। ஏகாதச்யாமயம் தர்ம: நாதர்ம: கர்ஹிசித்பவேத்॥

இதன் பொருள்.— ஆசௌசத்தில் ஏற்பட்டுள்ள சிராத்தம் ஆசௌசம் நிவிருத்தியான பின்பு செய்யப்படுவதுபோல் ஏகாதசியில் ஏற்பட்ட சிரார்த்தம் துவாதசியன்று தான் செய்யப்படவேண்டும். அன்று ஒருவன் இறந்து அக்னி ஸம்ஸ்காரம் செய்யப்படவேண்டியிருந்தால் நெய்யால்தான் ஆஹுதி கொடுக்கவேண்டுமே ஒழிய சருவை சமைக்கலாகாது. பிரேதத்திற்கு மாவால் செய்த பிண்டத்தைக் கொடுக்கப்படவேண்டும். மறுநாள்தான் ச்ராத்தம் செய்யப்படவேண்டும். ஏகாதசியில் செய்யத்தகும் இதுதான் தர்மமாகும், ஒருக்காலும் இது அதர்மமாகாது.

ஸ்காந்த புராணம் உத்தரகாண்டத்திலேயும் மாதா பித்ரோ: தினே ப்ராப்தே விஷ்ணோ ரஹனி வைத்விஜ । தத்ர ச்ராத்தம் ந கர்த்தவ்யம் த்வாதச்யாம் காரயேத்புத:। தததிக்ரமணே தோஷோ மஹான்யோ ரிஷிபி: ஸ்மிருத:। ததன்ய திவஸே விப்ரா: தஸ்மாத் தத்திவஸம் த்யஜேத்। தத்ரைவ யதிமோஹன குர்யாத் ச்ராத்தாதிகம் தத:। ரௌரவம் நரகம் யாதி யாவத் ஆபூத ஸம்ப்லவம்:॥

ஏகாதசியன்று தாய்தந்தையர்களின் மரணதினம் சம்பவித்தால் அன்று சிராத்தம் செய்யலாகாது, தெரிந்தவன் த்வாதசியன்றுதான் செய்யவேண்டும். சிராத்தம் செய்யாமலிருந்தால் மகாபாதகம் உண்

டாகுமென்றும் மகரிஷிகள் சொன்னது ஏகாதசியைத்தவிர இதர நாட்களில் செய்யாமல் விட்டுவிட்டால்தான், ஆகையால் ஏகாதசியில் ஸ்ராத்தம்செய்யாமல் விட்டுவிடவேண்டும். அன்று ஸ்ராத்தம் செய்யாமல் விடலாகாதென்று பிரமம்கொண்டு ஏகாதசி தினத்தன்றே ஸ்ராத்தாதிகளை செய்யும் பக்ஷத்தில் ஓர் பிரம்ம கல்பம் வரையில் அவன் ரௌரவமென்னும் நரகத்தையே அடைவான். ஆன்ஹிக கௌஸ்துபம் முதலான பல நூல்களில் வேத வாக்யங்களை உதாஹரித்து ஏகாதசி ச்ராத்த நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வேதவாக்யங்கள் அநேக ஸ்மிருதி வாக்யங்கள் இவைகளை மற்றொரு சந்தர்ப்பத்தில் உபயோகிக்க ரிசர்வ் செய்திருக்கிறேன். ப்ரகிருதத்தில் மேற்கண்ட பிரமாணங்களே போதும். ஆனால் இதைக்கொண்டு மாத்வரான ஹாநி ஆசாரியார் மார்தட்டிக் கொள்ள காரணமில்லை என்று உறுதியாய்ச் சொல்வேன். இது வைஷ்ணவர்களுக்காக ப்ரஸித்தமானது. இதில் ஸந்தேகமே இல்லை. மகாலட்சுமி முதல் ஹாநீ ஆசாரியார் வரையிலுள்ள எல்லா வைஷ்ணவர்களுக்கும் ஏகாதசியன்று வயிற்றுக்கு ஒன்றுமில்லை தான். ச்ராத்தம் நேரிட்டாலும் சரியே கண் சுற்றிவந்தாலும் சரியே அவ்வளவு தான். கலி விப்ரஸித்தி முதலான அஸுரர்கள் ஏகாதசி போஜனத்தில் பிரியமுள்ளவர்கள். அன்றுவெங்காயம் முருங்கக்காய் முதலான சாஸ்திர நிஷித்தமான பதார்த்தங்களை ஸ்பெஷலாய் சேர்த்து போஜனம்செய்து ஆனந்தமாயிருக்க பிரியப்படுவார்கள். மேலும் ஏகாதசியன்று ஆகாரம் சாப்பிடலாகாது என்பது வேதத்தில் சொல்லப்பட்டிருப்பதாய் ஸ்மார்த்தர்கள் வைஷ்ணவர்கள் ஆகிய இரு பக்ஷத்தாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உபவாஸம் செய்யமுடியாமலிருந்துவரும் விஷயம் வேறு. உபவாஸம் செய்யவேண்டுமென்பதை அவர்கள் ஆக்ஷேபிப்பதில்லை. அப்படியிருக்க அன்று ஸ்ராத்தம் செய்யவேண்டுமென்று ச்ராத்தம் செய்வது எவ்வாறு ஒவ்வும்? அன்று நிமந்த்ரணம் செய்யும் ப்ராம்மணர்களும் ஸ்ராத்தத்தை செய்பவரும் அவருடைய பந்துக்களும் போஜனம் செய்தால், அன்று ஏகாதசியை இவர்கள் நாசம் செய்ததாய் ஆகவில்லையா? பித்ருஸ்ராத்தம் ஏகாதசியன்று சம்பவித்தாலும் அன்றே ச்ராத்தம் செய்து போஜனம் செய்பவருக்கு பாபமில்லை என்று சொல்லும் வேதவாக்யமோ அல்லது விருத்தமாயில்லாத ஸ்மிருதி வசனங்களோ இருந்தால், சாம்ப சாஸ்திரிகள் காண்பிக்கலாம். அப்படியிருப்பதாக இதுவரையில் யாரும் காண்பிக்கவில்லை. நான் பார்த்தவரையில் அப்படியிருப்பதாயும் தெரியவுமில்லை. ஆனால் நான் இதைக்கேட்டபின் சாஸ்திரிகள் சுமார் 50 வாக்யங்களைக் கல்பனை செய்யக்கூடும்.



ஆதலால் ஏகாதசியன்று போஜனம் செய்யலாகாதென்றும் ச்ராத்தம் சம்பவித்தாலும் அதையும் விட்டு மறுநாள்தான் செய்யப்படவேண்டுமென்றும், ஆசௌசம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் ச்ராத்தத்தைவிட்டு அது நிவிருத்தியானபின் ச்ராத்தம் செய்யப்படுவதுபோல் ஏகாதசியன்று ஸ்ராத்தத்தை விட்டு த்வாதசியன்று செய்வதால் எந்த பாபமுமில்லை என்றும், ஏகாதசியன்று செய்வதால்தான் மகாபாதகம்வருமென்றும், ஸ்பஷ்டமான பிரமாணங்கள் காணப்படுவதாலும், ஏகாதசியன்று ஸ்ராத்தம் சம்பவித்தால் உபவாஸத்தைவிட்டு அன்றே ஸ்ராத்தம் செய்யப்படவேண்டும் என்று விதிக்கும் பிரமாணம் காணப்படாததாலும், ஏகாதசியன்று உபவாஸம் அவசியம் என்பதை இருதரத்தாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாலும், ஏகாதசியன்று ஸ்ராத்தத்தை செய்யாமலிருப்பது ப்ராமாணிகமென்று ஸித்தமாகிறது.

(தொடரும்.)

## ஸ்ரீ அநந்த சயனத்தின் மகாத்மியம்.

ஸ்ரீ அநந்தசயன மகாத்மியம் பிரம்மாண்ட புராணத்தில் பதினொன்று அத்யாயங்களால் சொல்லப்பட்டிருக்கிறது. கிருதயுகத்தில் இது நரஸிம்ஹ க்ஷேத்திரமாக இருந்தது. ஹிரண்யனைக் கொன்ற ஸ்ரீ நரஸிம்ஹரின் கோயில் ஸ்ரீபத்மநாபரின் பக்கத்தில் இருந்துவருகிறது. சுவேதத்வீபத்தில்போல் நாராயணன் இங்கு பத்மநாபனாய் ஆதிசேஷனின்மீது தக்ஷிண சமுத்ரக்கரையில் படுத்திருக்கிறார். பஸ்சிம சமுத்திரத்திலுள்ள துவாரகைபோல் பகவத் சந்நிதானம் விசேஷமாய் இதில் இருக்கிறதென்று பிண்டாரக க்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீசைலம், வெங்கடாசலம், ஸாலக்ராம க்ஷேத்திரம், கங்கா கோதாவரி யமுனா நதிகளின் தீரங்கள் இவைகளினின்றும் மகரிஷிகள் கிளம்பிவந்து வசித்து வருவதாய் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சொல்லுக்கேற்ப கசியபதீர்த்தம், பரத்வாஜ தீர்த்தம், அத்ரி தீர்த்தம், விச்வாமித்ர தீர்த்தம்,

கௌதம தீர்த்தம், ஜமதக்னி தீர்த்தம், வசிஷ்ட தீர்த்தம், மரீசு ரிஷியின் தீர்த்தம், அங்கிரஸ் தீர்த்தம், புலஸ்திய தீர்த்தம், புலக தீர்த்தம், க்ரது தீர்த்தம், ப்ருகு தீர்த்தம், கூர்மதீர்த்தம், நரஸிம்ஹ தீர்த்தம், பயநிவாரண தீர்த்தம், பஞ்சபாண்டவ தீர்த்தம், பரசுராம தீர்த்தம், துர்க்கா தீர்த்தம், பகவதி தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், கதாதீர்த்தம், வேணு தீர்த்தம் என்று பெயருள்ள புண்யதீர்த்தங்கள் விளங்கிவருவது குறிப்பிடத்தகுந்தது. சந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம், யம தீர்த்தம், நிருதி தீர்த்தம் வருண தீர்த்தம் வாயவ்ய தீர்த்தம், குபேர தீர்த்தம், ஈசான தீர்த்தம் என்று அஷ்டதிக்பாலகர்களின் தீர்த்தங்களும் சுற்றிலும் இருக்கின்றன. மத்ஸ்ய ரூபத்துடனுள்ள பகவானிடமிருந்து வேதத்தை தெரிந்துகொண்டு வரும் தேவர்கள் வசிக்கும் சங்கிராங்கிதமான பலவகை மத்ஸ்யங்களைக்கொண்ட மத்ஸ்ய தீர்த்தமும், வாராஹரின் வேர்வையாலுண்டான வராஹ தீர்த்தம், பத்மநாபனின் பாதத்தாலுண்டான பாத தீர்த்தம், நாபி பத்மம் உண்டான பத்மநாப தீர்த்தம், தக்ஷிண ஸமுத்ரக்கரையிலுள்ள சங்க தீர்த்தம், சக்ராயுதத்தாலுண்டான சக்ர தீர்த்தம், அதன் முன்னுடி அனந்த விரத கதையில் விஸ்தாரமாய் கூறப்பட்டிருப்பதாயும் (மாத்வமித்திரன் 9வது வாலியம் 3வது சஞ்சிகையைக் காண்க) கௌண்டின்யரை அழைத்துப் போய்விச்வரூபத்தைக்காட்டப்பட்டிருப்பதாயுமுள்ள கஹனமான குஹை, தர்மபுத்தியைத் தருவதாயும் அதர்மபுத்தியை எப்போதும் தராததாயுமுள்ள தர்மதீர்த்தம் அதர்ம தீர்த்தம் என்னும் இரண்டு புஷ்கரணீகள், மேலேபடுத்து கேசியைக்கொன்ற ஆதிகேசவமூர்த்திக்கு மாலையாய் இருபுரம் ப்ரவஹிக்கும் கங்கா தாம்பரபர்ணீ நதிகளும் பிரதானமான தீர்த்தங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

க்ஷீர ஸமுத்திரத்தில் ஆதிசேஷனின் சயனத்தில் பத்மநாபமூர்த்தியாய் படுத்திருக்கும் ஸ்ரீநாராயணரைக்காண விருப்பங்கொண்டு திவாகரர் என்னும் ரிஷி விரக்தி இந்திரிய ஜயம் முதலியவைகளால் பகவானை வெகுகாலம் உபாஸித்துவர, பகவான் அவருடைய பக்திக்குமெச்சி, மனமோகன சுந்தரவடிவங்கொண்டவராய் இரண்டு வருஷபிராயமுள்ள சிறுபாலனுய்வந்து தரிசனமளித்தார். திவாகரமுனி மகாவிரக்தரான யதீசுவரராயிருப்பினும் பகவானின்



ஸௌந்தர்யத்தால் மயங்கிப்போய் பாலனை வாரி எடுத்து, இருக அணைத்து, உச்சி முகர்ந்து, மடியில் உட்கார்த்திவைத்து, ஆநந்தக் கண்ணீர் சொரிந்துகொண்டு, அரும்பாலா! உன்னைப் பெற்றதாய் யார்! தந்தை யார்! நீ ஏன் இங்கு வந்தாய் என்று வெகு அன்புடன் பலவாறு பிரசினம் செய்தார். அதற்கு பகவான் புன்சிரிப்பு காட்டி தாதா! எனக்கு தந்தையுமறியேன் தாயுமறியேன், என்னை கொஞ்சிக்குலாவுபவர்தான் என் பந்து. நீர் அவ்வாறு என்னிடம் நடந்துகொள்வதாய் இருந்தால் நான் உம்மிடம் இருக்கிறேன். நான் என்ன செய்தபோதிலும் என்னை அதட்டி அவமானம் செய்யலாகாது. அப்படி நீர் செய்தால் உம்மைவிட்டு வேறிடம் நான் போய் விடுவேன் என்று சொல்லவும், என் கண்ணே! லோகசுந்தரனை உன்னைத்திட்டவும் அவமதிக்கவும் மனம் வருமா? நான் ஒருக்காலும் அப்படிச்செய்வதில்லை. இவ்விடமே இருந்து ஆனந்தத்தைத்தருவாய், என்றுசொல்லி எக்காலமும் குழந்தையை லாலனம் செய்துகொண்டிருந்தார். குழந்தையின் ஸர்வாங்க ஸௌந்தர்யத்தைப் பார்த்து பார்த்து பரமானந்தமடைந்தார். அமிர்தத்திற்கொப்பான மழற்சொற்களை செவியாறக்கேட்டு ஜன்மம் ஸாபல்யமானதாய் நிச்சயித்தார். குழைந்தையின் பக்கத்திலிருப்பதே மோக்ஷஸுகமென்று உறுதிகொண்டார். இவ்வாறு நாராயணன் திவாகர ரிஷியை அனுக்ரஹித்து பால ரூபத்துடன் இந்த க்ஷேத்திரத்தில் பலவருஷம் வசித்து வரவும், அருகிலுள்ள மலய பர்வதத்தில் அகஸ்த்ய மகாமுனிவர், த்ரிகூட பர்வதம், மகேந்திர பர்வதம், மலய பர்வதம், தாம்பிரபர்ணீ நதி இவைகளின் அபிமானி தேவர்களுடன் செய்யும் தபஸ்ஸுக்கு மகிழ்ந்தவராய் அவர்களை அனுக்ரஹிக்க இச்சை கொண்டார். பூர்வம் ஹிமவானுடைய பெண்ணான பார்வதியை பரமசிவன் மணக்கும் பொழுது, அவ்விவாக மகோற்சவத்தைப்பார்க்க ஹிமவத்கிரியில் பதினான்கு லோகத்தார்களும் கூடவே, இமயமலை பாரம் தாங்காமல் தாழ்ந்து, பூமியின் வடபுறம் பள்ளமாய் போய், தென்புரம் பிரம்மாண்டமாய் உயர்ந்து பூமி ஸமனில்லாமல் ஜனங்கள் விஷமமாய் வசிக்கமுடியாமற் போய்விட்டது. எப்போதும் போல் பூமி ஸமமாயிருக்க என்ன உபாயமென்று விசுவகர்மாவை தேவர்கள்

வினவ, சரீரம் குட்டையாயிருப்பினும் தபஸ்ஸால் வேதபாரம் மிகுந்திருப்பவரும் தர்ம காதுகனான வாதாபியை ஜீர்ணத்துக்கு கொண்டுவந்தவரும் நூறாயிரம் யோஜனையுள்ள ஸமுத்ரத்தை ஒரு தரம் ஆசமனம் செய்து சோஷித்தவருமான அகஸ்திய மகா முனியை, தெற்கேயுள்ள குலாசலமாகிய மலயபர்வதத்தில் இருக்கச் செய்தால், அவருடைய பாரத்தால் பூமி தராசு தட்டுபோல் ஸமமாய் ஆகிவிடுமென்று, விச்வார்மா யோசனை சொல்லவும் பார்வதி கல்யாணத்தைப்பார்க்க ஆசையுடன் வந்திருந்த அகஸ்தியரை, லோகோபகாரார்த்தமாய் மலயபர்வதத்திற்கு சென்று அங்கு வசிக்கும்படிக்கும், பார்வதியான மீனாட்சியின் கலியாணத்தைச் செய்துகொண்டு அங்கேயே அவருக்கு தரிசனம் கொடுப்பதாயும் பரமசிவன் சொன்னதுடன், மகாவிஷ்ணுவும் அனந்தசயனத்துடன் அவருக்கு அனுக்ரஹித்து அந்த பிராந்தியத்திலிருப்பதாய் வரனைக்கொடுத்து அகஸ்தியரை நிர்பந்தத்துடன் அனுப்பவும், அகஸ்தியர் விந்தியபர்வதத்தின்வழியாய் தக்ஷிணம் வரும்பொழுது ஹிமவத்கிரியை போட்டி போட்டுக்கொண்டு பிரம்மாண்டமாய் அந்த விந்தியபர்வதம் வளருவதைக்கண்டு நான் தக்ஷிணதேசம் போய் திரும்பிவரும் வரையில் நீ இனி வளராதே என்று ஆக்ஞையிட்டு அதனை ஒப்புக்கொள்ளச்செய்து மலய பர்வதத்திலேயே தங்கிவிட்டார். தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற விந்திய பர்வதமும் வளராமல் நின்றுவிட்டது. முன்பு மகாவிஷ்ணு வரனளித்தபடி தனக்கு ஸேவை சாதிக்க அகஸ்தியர் மேலேசொன்ன தேவதைகளுடன் மகாதபஸ்செய்ய, பகவான் சீக்கிரமே அவ்வாறு ஆவிர்ப்பவிப்பதாய்ச் சொல்லி, ஒருசமயம் திவாகரரிஷி தேவதார்ச்சனை செய்யும்பொழுது, அந்த பாலரூபி பரமாத்மா பூஜையிலிருந்த ஸாலக்ராமத்தை எடுத்து வாயில்போட்டுக்கொண்டார். புனிதமான ஸாலக்ராமத்தை பாலன் எச்சிலாக்கிவிட்டானே என்று துக்கம் மிகுந்து அடங்காக்கோபம் வந்து இடதுகையால் அவனைத் தடுத்து அதட்டினார். பாலன் இதைக்கண்டு பயந்து மனம்நொந்து அவமானமடைந்து முகத்தை திருப்பிக்கொண்டு கமலமலர்போல் சிவந்த அதிகோமலமான சிறு சிறு அடிகளை வைத்துக்கொண்டு அவரை விட்டு விலகிச்சென்றார். குழந்தை துக்கப்பட்டு அவமானமடைந்து தன்னை விட்டுச்செல்வதை பார்த்து, திவாகரரிஷி அந்த குழந்தையின் பிரிவைத்தாளாமல் சோகஸாகரத்தில் மூழ்கி, என் கண்மணி! என்னை மன்னிப்பாய், நான் செய்ததெல்லாம் தவறு. உன்னை ஒரு க்ஷணமும் விட்டுப்பிரியேன். நீயில்லாமல் என் பஞ்சப்ராணனும் நில்லாது. எவ்வளவு ஸாலக்ராமம் வேண்டுமானாலும் நான் தருகிறேன். என் எதிரிலேயே நீ அவைகளைத் தொடு, எச்சிலாக்கு; நான் ஒன்றும் பேசுவதில்லை. என்னைத் திரும்பிப்பார்க்கலாகாதா. ஒரு வார்த்தை எனக்கு பதிலளிக்கலாகாதா? ஒரு க்ஷணமாவது ஓடாமல் நில்லேன். இனி ஒரு முறை உன் முகாரவிந்தத்தைப் பார்க்கிறேன் என்று பலவாறு சொல்லி, பச்சாத்தாபமடைந்து, தேவதார்ச்சனையை விட்டு குழந்தையைத் தொடர்ந்து பின்னே ஓடோடி வந்தார். தாவிப்பிடித்தால் கையில் அகப்படுகிறவர்போல் காணப்படினும், மகரிஷிகளின் மனோவேகத்திற்கே எட்டாத அந்த பகவான், திவாகரர் கைக்கு எப்படி அகப்படுவார்? வனம் வனாந்திரங்கள் கிராமங்கள் இடைச்சேரிகள் முதலியவைகள் அநேகம் தாண்டி தக்ஷிண ஸமுத்ரத்துக்கு மூன்று யோஜனை தூரமுள்ள வேளா வனத்திற்கு வந்து, அங்கு மூன்று யோஜனை நீளம் உயர்ந்திருந்த பிரம்மாண்டமான ஓர் விருக்ஷத்தின் பொந்தில் பிரவேசித்து விடவும், பிரம்மாண்டத்தையே உதரத்தில் வைத்துக்கொண்டிருக்கும் இந்த பாலனின் பாரம் தாங்காமல் அந்த விருக்ஷம் கீழே சாய்ந்தது. பின்னாடி வந்திருந்த திவாகரர் அந்த விருக்ஷத்தில் பாலன் பிரவேசித்ததைப் பார்த்தாராகையால் மூன்று யோஜனை தூரம் விழுந்த அந்த விருக்ஷம்நெடுக சுற்றிசுற்றி எவ்வளவு தரம் பார்த்தும் அந்த பாலன் தென்படாமல் மனம் நொந்து மகா ப்ரலாபம்செய்து, அவர் பகவான்தான் என்று நிச்சயித்து அமரைக்காண அடம்பிடித்து கண்ணை மூடி தவத்திலமர்ந்தார். திவாகரரின் உண்மையான பக்திக்கு மகிழ்ந்து பகவான் மூன்று யோஜனை நீளமுள்ள அந்த விருக்ஷத்தையே தன் ரூபமாக செய்து சேவை சாதித்தார். சங்க தீர்த்தம், சக்ர தீர்த்த கரையில் கைகளும், வராஹ தீர்த்தம், பத்ம தீர்த்தத்தின் நடுவில் வயிறு நாபி பத்மம் துடைகளும், தர்ம தீர்த்தம், அதர்ம தீர்த்தம் கரையில் பாதங்களுமாக ஆதிசேஷனின் சரீரத்தில் கிரீடாதி பூஷணங்களு

டன் படுத்த மகத்தான சுந்தர ரூபமுள்ள அநந்தபத்மநாபனைக் கண்டு மகா ஆச்சரியமடைந்து விசித்ரமாக ஸ்தோத்திரம் செய்தார். அகஸ்திய முனிவர் மலய பர்வதம் மகேந்திரகிரி த்ரிகூட கிரி தாம்பரபர்ணீ இவர்களுடன் மகாஸ்தோத்திரம் செய்ய பகவான் அவரவர்களுக்கு தனித்தனியே வரனளித்தார். திவாகரருக்கும் மகாவரன்களை அளித்து அவருடைய பூஜையை நித்யம் பெறுவதாய்ச்சொல்லி அவருடைய தண்டகாஷ்டத்தின் மூன்றுமடங்கு அளவுக்கு தன் மகத்தான அனந்தனின் ரூபத்தை சுறுக்கிக் கொண்டு, மூன்றுவாசல்கொண்ட திவ்யமான விமானத்தில்சேவை சாதித்தார். திவாகரரும் முதல் வாசல்வழியாய் கிரீடசோபிதமான அநந்தனின் முகபத்மத்தையும், நடுவாசல் வழியாய் நாரதர் தும்புரு அஷ்டதிக்பாலகர்கள் சித்தர்கள் ஸாத்யர்கள் கின்னரர்கள் கந்தர்வர்கள் அப்ஸரஸ்ஸுகள் இவர்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு சதுர்முகனோடு இருக்கும் பகவானுடைய நாபி கமலத்தையும், கடைசி வாசல் வழியாய் பகவானுடைய பாதபத்மத்தையும் தரிசித்து வந்தார். திவாகரர் துளுப்ராம்மணராயிருந்ததால் துளுவர்களின் பூஜையில் தான் அநந்த பத்மநாபனுக்கு ப்ரியமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

*பத்மாலாலித பாதபத்ம யுகள; பத்மாஸனோத்யைஸ்துதோ*
*ஹ்ருத்பத்மே விநிவேசிதாங்க்ரியுகள: பத்மாதிகைர்யோகிபி:|*
*பத்மாக்ஷைர்நிபிர்யுதம் விரசயன் பத்மாக்ஷவீக்ஷாலவாத்*
*ஸ்வாங்க்ர்யோரர்சகமாதராத் அவதுந: ஸ்ரீபத்மநாப: ப்ரபு:||*

**இத்தகைய மகாத்மியமடங்கிய அநந்தசயனத்தில் சேவைசாதிக்கும் ஸ்ரீஅநந்தபத்மநாபனின் திருக்கோயிலில் ஏற்பட்டிருக்கும் சண்டாள பிரவேசத்தை நிவிருத்திக்க பிரயத்தினம் செய்யுங்கள். தர்மத்தை நிலைநிறுத்தப் பாடுபடுங்கள். அதர்மத்திற்கு ஆளாகாதீர்கள்.**

---



### மதராஸ் கவர்ண்மெண்டார் கூறும்

# ஸ்ரீ ராகவேந்திரரின் மகிமை.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் தேசபூஷணம் R. K. பிரசன்ன வெங்கடேச ராயரவர்களால் விநியோகம் செய்யப்படும் துண்டுப் பிரசுரத்தில் காணப்படுவதாவது:—

Extract from "Madras District Gazetteers" by W. Francis Esq., I. C. S. Vol. No. I. Bellary. Reprint 1916 by the superintendent Govt. Press Madras, Chapter XV, Adoni Taluk, Page No. 213

**MANTSALA**:— A Shrotriem village with a population of 1212 on the bank of the Tungabhadra in the extreme north of the Taluk. The village is widely known as containing the tomb of the Madva saint **Sri Raghavendra Swami**, the annual festival in August connected with which, is attended by large numbers of pilgrims, including even Lingayats, from Bombay, the Nizam's Dominions and even Mysore. The tomb itself is not of architectural interest. The grant of the landed endowment attached to it, is said in one of the Mackenzic MSS. to have been made by Venkanna Pant, the well-known Dewan of Sidi Masand Khan, governor of Adoni from 1662 to 1687.

A quaint story of Munro is told about the place. The endowment being threatened with resumption, Munro, it is said,* came to make enquiries. After removing his boots and taking off his hat he approached the grave. The saint thereupon emerged from his tomb and met him. They conversed together for some time regarding the resumption, but though the saint was visible and audible to Munro—who was himself the

*Madras Review, VIII, 280.

people declare, semi-divine none of the others who were there could either see him or hear what he said. The discussion ended. Munro returned to his tent and quashed the proposal to resume the endowment. Being offered some consecrated rice, he accepted it and ordered it to be used in the preparation of his meals for that day.

W. Francis I. C. S. என்பவரால் இயற்றப்பட்ட "Madras District Gazatteers" என்னும் நூலின் 1வது வாலியம் 15வது அத்யாயம் 213வது பக்கத்தில் பின்வருமாறு வறையப்பட்டிருக்கிறது:—

## மஞ்சாலே (மந்திராலயம்)

இது ஆதவானி தாலூக்காவின் வடகோடியில் துங்கபத்திரா நதிக்கரையில் 1212 ஜனத்தொகையுள்ள ஓர் சுரோத்திரிய கிராமம். இவ்வூரில் மத்வமதத்தின் ஸன்யாசியாகிய ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் சமாதி இருப்பதால் இவ்வூர் எங்கும் பிரசித்தமாகவே இருக்கிறது. பிரதி வருஷமும் ஆகஸ்டுமாதத்தில் நடக்கும் இவருடைய உற்சவத்திற்கு ஏராளமான யாத்ரிகர்கள் லிங்கங்கட்டி சைவர்கள் உள்பட பம்பாய் மாகாணம் ஹைதராபாத் இலாகா மைசூர் பிராந்தியங்களிலிருந்தும் வருகின்றனர். இந்த சமாதியில் அவ்வளவு சிறந்த சில்ப வேலைப்பாடுகள் ஒன்றுமில்லை, இந்த சமாதிக்கு விடப்பட்டிருக்கும் நிலம் மானியம் கி. பி. 1662ம் வரு முதல் 1687ம் வரு வரையில் ஆதவானி கவர்னராயிருந்த ஸைடை மஸூத்கான் என்பவரின் பிரக்யாதியுள்ள திவான் வெங்கண்ண பந்தர் அவர்களால் விடப்பட்டதென்று மெக்கென்சி எழுத்துப்பிரதிகளிலொன்றில் வரையப் பட்டிருக்கிறது.

இவ்வூர் சம்பந்தமாய் (மதரூஸ்கவர்னர்! மன்ரோ துரையவர்களின் ஓர் ஆச்சரியமான கதை சொல்லப்படுகிறது. இந்த மானியம் எடுத்துவிட பயமுறுத்தப்பட்ட பொழுது நேரில் விசாரணை செய்யபோக மன்ரோ துரை இவ்வூருக்கு வந்தார். (மதரூஸ் ரிவியூ VIII 280வது பக்கம் காண்க.) அவர் தன் காலில் அணிந்திருந்த பூட்சுகளையும் தலையில் வைத்துக்கொண்டிருந்த தொப்பியையும் எடுத்து அந்த சமாதியின் சமீபம் சென்றார். அதன்பேரில் அந்த பெரியார் தன் சமாதியினின்றும் மூர்த்திமானாய் வெளிவந்து வழியில் அவரை சந்தித்தார். அவ்விருவர்களும் சிறிதுநேரம் அந்த மானிய வஜாவைப்பற்றி பேசினர். அச்சமயம்



அந்த பெரியார் சிறிது தெய்வானுக்ரஹம் கொண்டவரென்று ஜனங்களால் கருதப்பட்ட மன்ரோ துரையவர்களுக்கு சுந்தர தரிசனத்தையும் ஸம்பாஷணையையும் அளித்தாரேயன்றி அவருடன் அங்கிருந்தவர்கள் யாருமே அப்பெரியாரைப் பார்க்கவோ அவர் கூறியதைக்கேட்கவோ முடியவில்லை, சம்பாஷணை முடியவும் மன்ரோ துரையவர்கள் தன் கூடாரத்திற்கு திரும்பிவந்து அந்த மானியத்தை எடுத்துவிடும் யோசனையை அடியோடு ரத்து செய்துவிட்டார். அப்பெரியாரின் பிரஸாதமான மந்திராக்ஷதை அவரிடம் கொண்டுவந்து கொடுக்கப்படவும் மன்ரோ துரையவர்கள் அதைப்பெற்று அன்று தனக்கு தயார் செய்யப் படும் ஆகாரத்தில் அதைக்கலந்து உபயோகிக்கும்படி உத்திரவுசெய்தார்.

---

# உபன்யாஸக் கொத்துகள்

## 2. ஸ்ரீமத்வாசாரியாரே சரியான ஆசாரியன்.

---

நண்பர்களே! ஸந்தியாவந்தனாதி நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்து தேவபூஜைசெய்து பகவானுக்கு நமஸ்காராதிகளைச் செய்து சரணம் புகுந்தபின் தினம் நாம் யாது பிரார்த்திக்கிறோமென்பதை சற்று கவனியுங்கள். "பிரம்மாந்தா: குரவ: ஸாக்ஷாத் இஷ்டம் தெய்வம் ச்ரிய: பதி:| ஆசார்யா: ஸ்ரீமதாசார்யா: ஸந்துமே ஜன்மஜன்மனி||" என்று ஒவ்வொரு ஆஸ்திக மாத்வனும் தான் தீர்த்தப்ராசனம்செய்து போஜனம் செய்யும் முன் குருவுக்கு தீர்த்தம் தரும் மந்திரமாகச் சொல்லி வருகிறான். இதன் பொருளை கவனித்தால், இவன் இந்த ஜன்மத்தில் மாத்வனாகப் பிறந்தது மட்டில் போதாதென்றும், இவன் இவனுடைய கர்மானுகுணமாக எவ்வளவு ஜன்மங்களை எடுக்கநேரிட்டாலும் மாத்வனாகவே பிறக்கவேண்டும், என்றால் ஸ்ரீ மத்வாசாரியாரை ஆசாரியனாக கொள்ளவேண்டும், என்று இவன் உள்ளன்புடன் பிரார்த்திக்கிறான் என்று நன்கு புலப்படுகிறது. இவ்வாறு பிரார்த்திக்க

வேண்டுமென்பது மத்வமத வெறிபிடித்த சில ப்ராசீனர்கள் ஏற்படுத்திய கட்டுப்பாடா அல்லது உண்மையாக அவ்வாறு செய்வது எமது கடமையா என்று மேனாட்டுக்கல்வியிலிருந்து இந்நாளில் யாவரும் யோசிக்கவேண்டியதே ஆகும். அதற்கு பதில் நாம் சொல்வதாவது அவ்வாறு பிரார்த்திக்கவேண்டியதுதான் நமது கடமை என்போம். நண்பர்களே! நீங்கள் யாராவது எப்போதுமே ஸௌக்யமாய் இருக்கிறீர்கள் என்றும் உங்களை எவ்வகை மனக்கவலையும் வாட்டுகிறதில்லை என்றும் அந்தரங்க சுத்தியாய் உறுதிகூறுவீர்களா? நீங்கள் பெரிய செல்வவான்களாகவே இருங்கள். உங்களுக்கு பிரதிமாதமும் அதிகச்சம்பளம் வருமானம் முதலியவை வரகூடியதாகவே இருக்கட்டும். அதிக செல்வாக்குடைய கௌரவஸ்தர்களாகவே இருக்கலாம் அல்லது நல்ல ஆரோக்ய பாக்யம் பெற்றவர்களாகவே இருக்கலாம். ஆனால் எப்பேர்ப்பட்டவனுக்கும் ஒருவகையில் துக்கம் இருந்தே தீரும். துக்கம் கலந்ததான சுகம் இருக்கலாமே ஒழிய துக்க சம்பந்தமில்லாத ஆனந்தானுபவம் ஒருவருக்கும் இருக்காது. அப்படி இருப்பது இந்த ஸம்ஸாரத்தில் இல்லை. அப்படிப்பட்ட நிலை கிடைப்பதுதான் மோக்ஷமாகும். மோக்ஷமென்றால் சுகதுக்காதிகளை அனுபவிக்கும்படி எங்களை கட்டுப்படுத்தியிருக்கும் ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுதலை என்று பொருள்படுகிறது. எவ்வளவு வகையான சுகங்களை அனுபவித்தபோதிலும் அந்த சுகம் அனுபவித்தது போதும், இனி வேண்டாமென்ற அபிப்ராயம் ஒருக்காலும்யாவருக்கும்ஏற்படாது. சுகத்தை அனுபவிக்க அனுபவிக்க அதை விருத்தியாக்குவதில்தான் மனம் ஓடும். "நஜாது காம: காமானும் உபபோகேன சாம்யதி | ஹவிஷா க்ருஷ்ண வர்த்மேவ பூய ஏவ அபிவிருத்ததே" என்றார் யயாதி ராஜன். அவர் தன்னுடைய மகனை புருராஜனின் யௌவனத்தைக்கொண்டு விஷய சுகத்தை அநேக ஆயிரம் வருஷ காலம் அனுபவித்தும் ஈது போதுமென்ற எண்ணம் உதிக்கவில்லை. துக்கானுபவம் அவ்வாறல்ல. ஓர் க்ஷணமும் ஒரு யுகமாகவே தோன்றும். அச்சமயம் தான் அனுபவிக்கும் இதர ஸௌக்யங்களின் ஞாபகமும் இல்லாமற்போகும். இந்த துக்கம் நிவிருத்தியடையும் மார்க்கத்திலேயே இவனுடைய மனது செல்லும். ஆதலால்



ஸௌக்யமே தனக்கு எப்பொழுதும் இருக்கவேண்டுமென்றும் துக்கம் ஒருக்காலும் ஏற்படக்கூடாது என்றும் எண்ணுவது மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுடையவும் இயல்பாகும். இந்த மோக்ஷ நிலையை அடைய என்ன உபாயம் என்று நாம் தேடவேண்டும். பெரியோர்களை கேட்கவேண்டும். இது சம்பந்தமான புஸ்தகங்களை பரிசீலனை செய்யவேண்டும். இதைக்கொடுப்பவர் யார் என்றும் அவரிடமிருந்து பெற நாம் என்ன செய்யவேண்டுமென்றும் நாம் நன்கு தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமல்லவா? இதைத்தான் எமது சாஸ்திரங்கள் அறிவிக்கின்றன. இது சம்பந்தமாய் எங்களுக்கு உபதேசித்தவர்கள் தான் எமது மதாசாரியார்கள். சங்கராசாரியார் ராமானுஜாசாரியார் மத்வாசாரியார் முதலிய மதாசாரியார்களில், மத்வாசாரியார் ஒருவரே விஷ்ணுவை ஸர்வோத்தம தெய்வமென்று சொல்லுகிறார். "ஸ்ரீமன் மத்வமதே ஹரி: பரதர:" என்று விஷ்ணு ஸர்வோத்தமத்வம் தான் மத்வமதத்தின் முக்யகொள்கை. ராமானுஜமதத்தில் விஷ்ணுவை விசேஷமாய் கொண்டாடப்படினும் மத்வமதத்தைப்போல் அவர் ஸர்வோத்தம தெய்வம் என்று சொல்லப்படுகிறதில்லை. பிராட்டியாராகிய மகாலெட்சுமி அந்தமதத்தின்படி விஷ்ணுவின் ஸமானமான அந்தஸ்து அடைந்திருக்கிறார். மோக்ஷமடைந்தவர்களில் ஸௌக்யத்தில் தாரதம்யமில்லை என்று சொல்லப்படுகிறது. சங்கராசாரியாரின் அத்வைத மதத்திலோ ஜீவனே பிரம்மமாவான். ஒருவன் யஜமானனென்றும் மற்றவன் பிருத்யன் என்றும் இம்மாதிரி ஸ்வாமி பிருத்ய பாவம் கிடையாது. ஆகவே விஷ்ணுவை எல்லோர்களுக்கும் மேலானவரென்று கொண்டாடுவது இம்மத்வ மதமே ஆகும். விஷ்ணுதான் மோக்ஷத்தைத் தருகிறவர் என்று எமது சாஸ்திரங்கள் தெளிவாய் அறிவிக்கின்றன. "யஸ்யப்ராஸாதாத் பரமார்த்திரூபாத் ஸம்ஸாராத் முச்யதே நாபரேண" என்று வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் விஷ்ணுவுக்கு முகுந்தரென்று பெயர் ஏற்பட்டு அந்த பெயர் விஷ்ணுவுக்குதான் இருந்துவருகிறது. விஷ்ணுர்ஹிதாதாமோக்ஷஸ்ய என்று பலவாறு புராண வசனங்களும் காணப்படுகின்றன. நாம் இவ்வாறு சொல்வது விஷ்ணுவிடமுள்ள அதிக பக்தியால் பக்ஷபாத

மாய் சொல்வதாய் எண்ணலாகாது. வெகு சீக்கிரத்தில் சொல்ப கைங்கரியத்தாலேயே ப்ரஸன்னமாகும் மகா ருத்திரனாகிய பரமசிவன் மோக்ஷத்தைத் தந்தருள சக்தரன்று. பலவகை ஸம்பத்துக்களைத் தருவார். மேலான நிலைமைக்கு கொண்டுவந்து விடுவார், "நசபுனராவர்த்தே நசபுனராவர்த்தே ஸர்வான் காமான் ஆப்த்வா அமிருதஸ்ஸமபவத் ஸமபவத்" என்றுசொன்னபடி மீண்டும் திரும்புதலின்றி எல்லாவகை அபீஷ்டங்களையும் பெற்று அமிர்தஸ்தானத்தை அடையச்செய்ய விஷ்ணுவுக்குத்தான் சக்தி. கண்டாகர்ணன் என்ற பிசாசன் வீரசைவனாயிருந்தான், விஷ்ணுவிடம் மகா த்வேஷம் கொண்டிருந்தான், சிவநாமமல்லாது விஷ்ணுநாமம் காதில் விழாதபடி பெரிய மணியை காதில் கட்டிக்கொண்டிருந்தான். விஷ்ணுநாமம் விழுவதாயிருந்தால் அந்த மணியை சப்திக்கச்செய்து அதை தடுத்துக்கொள்வான். இவ்வாறு கண்டாகர்ணன் சிவனிடம் விசேஷ பக்தியைச் செய்துகொண்டு கைலாசத்தில் கைங்கரியம்செய்துகொண்டு அவருடைய பார்ஷதகணங்களில் முக்யஸ்தனாயிருந்தான். ஒரு சமயம் ஏகாந்தமாய் பரமசிவனை தனக்கு மோக்ஷத்தைத் தர அனுக்ரஹிக்கும்படி ப்ரார்த்திக்கவும் மகாதேவன் கண்டாகர்ணனைப்பார்த்து, தனக்கு அதைத்தர சக்தியில்லையென்றும் முக்தி ப்ரதாதா ஸர்வேஷாம் விஷ்ணுரேவ நஸம்சய: மோக்ஷந்தருகிறவர் விஷ்ணு ஒருவரே என்றும் அந்த விஷ்ணுதான் த்வாரகாநாதனாய் ஸ்ரீகிருஷ்ணரென அவதரித்திருப்பதால் அவரிடம் சென்று அவருடைய அனுக்ரஹத்தைப் பெறும்படிக்கும் சொல்லிவிட்டார், கண்டாகர்ணன் இதைக்கேட்டு சிவன் ஸர்வோத்தமன் என்றும் ஸர்வ வல்லமை படைத்தவரென்றும் இதுகாறும் எண்ணியிருந்தது பிசகென்று, உறுதிகொண்டு, விஷ்ணுத்வேஷம் செய்திருந்ததைப்பற்றி பச்சாத்தாபமடைந்து, கிருஷ்ண கிருஷ்ண வென்று நாமோச்சாரம் செய்துகொண்டு, தற்செயலாய் கைலாஸயாத்திரையாய் பதரிகாசிரமத்தில் வந்திருந்த ஸ்ரீகிருஷ்ணரை நேரில் தரிசித்து, மகாதேவன் சொன்ன விருத்தாந்தத்தை அறிவித்து, தன்னை அனுக்ரஹிக்கும்படி ப்ரார்த்திக்க, விஷ்ணுவாகிய ஸ்ரீகிருஷ்ணர் அவனுடைய பிசாச ஜன்மத்தைப்போக்கி மோக்ஷமளித்திருக்கிறார். இந்தசரிதை இதிஹாஸபுராண பஞ்சமோ வேதா



னாம் வேத: என்று ஐந்தாவது வேதமாக கூறப்படும் மகாபாரதத்திற்கு ஒட்டியதான ஹரிவம்சத்தில் விஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே மோக்ஷமளிக்கக்கூடிய விஷ்ணு ஸமஸ்தகல்யாண குண பரிபூர்ணர், எவ்வகை தோஷமில்லாதவர், எல்லா சாஸ்திரங்களாலும் முக்கிய விருத்தியால் கூறப்படுகிறவர். எல்லா ஜீவராசிகளாலும் அடையத்தகுந்தவர் என்று அவருக்கு எல்லாவகை மேன்மையை நிரூபிக்கும் மதம் மத்வ மதமேயாகும். ஸாமானியமாய் ஒரு அரசன் பலவகையாய் துதிப்பிக்கப்பட்டாலே அவன் மகிழ்ந்து பலவகை சௌகரியங்களைச்செய்வதை நாம் தினம் காண்கிறோம். ஸர்வோத்தம தெய்வமான விஷ்ணு இவ்வாறெல்லாம் சாஸ்திரங்களை ஒட்டி ஸர்வோத்தமர் என்று நிரூபிக்கத்தகும் குணங்களால் உபாஸிக்கப்பட்டால், அவர் எவ்வளவு மெதுவாய் பக்த ஜனங்களிடம் அனுக்ரஹம் செய்பவராயினும், இந்த ஜன்மத்தில் கிடைக்காமற்போனாலும் வேறு எந்த ஜன்மத்திலாவது நாம் கட்டாயமாய் அவருடைய அனுக்ரஹத்தை சம்பாதிக்கலாம். அதனால் நாம் விரும்பும் துக்கசம்பந்தமில்லாத சுகஸ்வரூபமாகிய மோக்ஷம் கிடைக்கும். ஸம்ஸார பந்தம் விலகும். வேறு சங்கர மதமோ ராமானுஜ மதமோ பின்னும் எந்த மதமோ மோக்ஷத்தை அளிக்கவல்ல விஷ்ணுவை ஸர்வோத்தமர் என்றறிவித்து அவரை மகிழச்செய்ய ஸாதகமாக இல்லை. அதனால் ஸம்ஸாரபந்தம் நீங்குவதில்லை. ஆதலால் ஸ்ரீமத்வாசாரியார் எல்லா மதாசாரியர்களைவிட மேலான ஆசாரியன், குரு, நல்வழியைக்காட்டுபவன் என்று கருதப்படவேண்டும். அவர் தமது நூல்களில் அறிவித்த வழிதான் விஷ்ணுவை மகிழச்செய்து அவருடைய அனுக்ரஹம் பெற ஸரியான வழியாகும். இப்பேர்ப்பட்ட ஆசாரியன் ஏதோ நாம் முன் செய்த புண்ணிய விசேஷத்தால் நமக்கு ஏற்பட்டு மோக்ஷத்தைத் தரத்தகும் விஷ்ணுவை ஸர்வோத்தம தெய்வமாக உபாஸிக்க ஸந்தர்ப்பமேற்பட்டிருப்பதால், இந்த பாக்யம் எப்போதும் எங்களுக்கு நீடித்திருக்க, இந்த ஆசாரியனை நாம் எடுக்கும் ஒவ்வொரு ஜன்மத்திலும் எமது ஆசாரியனாக இருக்கவேண்டுமென்று, நாம் பரிசுத்தமாயிருக்கும் காலத்தில் பகவானை ப்ரார்த்திக்க எமது ப்ராசீனர்கள் ஒரு நிபந்தனையை ஏற்படுத்தியிருக்கிறார்களேயன்றி

அவர்கள் மதவெறி பிடித்து செய்த கட்டுப்பாடில்லை. "யேனைஷ்ய மபி துர்மார்க்காத் உத்ருத்ய அபிநவேசித: | ஸம்யக் ஸ்ரீவைஷ்ணவீ மார்க்கே பூர்ண பிரக்ஞம் நமாமி யஹம்" என்று நாம் முன்னுக் இந்த வைஷ்ணவ மாத்வ வழியை பின் பற்றுமனும், விஷ்ணுவைச், மகிழச்செய்யும் உபாயத்தை தெரிந்துகொள்ளாமலும், ஐக்ய பாவ, ஸாம்ய பாவம் முதலியவைகளை வாதிக்கும் சங்கராசாரியார் ராமானுஜாசாரியார் போன்ற மதாசாரியார்களை ஆசாரியனாகக்கொண்டும், விஷ்ணுவை துவேஷித்து நித்யநரகத்தில் விழத்தயாராயிருந்த நம்மீது கருணை கூர்ந்து இணையற்ற சாஸ்திரீய வாதத்தால் எங்களுக்கு பரம சூக்ஷ்மமான விஷ்ணு பக்தி மார்க்கத்தை காட்டிய ஸ்ரீ பூர்ண பிரக்ஞரென்று விஜாதீய பண்டிதர்களாலும் அழைக்கப்படும் ஸ்ரீமத்வாசாரியாரே, சரியான ஆசாரியன் என்று நிச்சயிக்கவேண்டியது அவசியம். அவர் தமது நூல்களில் அறிவித்திருக்கும் நல்வழியை பின்பற்றி நீங்கள் நித்ய ஸுகத்தைப்பெறுவீர்களாக.

---

## விசேஷ தினங்கள்.

### புஷ்ய மாஸம்.

| | | |
|---|---|---|
| 13—1—37 | புதவாரம் | தனுர்மாஸ பூர்த்தி |
| 14—1—37 | குருவாரம் | சிரவணம் உப, விஷ்ணு ப. உப, யண புண்யகாலம் மணி 11—56 வரை |
| 22—1—37 | சுக்ரவாரம் | ஸ்ரீரகூத்தமர் புண்யதினம் |
| 23—1—37 | சனிவாரம் | ஏகாதசி உப. |
| 26—1—37 | மங்களவாரம் | பௌர்ணமி விஷ்ணு ப. உப, ஆரம்பம் |
| 7—2—37 | பானுவாரம் | ஏகாதசி உப. |
| 10—2—37 | புதவாரம் | தர்சம் சிரவண உப, விஷ்ணு ப. உப. |
| 11—2—37 | குருவாரம் | விஷ்ணு ப. உப, புரந்தரதாஸர் புண்யதினம் |



# மாத்வமித்திரன்.

# THE MADWA MITRAN

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

OFFICE OF TH
21 FEB
MADRA

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 9.<br>புஸ்தகம் 9 | தாத்ரு நாம ஸம்வத்ஸரம்.<br>மாக மாஸம்.<br>(25—2—193'.) | No. 7.<br>நெ. 7. |
|---|---|---|

| நெ | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 193 |
| 2. | கும்பகோணத்தில் ஓர் கண்டனக்கூட்டம் | 201 |
| 3. | ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீராகவேந்திரரின் லீலை | 203 |
| 4. | ஸ்ரீ மத்வ விஜயம் (ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார்) | 205 |
| 5. | ஆசாரமாலை | 209 |
| 6. | விஷ்ணு ஸஹஸ்ர நாமம் | 210 |
| 7. | தீண்டாதார் ஆலயப்ரவேசக்கண்டனம் | 215 |
| 8. | சென்னை மாகாண ஸநாதன தர்ம மகாநாடு | 217 |
| 9 | தேவாலயங்களில் மாத்வர்களுக்குள்ள பற்றுதல் | 220 |
| 10. | விசேஷ தினங்கள் | 223 |
| 11. | விளம்பரம் | 224 |

ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அர்த்த இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மனேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீ நாஸிம்ஹாய நம:

# மாத்வ மித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साध[illegible]
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

OF THE
FEB 193

VOL. 9 | தாத்ரு நாம ஸம்வத்ஸரம். மாக மாஸம். | No. 7

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

ஸ்ரீம. வே. பாகவத ரங்கனாதசாரியாரின் மொழிபெயர்ப்பு.

இருபத்தி ஏழாவது அத்தியாயம்.

(முன் 168ம் பக்கம் தொடர்ச்சி, காபிரைட்)

### பீமசேனர் துச்சாசனனின் ரத்தத்தைப்பருகியது.

அப்பொழுது பீமசேனர் யுத்தத்தில் எல்லா சத்ரு ஸைனியத்தையும் ஓட்டினார். தன் ஸாரதியான விசோகனுடன் யுத்த விருத்தாந்தங்களை பேசிக்கொண்டு சந்தோஷமுள்ளவராகவே பீமசேனர் தன்னுடன் யுத்தம் செய்ய நேராக வந்திருக்கும் வீரர்களை ஸம்ஹாரம் செய்தார். அப்பொழுது சகுனி ஸைனியங்களுடன் கூடினவனும், துரியோதனனின் தம்பிகளுடன் கூடியவனும் பீமசேனரிடம் வந்தான். பீமசேனர் சகுனியை ரதம் ஆயுதம் இவைகளில்லாமற் செய்து பாணங்களால் பூமியில்

தள்ளினார். முன்பு த்யூதமாடிய சபையில் ஸகதேவனுடைய பாகமென்று தான் ஏற்படுத்திய அந்த சகுனியை, பீமசேனர் அப்பொழுது ஸம்ஹரிக்கவில்லை. மூர்ச்சையடைந்து மூச்சுமட்டில் பாக்கியிருந்த அந்த சகுனியை துரியோதனன் ரதத்தைக்கொண்டு வேறிடம் கொண்டுபோனான். அந்த யுத்தத்தில் துரியோதனின் தம்பிகள் பத்துபேர் பீமசேனரைவிட்டு ஓடினார்கள். பிறகு பீமசேனர் கிருஷ்ணார்ஜுனர்களைப் பார்த்து தர்மபுத்திரரின் க்ஷேமத்தைக்கேட்டு அன்பு கொண்டார். சத்ரு வீரர்களை மறுபடியும் சம்ஹாரம் செய்பவரும் தன் ஸைனியத்தை ஓட்டுகிறவருமான பீமசேனரிடம் துச்சாசனன் வந்தான். தனுர்தாரியான பீமசேனர் மிருகத்தினிடம் ஸிம்ஹம் வருவதுபோல் துச்சாசனனிடம் வந்தார். க்ரூரமான வாக்யங்களை அடுத்தடுத்து பேசும் துச்சாசனனை பீமசேனர் ஒரு க்ஷணத்தில் கதாப்ரஹாரத்தால் ரதமில்லாமல் செய்து அவனைப்பிடித்து பூமியில் தள்ளி கதையின் அடியால் அவன் மார்பைப்பிளந்தார். பீமசேனர் தன் காலால் துச்சாசனனின் கழுத்தை மிதித்துக்கொண்டு அவனுடைய வயிற்றின்மீதுஉட்கார்ந்து,அவனுடைய முகத்தைப்பார்த்து,கோபத்தை வரவழைத்துக்கொண்டு, வானம்போல் நீல வர்ணமுள்ள பெருங்கத்தியை உரையினின்றும் பிடுங்கி, அந்த துச்சாசனின் மார்பில் சதுக்கினார். அவனுடைய மார்பில் விசாலமான குளத்தை வெட்டி பீமசேனர் தாகங்கொண்டு அவனுடைய ரக்தமாகிய ஜலத்தை அம்ருதத்திற்கு ஸமானமாய் எண்ணி இஷ்டப்படி பானம் செய்தார். விழிகளை உருட்டும் துச்சாசனனுக்கு அவன் முன்பு செய்த த்ரௌபதி கூந்தலிழுத்தல் முதலான துஷ்க்ருத்யங்களையும் அவன் உபயோகித்த பாணங்களைப்போன்ற சொற்களையும், அடுத்தடுத்து பீமசேனர் மிக்க அதிகமாய் ஞாபகத்திற்கு கொண்டு வந்தார். மனுஷ்யனுடைய ரக்தம் பானம் செய்ய அருகமன்று என்பதை அறிந்த பீமசேனரின் பற்களுக்குள்ளே துச்சாசனன் ரக்தம் செல்லவில்லை. ஆயினும் சத்ருக்களை பயமுறுத்துவதற்காக பீமசேனர் அந்த ரக்தத்தை அடுத்தடுத்து ருசி பார்த்து பருகுபவர்போல் காணப்பட்டார். பகவானும் ஈசுவரனுமான ஸ்ரீ நரசிம்ஹனை பக்தியுடன் ஸ்மரணை செய்துகொண்டு



நரசிம்ஹரைச் சொல்லும் யஸ்தேமன்யோ விதத் வஜ்ரஸாயக: என்னும் மன்யுஸூக்தத்தை தன் அனுசந்திப்புக்குக்கொணர்ந்தார். யுத்தமாகிய யக்ஞத்தில் சத்ருவான துச்சாசனனின் ஹ்ருதயத்தைஸோமலதை என்னும் புத்தியால் இஹ: என்னும் ஸாமவேத மந்திரத்தால் பேதித்து ரக்தமாகிய ஸோம ரஸத்தை ஸ்ரீ நரசிம்ஹருக்கு ஸமர்ப்பித்தார். மனுஷ்யோத்தமரான பீமசேனர்தான் செய்த சபதத்தை ஜனங்களின் நடுவில் ஸத்யமாக நிறைவேற்றிக் கொண்டு இவ்வாறு பேசினார். எந்த துரியோதனாதிகளின் ஸ்திரீ ஜனங்கள் பர்த்தாக்களுடன் சேர்ந்து இருந்தனரோ. அவர்கள் தற்போது பதி இழந்தவர்களாயினர். எந்த த்ரௌபதி பதிகள் இல்லாமல் இருந்தாளோ, அவள் பதிகளுடன் சேர்ந்தாள். பகவானுடைய விசித்ரமான சக்தியைப்பாருங்கள். யார் சரியான எள்ளாக இருந்தார்களோ அவர்கள் இப்போது பதர் எள்ளாக ஆயினர். என்றால் பிடிக்கப்பட்டிருக்கும் இந்த துச்சாசனனை யாராயிருந்தாலும் சரி, இங்கு புருஷனாயிருப்பவன் ஒருவன் இருக்கும்பக்ஷத்தில் அவன் தன் சக்தியால் விடுவிக்கட்டும் என்று சொல்லிக்கொண்டு, பீமசேனர், ஸ்வர்க்கத்தில் இந்திரன் அம்ருதத்தை பருகுவது போல், ரக்தத்தை அடுத்தடுத்து பானம் செய்தார். உயிருடனிருந்த துச்சாசனனை மறுபடியும் விட்டு, பீமசேனர் ஆயுதமில்லாமலிருந்துகொண்டு கர்ஜித்துக்கொண்டு சத்ரு சைனியத்தில் நர்த்தனம் செய்தார். எங்களைப் பார்த்து துரியோதனாதிகள் அடுத்தடுத்தடுத்து, கௌ: கௌ: என்று சொல்லிக்குதித்தார்களோ, அவர்களைப் பார்த்து நாம் திருப்பித்திருப்பி கௌ: கௌ: என்று சொல்லி பதில் நர்த்தனம் செய்கிறோம், என்று சொல்லிக்கொண்டு பீமசேனர் சத்ருக்களின் நடுவில் துடையைத் தட்டி சத்ரு சமூகங்களை யுத்தத்திற்கு அழைத்தார். கர்ணன் அசுவத்தாமாசாரியார் துரியோதனன் முதலானவர்களில் யாரும் பீமசேனரைக் கண்ணெடுத்துப்பார்க்கவும் மாளவில்லை. பயத்தால் கர்ணனுடைய கையிலிருந்த தனுஸ்ஸானது கீழே விழுந்தது. அப்பொழுது இரண்டு கண்களையும் அவன் மூடிக்கொண்டான். அர்ஜுனனுக்கு பங்கு வீதமாயுள்ள கர்ணன் சல்ய ராஜனால் போதிக்கப்பட்டவனாய் சிரமத்துடன் யுத்தத்தில் நின்றான்.

அசுவத்தாமா பீமசேனரைவிட்டு வெகு தூரம் ஒதுங்கிப்போனார். அப்பொழுது பீமசேனர் நான் யுத்தமாகிய யக்ஞத்தில் துச்சாசனனின் ரக்தமாகிய ஸோமத்தை பானம் செய்தேன். ஹரியின் ப்ரீதியின் பொருட்டு துரியோதனன் என்னும் பசுவை நான் கொல்லவேண்டும், என்று சொல்லிக்கொண்டு இறந்துபோன சத்ருவான துச்சாசனனை எறிந்துவிட்டு, கோபத்துடன் சீக்கிரமே துரியோதனனிடம் ஓடிவந்தார். ஓடிவரும் க்ரூரமான பராக்கிரமமுள்ள பீமசேனரைப் பார்த்து துரியோதனன் மிக்க பயமுள்ளவனாய் ஓடினான். இரு பக்கத்து சைனியங்களும் பயந்து பீமசேனரைவிட்டு ஓடிற்று. ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனர்களை தவிர மற்றவர்கள் எல்லோராலும் யுத்த பூமி ஓர் முகூர்த்த காலம் சூன்யமாய் ஆயிற்று. பீமசேனர் பதினாறடி வேங்கை போல் கைகால்களை யுத்த பூமியில் ஊன்றிக்கொண்டு சந்தோஷத்துடன் ஒரு முகூர்த்த காலம் நர்த்தனம் செய்தார். யுத்த பூமியில் சத்ருக்களை பசுவாய் எண்ணி வேங்கையைப்போல் பீமசேனர் செய்த காரியத்தைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ணார்ஜுனர்கள் சிரித்தனர். மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் பீமசேனரை ஸ்தோத்திரம் செய்தனர்.

## கர்ணார்ஜுனர்களின் மகாயுத்தம்.

எப்பொழுது பீமசேனர் அந்த யுத்த பூமியை ஓர் முகூர்த்த காலம் சூன்யமாய்ச் செய்தாரோ, அப்பொழுது அதன்பிறகு துரியோதனனின் தம்பிகள் மேலான ஞானம் பலம் இவைகளைக் கொண்ட பீமசேனரின்மீது பாணசமூகங்களால்விருஷ்டி செய்தார்கள். வீரனான பீமசேனர் பாணசிரேஷ்டங்களால் அவர்களின் சிரத்தைச்சேதித்து யமனிடம் சீக்கிரமே அனுப்பித்தார். அன்று திருதராஷ்டிரனின் பிள்ளைகள் 20 பேர் பிராணனை விட்டார்கள். மற்றவர்கள் யுத்தத்தினின்றும் ஓடிப்போனார்கள். பீமசேனர் இவ்வாறு இதரர்களால் அசாத்யமான காரியங்களைச்செய்யும்பொழுதும் சத்ரு சமூகம் மிகுந்த பயத்தை அடைந்தபொழுதும் கர்ணன் பயத்தால் கண்ணை மூடிக்கொண்டிருக்கும்பொழுதும் கர்ணனின் பிள்ளையான விருஷஸேனன் நகுலனிடம் ஓடிவந்தான். நகுலன் பாண சமூகங்களால் விருஷஸேனனைத்தடுத்தான். கத்தி கேடயத்தை எடுத்துக்கொண்டு விருஷஸேனனின் மூவாயிரம் சிப்பாய்களை ஸம்ஹாரம் செய்தான். விருஷஸேனன் கேடயத்தைச் சேதித்து, பாணசமூகங்களால் பீமார்ஜுனாதிகள்மீதுவிருஷ்டிசெய்தான். அர்ஜுனன் பாணத்தால் விருஷஸேனனின் கழுத்து புஜங்கள் தொடைகள் இவைகளை ஒரே தடவையில் சேதித்தான். ஒரே பாணத்தால் தன் மகனான விருஷஸேனனை அர்ஜுனன் ஸம்ஹாரம் செய்யவும், கர்ணன் அர்ஜுனனிடம் யுத்தத்திற்கு வந்தான். ஸர்வாஸ்திரங்களையும் அறிந்தவர்களில் சிரேஷ்டர்களான கர்ணன் அர்ஜுனன் இவர்களுக்குள், பயங்கரமாயும் அற்புதமாயுமுள்ள இரட்டை ரதயுத்தம் நடந்தது. அர்ஜுனனின் கக்ஷியில் தேவதைகளும், கர்ணனுடைய கக்ஷியில் தைத்யர்களும், ஆகாயத்தில் கூடியிருந்த மற்ற பூதங்கள் பிசாசங்கள் முதலிய ஜீவன்களும், சந்தோஷமடைந்தனர். கர்ணார்ஜுனர்களின் நிமித்தமாக இந்த தேவதைத்யர்களுக்குள், கர்ணன் ஜயிக்கிறான், அர்ஜுனன் ஜயிக்கிறான், என்று மகத்தான கலகம் ஏற்பட்டது. அப்பொழுது பரமசிவன் ப்ரம்மாவைப்பார்த்துச் சொன்னார், தேவதைத்யர்களுக்கு பீமசேனரும் துரியோதனனும் முறையே ஆசிரயமாய் இருப்பவர்கள். பீமசேனருக்கு ப்ரியன் பிராணத்துக்கு ஸமானன், அர்ஜுனன். துரியோதனனுக்கு ப்ரியன் பிராணத்துக்கு ஸமானன் கர்ணன், அந்த காரணத்தால் தேவதைத்யர்கள் கர்ணார்ஜுனன் பொருட்டு யுத்தம்செய்ய விரும்புகின்றனர். யுத்தம் ஏற்பட்டால் உலகத்திற்கு மகத்தான நாசம் உண்டாகும். ஆகவே கர்ணார்ஜுனர்களுக்குள் யுத்தம் ஸமமாகவே இருக்கட்டும், என்றிவ்வாறு பரமசிவன் சொல்லவும், மகேந்திரன் ப்ரம்மாவைப்பார்த்து இவ்வாறு சொன்னான். ஸ்ரீகிருஷ்ணர் எவ்விடத்திலோ ஜயமும் அவ்விடத்தில் தான். ஸ்ரீகிருஷ்ணரின் ஸங்கல்பம் வியர்த்தமாகாது. அர்ஜுனனுக்கு ஜயம் தருவேனென்று அவருடைய ஸங்கல்பம் இருக்கிறது, என்று சொல்லும் மகேந்திரன் அர்ஜுனனுக்கே ஜயமுண்டாகட்டும், கர்ணன் கொல்லப்படட்டும், என்று சொல்லி பிரம்மாவை நமஸ்கரித்தான். ப்ரம்மாவும் அப்படியே ஆகட்டும் என்று சொன்னார். ஹே தேவதைத்யர்களே! நீங்கள் கர்ணார்ஜுனர்கள் பொருட்டோ பீமசேன துரியோதனன் பொருட்டோ

எப்பொழுதும் விரோதம் செய்யாதேயுங்கள். யுத்தத்தைப்பாருங்
கள். என்று பிரம்மா சொல்லவும், தேவதைத்யர்கள் ஸமாதான
மடைந்து, கர்ணார்ஜுனர்களின் யுத்தத்தைப் பார்த்திருந்தார்கள்.
கர்ணனும் அர்ஜுனனும் மகா அஸ்திர சஸ்திரங்களால் ஒருவருக்
கொருவர் விருஷ்டி செய்துகொண்டனர். பீமஸேனர் ரதத்தில்
உட்கார்ந்துகொண்டு தம்பியான அர்ஜுனனை ஸம்ரக்ஷித்தார்.
ஸாத்யகி திருஷ்டத்யும்னன் முதலானவர்கள் அர்ஜுனனை சுற்றி
லும் கர்ஜித்துக்கொண்டு நின்றனர். துரியோதனன் அசுவத்
தாமா முதலானவர்கள் சுற்றியிருந்து கர்ணனுக்கு ரக்ஷகர்களா
னார்கள். அந்த யுத்தத்தில் கர்ணன் அர்ஜுனனை மீறி பாண சமூ
கங்களால் அர்ஜுனனை அடித்தான். அப்பொழுது பீமஸேனர்
கோபங்கொண்டு கதாயுதத்தை தூக்கிக்கொண்டு, நான் இந்த கர்
ணனை கதாயுதத்தால் ப்ரஹாரம் செய்கிறேன், ஹே அர்ஜுனா!
நீயாகிலும் வீரியங்கொண்டு கர்ணனைக்கொல் என்று சொன்னார்.
ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனிடம் நரனுடைய ஆவேசத்தை மறுபடி
யும் வியக்தம் செய்துகொண்டு, உத்ஸாகப்படுத்தும் வார்த்தைகளால்
போதித்தார். அப்பொழுது அர்ஜுனன் விருத்தியடைந்த சக்தி
யுள்ளவனாய், கிருதவர்மாவுடன் சேர்ந்த துரியோதனன் அசுவத்
தாமா கிருபாசாரியார் இவர்களை, ஒரே சமயம் பாணங்களால் ரத
மில்லாதவர்களாய்ச்செய்தான். சத்ருஸம்ஹாரகனான அர்ஜுனன்
நல்ல முனைகளுடன்கூடிய பாணங்களால் அடித்தான். துரியோத
னாதிகள் ஆச்சரியத்தை உண்டுபண்ணும் அந்த கர்ணார்ஜுனர்
களின் இரட்டை ரதயுத்தத்தைப் பார்த்துக்கொண்டு சிறிது
தூரத்தில் நின்றனர். அசுவத்தாமாசாரியார் அர்ஜுனனுடைய
லோக விலக்ஷணமான யுத்தகாரியத்தைப் பார்த்து, தன் கையால்
துரியோதனனின் கையைப்பிடித்துக்கொண்டு அவனிடமிவ்வாறு
சொன்னார். ஹே துரியோதனா! பீமஸேனனின் பலமிப்பேர்ப்பட்ட
தென்பதை நீ இப்பொழுது கண்டாய். அப்படியே அர்ஜுனனு
டைய பலமும் இப்பொழுது நீ காண்கிறாய். நாம் தோல்வியடைந்
திருக்கிறோம். பாண்டவர்களுடன் விரோதம் போதும். பாண்ட
வர்களுடன் சேர்ந்து என்னுடன் கூட ராஜ்யத்தை ஸம்ரக்ஷணம்
செய். நான் யுத்தம் வேண்டாமென்று தடுத்தால் அர்ஜுனன்



யுத்தம் செய்யாமல் நிற்பான். ஸ்ரீகிருஷ்ணர் விரோதத்தை அபே
க்ஷிக்கிறதே இல்லை. பீமஸேனர் ஸ்ரீகிருஷ்ணரின் வார்த்தையில்
எப்போதும் அடங்கியவர். தர்மபுத்திரர் எப்பொழுதும் சமா
தானத்திலேயே மனதுகொண்டவர். நகுல சகதேவர்கள் சாந்த
மான மனதுடையவர்கள். உன் நன்மைக்குச்சொன்ன இந்த
என் வார்த்தையை ஏற்றுக்கொள். எனக்கு மரணம் ஏற்படு
கிறதே என்ற பயத்தால் நான் இப்படி சொல்லவில்லை. நானும்
என் தாய் மாமனான கிருபாசாரியாரும சிரஞ்சீவியாயிருப்பதால்
யாராலும் கொல்லமுடியாதவர்கள். என்றிவ்வாறு அசுவத்தாமா
சாரியாரால் சொல்லப்பட்ட துரியோதனன் அவரைப்பார்த்து
இவ்வாறு சொன்னான். பீமஸேனன் இப்பொழுது துச்சாசன
னின் ரக்தத்தை பானம் செய்தான். ஆகையால் எப்பொழுதும்
எனக்கு பீமஸேனனுடன் சமாதானம் ஏற்படாது. என்று துரி
யோதனன் சொல்லவும் அசுவத்தாமாசாரியார் பேசாமல் இருந்து
விட்டார். கர்ணனும் அர்ஜுனனும் மகா அஸ்திரசஸ்திரங்களின்
விருஷ்டியால் வானத்தை இடைவெளியன்னியில் செய்தனர்.
இவ்விருவர்களும் பரஸ்பரம் கொல்வதற்காக ஆக்னேயாஸ்திரம்
வாருணாஸ்திரம் ஐந்த்ராஸ்திரம் ஸௌராஸ்திரம் முதலான அஸ்
திரங்களையும் பிரம்மாஸ்திரத்தையும் உபயோகித்து அந்த யுத்தத்
தில் கர்ஜித்தனர். அந்தயுத்தத்தில் கிரமமாய் விருத்தியடைந்த
மேலான பலமுள்ள அர்ஜுனனால் தோற்றுப்போன கர்ணன்,
ஸர்பஸ்வரூபமான பாணச்ரேஷ்டத்தில் பிரம்மாஸ்திரத்தை அபி
மந்திரித்து அர்ஜுனனிடம் விட்டான். ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுன
னின் ரதத்தை பூமியில் புதையச்செய்து, அந்த பாணத்தை அர்
ஜுனன் விஷயத்தில் வியர்த்தமாக்கினார். ஸர்பம் பிரவேசித்திருந்த
அந்த பாணத்தால் அர்ஜுனனுக்கு இந்திரன் கொடுத்திருந்த கிரீ
டம் பொடியாய் போயிற்று. அந்த பாணத்தில் பிரவேசித்திருந்த
அசுவஸேனன் என்ற ஸர்பன் ஆகாயத்தில் சென்றான். ஸாரதி
யான ஸ்ரீ கிருஷ்ணரால் அர்ஜுனனுடைய ரதம் பூமியில் ஐந்து
விறக்கடை அளவு புதைந்து போகவும், கர்ணன் அர்ஜுனனு
டைய கண்ணுக்கு ஸரியாய் குறி வைத்து விட்ட ஸர்பம்
அர்ஜுனனுடைய கிரீடத்தை பொடியாக்கி ஆகாயத்திற்கு செல்ல
வும் ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணரால் சொல்லப்பட்ட அர்ஜுனன்
காண்டவ வனத்தைக் கொளுத்திய காலத்தில் தன்னிடம் துவே
ஷங்கொண்ட தக்ஷகனின் மகனான அசுவஸேனனை பாணங்களால்
கொன்று, கர்ணன் பார்க்கும்பொழுதே பூமியில் வீழ்த்தினான்.
கர்ணன் பரசுராமரால் பிரம்மாஸ்திரம் விடுங்காலத்தில் மகா
வேகத்தை ஸம்பாதித்துக்கொண்டிருந்தானதலால் அர்ஜுனனால்

அந்த அஸ்திரயுக்தமான பாணத்தை பரிஹாரம் செய்துகொள்ள முடியவில்லை,

## கர்ணனின் வதம்.

மீண்டும் அர்ஜுனனின் மகா அஸ்திரங்களால் யுத்தம் செய்யும் கர்ணனின் ரதத்தின் சக்கரத்தை ப்ராம்மணனுடைய சாபத்தால் பூமி விழுங்கினாள். பரசுராமரின் சாபத்தால் திவ்யமான அஸ்திரங்கள் கர்ணனுக்கு மறந்து போயின. கர்ணன் பூமியில் புதைந்துபோன ரதத்தின் சக்கரத்தை தூக்கவேண்டுமென்று விரும்பி, அர்ஜுனனை ஸாவகாசம் கொடுக்கயாசித்தான். ஸ்ரீ கிருஷ்ணர் தராதே என்று அர்ஜுனனுக்கு சொன்னார். அர்ஜுனன் பரமசிவன் கொடுத்த அஞ்ஜலிகை என்ற பாணத்தை எடுத்தான். அந்த பாணத்தில் அர்ஜுனன் தன் ஸத்யத்தையும் தர்மங்களையும் ஸ்தாபித்து, கர்ணனைக் கொல்லும் பொருட்டு பாணத்தை விட்டான். இந்த பாணத்தை சேதிப்பதற்காக மகா க்ரூரமான ஒரு பாணச்ரேஷ்டத்தை, தனுஸ்ஸில் ஸந்தானம் செய்ய இச்சித்துக்கொண்டிருந்த கர்ணனுடைய சிரஸ்ஸை அர்ஜுனன் அந்த பாணத்தாலேயே சேதித்தான். கர்ணனுடைய ஸேனாதிபத்யத்தின் இரண்டாவது நாளின் நான்காம் பாகமான அபரான்ஹ காலத்தில் அர்ஜுனனுடைய அஞ்சலிகம் என்ற பாணத்தால் வெட்டுப்பட்டுப்போன கர்ணனுடைய தலை, யுத்த பூமியில் துள்ளித்துள்ளி விழுந்தது.. கர்ணன் கொல்லப்பட்டுப் பட்டுப்போகவும், துரியோதனன் வாடிய முகமுள்ளவனாய் சல்யராஜனுடன் கூடி தன் ஸைனியத்தைத் திருப்பிக்கொண்டு டேராவுக்குச் சென்றான். தர்மபுத்திரர் கர்ணனுடைய ஸம்ஹாரத்தைக்கேட்டுவிட்டு, அப்பொழுது யுத்த பூமிக்கு வந்து, கர்ணனின் சரீரத்தைக்கண்டான். ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனன் பீமசேனர் மற்றும் யுத்தத்தில் அதிவீரர்களான த்ருஷ்டத்யும்னன் ஸாத்யகி முதலானவர்களையும் தர்மபுத்திரர் சிலாகித்தார். எப்பொழுதும் ஸ்ரீ கிருஷ்ணரை அனுஸரித்த பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணருடன் சேர்ந்து டேராவுக்கு வந்து சந்தோஷமுள்ளவர்களாய் வாசம் செய்தனர்.

ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் இயற்றிய
ஸ்ரீ மகாபாரத தாத்பரிய நிர்ணயத்தில் கர்ண பர்வத கதை
அடங்கிய இருபத்தி ஏழாவது அத்யாயம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

# கும்பகோணத்தில் ஓர் கண்டனக்கூட்டம்.

---

தீண்டாதார் ஆலயப்ரவேசம் செய்யலாமெனச் சமீபத்தில் திருவனந்தபுரம் மகாராஜா அவர்கள் வெளியிட்ட அறிக்கையைக்குறித்து ஸநாதனிகளின் மனதில் ஏற்பட்ட மனத்தாங்கலை அறிவிக்கவும், அதை கண்டிக்கவும் இந்நகர் ரெட்டிராயர் குளம் கீழ்கரையிலுள்ள ஸ்ரீராமமந்திர பாடசாலை கட்டிடத்தில் 17—1—37 பானுவாரம் மாலை 6 மணிக்கு ஸ்ரீ உபய வே மகா மஹோபாத்தியாயம் பண்டிதராஜ் அபிநவபட்டபாண R V. கிருஷ்ணமாசாரியார் அவர்களின் தலைமையின்கீழ் இந்நகர் த்ரிமதஸ்தர்களின் ஸநாதனிகளின் பெருங்கூட்டமொன்று கூடியது. இச் செய்தியை விளம்பரம்செய்த ஸ்ரீமான்களான 1. பாகவத ரங்கனாதாசாரியார் (மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர்) 2. எம். ராம ராவ், (மாத்வ கலைஞான சங்கக்காரிய தரிசி) 3. வட்டங்காடு கோபாலாசாரியார் (துவைத பாடசாலை போதகர்) 4. கே. ஆர். ரகுநாதராவ், (மிராசுதார்) 5 வி. எஸ். முத்துஸ்வாமி அய்யர், (கம்பராமாயண கேஸரி) 6. எஸ். மகாலிங்கய்யர், பி. ஏ., பி. எல்., 7. ஜி. வி. வெங்கட்டராம அய்யர், பி. ஏ., பி. எல்., 8. ஏ. சுப்பிரமணிய ஐயர், பி. ஏ., 9. ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் (அத்வைத பாடசாலை போதகர்) 10. வி. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், 11. ராமானுஜ தாதாசாரியார் (அக்னி ஹோத்திரம்) 12. எஸ் ஸ்வாமிநாத சாஸ்திரிகள் (மாஜி இஞ்சினியர்) 13. கோபால தேசிகாசாரியார் (ஆரியதர்மம் பத்திரிகாசிரியர்) 14. வி.வி. ஜகந்நாதாசாரியார் பி. ஏ., பி. எல்., இவர்களின் கையொப்பமுள்ள துண்டு பிரசுரங்கள் நகரெங்கும் ஏராளமாய் வழங்கப்பட்டிருந்தன. 1 திருவனந்தபுரம் ஆலயப்ரவேச அறிக்கை தேவாலய பூஜைக்குரித்ததான சம்பிரதாயம் ஆகமம் சாஸ்திரம் இவைகளுக்கு விரோதமானதென்றும் 2 திருவனந்தபுரம் மகாராஜா சாஸ்திரங்களின் அர்த்தத்திற்கும் சம்பிரதாயங்களுக்கும் விருத்தமான தன் சொந்த அபிப்பிராயத்தை அனுசரிக்க தன் பிரஜைகளை நிர்பந்தித்திருப்பதைத் குறித்து மிகவும் வருந்துவதாகவும் அரசனுக்கு ஸநாதன தர்மத்தைப் பின்பற்றி நடக்கமட்டில் அதிகாரம் உண்டேயல்லாது சாஸ்திரங்களை [illegible] களாலும். ஆஸ்திகர்களாலும் அர்த்தம் செய்ய[illegible]ல் விதித

மான விதிநிஷேத தர்மங்களை மாறுபடுத்த அதிகாரமில்லை என்று உறுதி கூறுவதாகவும் 3 சீர்திருத்தக்காரர்களின் நிர்பந்தத்தால் இந்த திருவனந்தபுரம் அறிக்கை அவ்வூர் அரசனால் மதவிரோதமாகவும் சநாதன சம்பிரதாய விரோதமாகவும் பலவந்தமாகவும் செய்யப்பட்டிருப்பதாய் எண்ணுகிறபடியால் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள கவர்ன்மெண்டாரும் ராஜீய வாதிகளும் மதத்தில் தலையிடக்கூடாதென்று வற்புறுத்த இதர ப்ரதேசங்களிலுள்ள ஸநாதனிகளின் ஸ்வாதந்திரியம் இந்த அறிக்கையால் பாதிக்கப்படவில்லை என்றும் 4 பொது ஜனங்கள் தவறாய் எண்ணும்படி சமாசாரங்களை மிகைபடுத்தி ஒருதலை பக்ஷமாக சில பத்திரிகைகள் பிரசாரம் செய்துவருவதைக் கண்டிப்பதாயும் 5 வேதசாஸ்திரங்களை அஸ்திவாரமாகக் கொண்டிருக்கும் ஸநாதன தர்மத்தை திடமாய் கைக்கொண்ட ஸநாதனிகளின் தைரியத்தை எந்த சட்டமும் எந்த ராஜீயவாத பிரசாரமும் எந்த கட்டுப்பாடான நிர்பந்தமும் எப்போதும் கலைக்காதென்றும் 6 எல்லா ஊர்களிலுமுள்ள ஸநாதனிகள் தங்கள் எதிராளிகளின் பலத்தையோ கூட்டத்தையோக்கண்டு அஞ்சி மௌனமாய் இராமல் இந்த ஆலயப்பிரவேச விஷயமாயுள்ள தங்கள் சொந்த அபிப்பிராயங்களை பகிரங்கமாய் கூறவேண்டியதுடன் சட்டசபை அபேக்ஷகர்களிடம் வாதாடி வற்புறுத்தி உறுதிமொழி வாங்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின. ஸ்ரீமான் M. ராமராவ் இந்த அறிக்கை பொதுவாய் எல்லா மதத்தினரின் ஸநாதன தர்மத்தை வேருடன் அழிப்பதாய் இருப்பதுடன் ஸ்ரீ அநந்தபத்மநாபமூர்த்தியை உபாஸனை தெய்வமாகக்கொண்டு அநந்தவிரதத்தை அனுஷ்டிக்கும் மாத்வ சமூகத்தாரின் ஆசார அனுஷ்டானத்தையே தொலைப்பதாய் இருப்பதால் நாடெங்கும் மாத்வர்கள் இச்சமயம் எழுந்து பலமானக் கிளர்ச்சி செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார். தற்கால நாகரீக உலகில் பத்திரிகைகள்தான் தம் இஷ்டப்படி ஜனங்களை ஆட்டிவைப்பதால் திருவனந்தபுரத்து இந்த அறிக்கை விஷயத்திலும் பத்திரிகைகள் ஒருதலை பக்ஷமான ஸமாசாரங்களையே பிரசுரித்து ஆஸ்திகர்களின் மனதையும் கலக்கிவருவதாய் ஸ்ரீமான் மகாலிங்கய்யர் குறிப்பிட்டார். ஸ்ரீமான் T. L. சுப்பய்யர் ஆலயப்ரவேச விஷயமாக ஏற்கனவே நமது ஆக்ஷேபங்களை பெருவாரியாய் அரசாங்கத்தாருக்கு முன்பு அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் தற்போதும் சநாதனிகள் விடாமுயற்சியுடன் உழைக்கவேண்டுமென்றும் விஸ்தாரமாய் விளக்கினார். ஸ்ரீமான் முத்துஸ்வாமி அய்யர் த்ரிசங்கு முதலியவர்கள் சண்டாளத்வத்தை அடைந்து தீண்டாதார்களாயிருந்ததை தமிழ்நூல்களிலிருந்து எடுத்துக்காட்டினார்.



ஸ்ரீமான் ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் சைவாகமங்களிலிருந்து தீண்டாதார்கள் ஸ்வாமிதரிசனம் செய்யத்தகுதியான ஸ்தலம் இன்னதென்பதை எடுத்துரைத்தார். ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசாரியார் ஜனசமூகத்தினிடையே மத சிரத்தை குறைந்திருப்பதை வளரச்செய்ய வேண்டுமென்பதை வெகு அழகாய் கூறினார். ஆரியதர்மம் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் கோபால தேசிகாசாரியார் இந்த திருவனந்தபுரம் சம்பவம் ஜாதி மத பேதத்தையே வேருடன் அழித்துவிட ராஜீய வாதிகள்செய்த பெரும் சூழ்ச்சியே என்றும் சமீபத்தில் நடக்கப்போகும் சட்டசபைக்கு அபேக்ஷகராக நிற்பவர்களிடமிருந்து வாக்குறுதி வாங்கித்தான் அவர்களுக்கு வோட் அளிக்கவேண்டுமென்றும் பல அத்தாக்ஷிகளுடன் நிரூபித்தார். எல்லா சநாதனிகளுக்கும் பொதுவான ஸ்ரீ அநந்த பத்மநாபரின் கோயிலை சாஸ்திர விருத்தமாய் தீண்டாதார்களுக்கு திறந்துவிட திருவனந்தபுரம் மகாராஜாவுக்கு அதிகாரமில்லை என்றும் பத்மநாபஸ்யதாஸ: பத்மநாபதாஸ: என்று இதுவரையில் தத்புருஷத்திலுள்ள அந்த ராஜனின் பெயர் பத்மநாப: தாஸ: யஸ்ய என்று பஹுவ்ரீஹியில் மாறியது வருந்தத்தக்கது என்றும் அந்த ராஜன் பத்மநாபமூர்த்திக்கு தாஸனாய் இருந்ததுபோய் பத்மநாபனை தாஸனாய்ச் செய்துகொண்ட இந்த அநீதச் செயல் எங்கும் பலமாக கண்டிக்கப்பட வேண்டுமென்றும் பலவாறு அறிவித்தார். கொச்சி மகாராஜா முதலியோர் இந்த அறிக்கையை ஆதரிக்காமல் ஸநாதனிகளின் பக்கத்திலிருப்பதைப் பாராட்டி ஸ்ரீமான் சாமிநாத சாஸ்திரிகள் பேச வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

## ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ராகவேந்திரரின் லீலை.

### தன்னை ஸேவைசெய்ய வற்புறுத்தல்.

ஸ்ரீரங்கத்திற்கு சுமார் 3மைல்தூரத்திலுள்ள மணச்சநல்லூர் என்னும்ஊரில் போர்டுஸ்கூல் டீச்சராகயிருக்கும் ஸ்ரீமான் M. சுந்தரராஜ ராவ் தன்குமாரன் சுமார் 3வயதுள்ள வேணுகோபாலன் என்னும் குழந்தைக்கு திடீரென்று இடுப்பின்கீழ் சுவாதீனமில்லா

மற்போய் ஓர் அடிகூட எடுத்துவைக்கமுடியாமலும் எழுந்து நிற்க கூடமுடியாமலும் சுமார் 15 நாள் வருந்தவும் கும்பகோணத்தில் தன் மாமனார் வீட்டில் இருந்துகொண்டு தகுந்த இங்கிலீஷ் சிகித்சை செய்ய புறப்பட்டு ஸ்ரீரங்கத்தில் வந்துதங்கவும், அன்று குருவாரமாயிருந்ததால் ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீராகவேந்திரரின் பிருந்தாவனத்திற்கு பஞ்சாமிருதாபிஷேகம் முதலியவைகள் நடத்தப்படுவதால், ஸ்ரீராகவேந்திர சற்குருவை தரிசித்து அவருடைய அனுக்ரஹம் பெற்றுப்போக பிருந்தாவனத்திற்கு வந்து சாஷ்டாங்கம் நமஸ்கரித்து பிரதக்ஷிணம் செய்துவரும்பொழுது, சுமார் 18 வயதுள்ள ஒரு மாத்வ பையன் மீது ஸ்ரீராகவேந்திரர் ஆவேசம் வந்து மேற்படி ராயரின் கையைப்பிடித்து மனக்கவலைப் படாதே! உன் பையன் நடக்க கால் தருகிறேன். என் சன்னிதானத்தில் உன் பையனைப்போடு. என்னை சேவை செய்வாயா என்று கேட்க, ராயர் அதில் என்ன ஆக்ஷேபனை அவ்வாறே செய்கிறேன் என்று சொல்ல, ஸ்ரீ ராகவேந்திரர் இதை மும்முறை ப்ரதிக்ஞை செய்யும்படி வற்புறுத்தி கை நீட்டினார். ராயரும் மிக்க பக்தியுடன் ப்ரதிக்ஞைசெய்து கும்பகோணத்திற்கு புறப்பட்ட பிரயாணத்தை நிறுத்தி குழந்தையை சன்னிதானத்தில்போட்டு, இந்த ஸம்வத்ஸரம் அநந்தவிரதத்தன்று ஸேவை செய்யத்தொடங்கவும், மறுநாளே குழந்தை எழுந்துநின்று அடிவைக்கத்தொடங்கியது எல்லோருக்கும் மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்தது. ஸ்ரீராகவேந்திரர் ஒருவரை தன்னை ஸேவை செய்ய வற்புறுத்தி அவர் ஸேவை செய்யத்தொடங்கியதுமே காலதாமதமின்றி அவர் மனோபீஷ்டத்தை பூர்த்திசெய்தது, கஷ்டப்படுபவர்களிடம் அவர் கொண்டிருக்கும் மேலான கருணையை நன்கு விளக்குகிறது. ஸேவை செய்து நாளடைவில் அந்த குழந்தை வேகமாய் நடக்கும் திறமையைப்பெற்றிருப்பதாயும் தற்போதுள்ள சிறிது அசௌகரியமும் தைலம் தடவுவதால் நிவிருத்தியாகுமென்று ஸ்வப்னம் விழுந்திருப்பதாயும் தெரியவருவதை நம்மவர்கள் ஸ்ரீகுருராகவேந்திரரின் சரணபக்தியில் ஈடுபட கவனிப்பார்களாக.

---



ஸ்ரீ நாராயணபண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமத்வ விஜயம்.

---

## பத்தாவது ஸர்க்கம்.

(முன் 176ம் பக்கம் தொடர்ச்சி.)

12. (ப்ரமிதாக்ஷரா விருத்தம்) என்றிவ்வாறு சொன்ன வார்த்தையால் ஸ்ரீமத்வாசாரியார் கருட மந்திரத்தை அறிந்தவன் மந்திர ஸாமர்த்தியத்தால் ஸர்பங்களை தடுப்பதுபோல் சத்ருக்களை தடுத்தார். அப்படியே தன் சிஷ்யஜனங்களை சத்ருசிப்பாய்களின் கையால் ஏற்படுவதாயிருந்த மரணபயமாகிய நதியினின்றும் தேவ நதியாகிய கங்கையினின்றும் ஒரே ஸமயம் தாண்டிவைத்தார்.

## மிலேச்ச பாஷை பேசியது.

13. (ஸ்வாகதா விருத்தம்) உலகத்துக்கு நியாமகரான ஸ்ரீ மத்வாசாரியார் க்ரூரர்களான ஆயிரக்கணக்காயுள்ள துலுக்க சிப்பாய்களால் சுற்றிலும் சூழப்பட்டிருந்தபோதிலும் பயம் நடுக்கம் முதலியவைகளில்லாத செயலுள்ளவராய் போய்க் கொண்டு, எப்படி குள்ளநரிகளின் கும்பல்களில் சிம்ஹச்ரேஷ்டம் விளங்குமோ அப்படி விளங்கினார். 14. (ரதோத்ததா விருத்தம்) தன் அரண்மனையின் உப்பரிகையின்மீது இருந்த அந்த மகம்மதிய அரசன் தேவர்கள் அசுரர்கள் இவர்களாலேயும் அசைக்க முடியாத சரீரமுள்ளவரும் மிக்க அழகான அவயவங்களுடன் கூடிய ரூபமுள்ளவரும் உயர்ந்திருப்பவருமான ஸ்ரீ மத்வாசாரியார் தன் நகரின் சமீபம் வந்ததைப்பார்த்து இவ்வாறு பேசினான். 15. (த்ருதவிலம்பிதம் விருத்தம்) தெளிவானமுகத்துடையவரே! சத்ருராஜாவின் இரகசிய ஜனங்கள் என்ற சந்தேகத்தால் வழிப் போக்கர்களை ஹிம்சிக்கும் காரியங்களில் மட்டில் ஈடுபட்டவர் களாயும் யமதூதர்கள்போல் கருணையில்லாதவர்களுமான என்னுடைய சேவகர்களால் எப்படி நீர் கொல்லப்படவில்லை. 16. (தோதக விருத்தம்) படகில்லாத கங்கையைத்தாண்டுதல் உமக்கு எப்படி ஏற்பட்டது. இது ஆச்சரியமே. இனி என்னசெய்யவிரும்பு கிறீர். இத்யாதி வார்த்தையைச் சொல்லும் அந்த மகம்மதிய

அரசனைக்கண்டு அவ்வரசனுடைய சபையில் ஸ்ரீஹரியின் அடியாராகிய ஸ்ரீமத்வாசாரியார் இவ்வாறு பேசினார். 17. (சாலினீ விருத்தம்) உலகத்தை எல்லாம் பிரகாசப்படுத்தும் இந்த சூரியனுள்ளே இருந்துவரும் நாராயணன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறாரோ அவருடைய மேலான அருளால் இதரர்களால் தாண்ட முடியாத கங்கையை நீந்தித்தாண்டல், துலுக்க சிப்பாய்களினின்றும் உயிர் தப்புதல் முதலிய எல்லா காரியங்களையும் நாம் செய்கிறோம். முதலில் நாம் சீக்கிரமே வடதிசை செல்கிறோம். இத்யாதி ஆச்சரியகரமான வார்த்தையை அந்த மகம்மதிய அரசனின் பார்ஸி பாஷையில் பேசினார். 18. (ப்ரஹர்ஷிணீ விருத்தம்) ஸ்ரீமத்வாசாரியாருடைய காம்பீர்யத்தையும் தைரியத்தையும் மேலான பராக்கிரமத்தையும் பெரிய தன்மையையும் படிப்பையும் பிரம்மதேஜஸ்ஸையும் இடம்காலம் இவைகளுக்கேற்ற பேச்சையும் நன்கு கேட்டு கண்டுகொண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு மகிழ்ந்து அந்த மகம்மதிய அரசன் ஆசாரியாருக்கு மகத்தான மரியாதைசெய்ய எண்ணி தக்ஷணமே தன் ராஜ்யத்தின் பாதிபாகத்தை மிக்க வணக்கத்துடன் அர்ப்பணம் செய்தான். 19. (வஸந்த திலகா விருத்தம்) சிக்ஷைக்கு அருகர் என்று ராஜபுருஷர்களின் மனதுக்குத்தோன்றிய ஸ்ரீமத்வாசாரியார், ராஜ்யத்துக்கு அருகர் என்று ராஜனுடைய மனதுக்கு தோன்றியவராய் ஆனார். ஆசாரியார் ஸன்னியாஸியாய் இருப்பதின் நிமித்தம் அரசனை துரும்பாய் எண்ணி அதட்டிப்பேசி பலவந்தமாய் முன்னே நடந்துபோக சக்தியுள்ளவராயிருந்தும் அயோக்யமான மிலேச்சபாஷையில் பேசியது சாமர்த்தியமில்லாத ஸாது இடம் காலம் சக்தி இவைகளுக்கேற்ற காரியங்களைச் செய்யவேண்டிய தவசியம் என்று உலகநீதியை அறிவிக்கவே தான்.

## கள்வர்களை வென்றது.

20. (சிகரிணீ விருத்தம்) ஒருசமயம் ஸ்ரீமத்வாசாரியார் வனத்தின் நடுவில் போய்க்கொண்டிருந்தபொழுது கள்வர்களின் கூட்டமொன்று தம்மை நோக்கி வருவதைப்பார்த்து தம் சிஷ்யர்களை எல்லாம் வேறொரு இடத்தில் இருக்கச்செய்து தம் உத்தரீயமான காஷாயத்தை சுருட்டி உருண்டையாய்ச்செய்து அது பண மூட்டை என்று அவர்களுக்கு அறிவை உண்டாக்கி, அதை கள்வர்களினிடையே கைமாறிப்போகவிட்டு, முன்பு குருபாண்டவ யுத்த காலத்தில் அர்ஜுனன் ஸம்மோகனாஸ்திரத்தை ஸம்ஸப்தகர்களின் கும்பலில் ப்ரயோகம்செய்து, அவர்களில் ஒருவருக்கொருவர் அர்ஜுனன் என்று மோகமடைந்து பரஸ்பரம் கொல்லப்பட்டதுபோல் கள்வர்களில் ஒருவருக்கொருவர் அந்த பண மூட்டையை தான்தான் அடைவேன், தான்தான் அடைவேன் என்று ஆக்ரஹமடைந்தவர்களாய் பரஸ்பரம் கொல்லப்படும்படி செய்தார். 21. (மணிமாலா விருத்தம்) குணபூர்ணரான ஸ்ரீமத்வாசாரியார் மற்றொரு இடத்தில் தம்மைக்கொல்ல விருப்பங்கொண்டு வந்த நூற்றுக்கணக்கான பராக்கிரமம் மிகுந்த கள்வர்களை, அவர்களில் ஒருவன் கையில் வைத்துக்கொண்டிருந்த கைக்கோடாரியை தம் சிஷ்யரான உபேந்திர தீர்த்தரால் பிடுங்கச்செய்து, அந்த கல்வத்தலைவனை அதனால் பலமாய்அடிக்கச்செய்து எல்லோரையும் நொடிப்பொழுதில் விரட்டிவிட்டார். 22. (ப்ரமாணிகா விருத்தம்) வேறொரு இடத்தில் கள்வர்கள் எதிர்த்துவந்துசேர அவர்களின் கண்ணுக்கு ஸ்ரீமத்வாசாரியார் சிஷ்யர்களுடன் கற்பாறைகளாக புலப்பட்டதனால் இந்த கற்பாறைகளை மனிதர்களென்று தப்பாய் எண்ணினோம் என்றுசொல்லி அவர்களைவிட்டு விலகிச்சென்றனர். சிறிது நேரத்திற்கெல்லாம் சிஷ்ய கூட்டங்களுடன் ஆசாரியார் மூர்த்திமானாய் நடந்து போவதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு அவருடையமகிமைக்கு மகிழ்ந்தவர்களாய் ஆசாரியாரை ஸாஷ்டாங்கம் நமஸ்கரித்தனர்.



## வேங்கையை வென்றது.

23. (வித்யுன்மாலா விருத்தம்) இமயமலைக்கருகில் ஆசாரியாரின் பூஜைப்பெட்டியை எடுத்துக்கொண்டு எல்லோருக்கும் முன்பாக போய்க்கொண்டிருந்த ஸத்யதீர்த்தரைக் கொல்லவந்த வேங்கையின் சரீரம் கொண்ட ச்ரேஷ்டனை ஓர் அசுரனை ஸ்ரீமத்வாசாரியார் தம் கையை விளையாட்டாய் மெதுவாய் அசக்கி வெகுதூரம் தள்ளிவிட்டார்.

## வியாஸ முஷ்டியைப் பெற்றது.

24. (மாணவக விருத்தம்) ஸ்ரீமத்வாசாரியார் சிறு பதரிக்கு வந்து அங்கு சிஷ்யர்களை இருக்கச்செய்து மனிதர்கள் போக முடியாத பெரிய பதரிக்குச்சென்று விஷ்ணுவைஷ்ணவத்வேஷம் மிகுந்தவர்களுக்கு விரோதியானவரும் மகாலட்சுமியுடன் கூடியவருமான லக்ஷ்மி நாராயணர் ஸந்நிதானமடைந்திருக்கும் பரிசுத்தமான எட்டு வியாஸ முஷ்டி என்னும் எட்டுசிலா ப்ரதிமைகளை நாராயணரான ஸ்ரீவேதவியாஸரிடமிருந்து ஸ்ரீமத்வாசாரியார் அடையப்பெற்றார்.

## மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் இயற்ற ஆக்ஞை.

25. (வாதோர்மீ விருத்தம்) எட்டு வியாஸ முஷ்டிகளைக் கொடுத்தபின் பராசரரின் பிள்ளையான ஸ்ரீவேதவியாஸர் பரமாத்மாவின் ஸ்வரூபத்தை முக்தியோர்களுக்கு அறிவிப்பதற்காக ஸ்ரீ மகாபாரதத்திற்கு தான் கொண்டிருக்கும் அர்த்தத்தை ஸ்பஷ்டமாய் வெளியே பிரசாரமடையும்படி எடுத்துச்சொல்ல ஸ்ரீமத்வாசாரியாரை அவர் ஒருவரே உலகில் ஸமஸ்தமான குணங்கள் நிறைந்தவர் என்பதை தெரிந்துகொண்டு ஆக்ஞையிட்டார்.

## ஜலஸ்தம்பம் செய்தது.

26. (இந்திரா வஜ்ஜிரா விருத்தம்) இவ்வாறு ஸ்ரீவேத வியாஸரால் ஆக்ஞையிடப்பட்டவராயும் ஜீவோத்தமராயுமுள்ள ஸ்ரீமத்வாசாரியார் பதரிகாசிரமத்திலிருந்து திரும்பிவரும்பொழுது பரிசுத்தமான தீர்த்தங்களின் கரைகளிலும் குருக்ஷேத்திரம் முதலான க்ஷேத்திரங்களிலேயுமுள்ள ஸ்ரீஹரியை நன்கு நமஸ்காரம் செய்து ஸ்தோத்திரம் செய்துவிட்டு உயர்ந்து வரிசை வரிசையாய் அலைகள் வீசும் கங்கைக்கு சிஷ்யர்களுடன் மீண்டும் வந்து சேர்ந்தார். 27. (உபேந்திர வஜ்ஜிரா விருத்தம்) ஸ்ரீமத்வாசாரியார் அந்த கங்கை சத்ருக்களின் பயத்தால் படகு இல்லாமலிருப்பதையும் அச்சமயம் கமலபந்துவான சூரியன் சமுத்ரத்தை அடைந்து அஸ்தமயமானதையும் கண்டு அதனால் சிஷ்யர்கள் மிக்க அதிகமாய் பரபரப்படைந்து இனி என்ன செய்வது என்று துக்கப்பட்டுக்கொண்டு கரையில் உட்கார்ந்ததையும் பார்த்து அவர்களை அங்கே



சிறிதுநேரம் இருக்கும்படி சொல்லிவிட்டு சுயம் ஒருவராகவே ஜலஸ்தம்பம் யோகத்தைக்கொண்டு, தான் தரித்திருந்த வஸ்திரம் நனையாமலும் சரீரத்தில் ஜலம்படாமலும் கங்கையின் ஜலத்தின் மீது தரையைப்போல் கால் நடையாய் நடந்து அதைத்தாண்டி அக்கரைபோய் சேர்ந்தார். 28. (உபஜாதி விருத்தம்) இந்த சிஷ்யர்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் முதல்ரூபமென்று கேட்டிருக்கும் ஹனுமார் சமுத்திரத்தைத் தாண்டினவர் என்று ஞாபகப்படுத்திக் கொள்ளவில்லை; அல்லது இரண்டாவது ரூபமான பீமசேனர் குமாரராய் இருக்கும்பொழுது இந்த கங்கையில் கைமாறுபோட்டு நீந்தித் தாண்டியவர் என்று ஞாபகப்படுத்திக் கொள்ளவில்லை. அவ்வாறு அவர்களுக்கு ஞாபகமிருக்கும்பக்ஷத்தில், அந்த ஹனுமார் பீமசேனர் இவர்களின் சொரூபராய் கங்கையைத்தாண்டும் சாமர்த்தியமுள்ளவரான ஸ்ரீமத்வாசாரியாருக்கு இந்தகங்கையைத் தாண்டும் சக்தி இருப்பதை அவர்கள் சந்தேகப்பட்டு துக்கப் பட்டிருக்கமாட்டார்கள்.

(தொடரும்.)

# ஆசாரமாலை.

---

(முன் 149ம் பக்கம் தொடர்ச்சி).

**7. ஸவிதா பஸ்சாதாத் ஸவிதா புரஸ்தாத் ஸவிதோத்தராதாத் ஸவிதாதராத்தாத் ஸவிதா ந: ஸுவது ஸர்வதாதிம் ஸவிதா நோராஸதாம் ॥ தீர்க்கமாயு: ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: சதுஸ்ஸாகர பர்யந்தம் கோப்ராம்மணேப்ய: சுபமஸ்து ॥**

ஸவிதா என்னும் பகவான் நாராயணன், பின்னாடியும் முன்னாடியும் மேலேயும் கீழேயும் எங்களைக் காப்பாற்றட்டும். எல்லா கஷ்டங்களையும் நிவிருத்தி செய்யட்டும். ஆயுஸ் தீர்க்கமாய் விருத்தியாகட்டும். மங்களமாகட்டும். மனோ சாந்தியும் பாப சாந்தியும் ஜன்ம சாந்தியும் உண்டாகட்டும். நான்கு சமுத்திரங்களின் நடுவிலுள்ள பூபாகத்திலிருந்து வரும் ஸமஸ்த ப்ராம்மணர்களுக்கும் பசுக்களுக்கும் மங்களமுண்டாகட்டும். இக்கோத்திரத்தில் பிறந்த இன்ன பெயருடையவன் நமஸ்காரம் செய்கிறேன்.

யஸ்ய ஸ்மிருத்யா ச நாமோக்த்யா தப: ஸந்த்யா க்ரியாதிஷு। ந்யூனம் ஸம்பூர்ணதாம் யாதி ஸத்யோ வந்தே தமச்யுதம் ॥ மந்த்ர ஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம் ரமாபதே । யத்கிருதம் து மயா தேவ பரிபூர்ணம் ததஸ்துமே ॥ அநேந ஸந்த்யோபாஸனேன பகவான் ஸ்ரீமத்வாசாரியாணும் ஹ்ருதயகமலமத்யநிவாஸீ அநந்த கல்யாண குண பரிபூர்ண: க்ஷீராப்திசாயீ நிர்தோஷ ஞானாநந்தாத்மா விஷ்ணுர்மேஸ்வாமீ பாரதீரமண முக்ய ப்ராணாந்தர்கத ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண: ப்ரீயதாம் ப்ரீதோவரதோபவது । ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ॥

*யாரை நினைப்பதாலும் சரியே யாருடைய பெயரை உச்சரிப்பதாலும் சரியே தபஸ் ஸந்தியாவந்தனம் முதலான கர்மங்களில் மந்திர லோபம் க்ரியா லோபம் முதலியவைகளிருந்தபோதிலும் அந்த கர்மங்கள் இந்தக்குறையான கார்யமில்லாமல் பூர்ணமாய்ச் செய்ததின் புண்யம் எற்படுகிறதோ அப்பேர்ப்பட்ட நாசமில்லாதவரான அச்யுதனை இப்பொழுது நமஸ்கரிக்கிறேன். ஹே லக்ஷ்மீபதியே! நான் செய்த கர்மா மந்திரம் பூர்ணமில்லாமலும் பக்தியில்லாமலும் செய்யப்பட்டிருந்தபோதிலும்கூட உன்னுடைய அனுக்ரஹத்தால் அது பரிபூர்ணமாகும்படி நான் பிரார்த்திக்கிறேன். இந்த ஸந்தியாவந்தனமாகிய உபாஸனையால் என் ஆசாரியனை. ஸ்ரீமத்வாசாரியாரின் ஹிருதயகமலத்தில் அவரால் எப்போதும் தியானம் செய்யப்பட்டவராயிருக்கும் அநந்தகல்யாணகுணங்கள் நிரம்பிய க்ஷீரசமுத்திரத்தில் படுத்த தோஷமற்ற ஞானானந்த ஸ்வரூபரான எங்கும் வியாபியாயுள்ள என் தெய்வம், பாரதீபதியான முக்ய ப்ராணரின் அந்தர்யாமியாயிருந்தவரும் லக்ஷ்மீநாராயணர் சந்தோஷமடையட்டும். சந்தோஷமுள்ளவராய் எனக்கு வரனை அளிக்கட்டும். இந்த என் எல்லா காரியங்களும் ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமாகட்டும்.*

(தொடரும்)

# விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

---

*பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்ரர்களாகிய ஸவர்ணத்தார்களுக்கு தீர்த்த க்ஷேத்திர யாத்திராதிகள் புண்யத்திற்கு ஸாதகமாயிருப்பதுபோல் தீண்டாதார்களுக்கு இவைகள் புண்யகரமாய் இல்லாததுடன் பாபகரமாயும் ஏற்படும். அவர்களுக்கு பகவானுடைய நாம ஸங்கீர்த்தனத்துடன் தேச சேவையும் ஸமூகசேவையும் தான் விதிக்கப்பட்டிருக்கிறது. பகவானுடைய நாமஸங்கீர்த்தனம் இப்பேர்ப்பட்ட மகாமகாத்மியங் கொண்டதாவென்று அநேகருக்கு சந்தேகம் உண்டாகக்கூடும். ஆகையால் பகவன் நாம சங்கீர்த்தனையின் மகாமகாத்மியத்தை விளக்கிட, விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்குள்ள மத்வ சித்தாந்த ரீதியான அர்த்தத்தை இச்சந்தர்ப்பத்தில் அறிவிக்கத்துணிந்தோம்.*



## நாம மகிமை.

*பகவானுடைய நாமங்களின் மகிமை எல்லா புராணங்களிலும் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. உதாஹரணமாய் இங்கு பல புராணங்களிலுள்ள ஒரு சில வாக்யங்கள் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.* பாகவதம் ப்ரதம ஸ்கந்தம், ஆபன்ன: ஸம்ஸ்ருதிம் கோராம் யன்நாம விவசோ கிருணன் । தத: ஸத்யோவிமுச்யேத யம் பிபேதி ஸ்வயம்பவ: ॥ *யாரைக்கண்டு இந்த சம்சார பந்தம் பயப்பட்டு விலகுகிறதோ அந்த நாராயணரின் நாமாவை மெய் மறந்து ஒருவன் கோரமான ஸம்சாரத்தில் அகப்பட்டிருப்பினும் உச்சரிப்பானேயானால் அவன் அக்ஷணமே ஸம்சாரத்தினின்றும் விடுதலையடைகிறான்.* ஸவாக்விஸர்கோ ஜனதாக விப்லவோ யஸ்மின் ப்ரதிச்லோக மபத்தவத்யபி ॥ நாமான்யனந்தஸ்ய யசோங்கிதானி யத் சிருண்வந்தி காயந்தி கிருணந்தி ஸாதவ: ॥ *எந்த நூலில் ஒவ்வொரு சுலோகமும் தவறாய் உபயோகப்படுத்தப்பட்டு பிழையுள்ளதாய் காணப்படினும் அது தேசம் காலம் குணங்களால் அந்தமில்லாதவரான பகவானின் திவ்யசரிதைகளைக்குறிக்கும் நாமங்களால். அலங்கரிக்கப்பட்டிருந்தால் சுகாதி மகாபாகவதர்கள் அதை சிரவணம் செய்தும் படனம் செய்தும் ஸ்தோத்திரம் செய்தும் வருகிறார்களானதால் ஜனசமூகத்தின் பாபங்களைப் போக்கும் அந்தநூல்தான் சரியான வாக்யங்களைக்கொண்டதாகும்.* த்விதீயஸ்கந்தம், ஏதன் நிர்வித்யமானானும் இச்சதாம் அகுதோபயம் । யோகினும் ந்ருபநிர்ணீதம் ஹரேர்நாமானு கீர்த்தனம் ॥ *பலவகை ஸம்ஸார துக்கத்தால் கஷ்டப்பட்டு விரக்தர்களாகி மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கும் யோகிகளுக்கும் முடிவில் ஹரிஸ்மரணம்தான் விதிக்கப்பட்டிருக்கிறது. ததச்*

ஸாரம் ஹ்ருதயம் பதேதம் யத்க்ருஹ்யமாணை: ஹரிநாமதேயை:। நவிக்ரியேதாதமுகே விகார: நேத்ரே ஜலம் காத்ரருஹேஷு ஹர்ஷ:॥ பகவானுடைய நாமங்களை மனதிற்கு கொண்டுவரும் பொழுது உருகாமலிருக்கும் ஹ்ருதயம் அது பாராங்கல்லுபோல் கடினமானதேயாகும். உருகும் பக்ஷத்தில் முகம் மலரும். கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் பெருகும். சரீரத்தில் மயிர்கூச்சு முண்டாகும். த்ருதீயத்தில், யன்னாமதேயச்ரவணானுகீர்த்தனாத் யத்ப்ரஹ்வணாத் யத்ஸ்மரணாதபிக்வசித்। ச்வாதோபிஸத்யஸ்ஸவனாயகல்பதேகுத: புனஸ்தே பகவன்னுதர்சனாத்॥ எந்த பகவானின் நாமாவை ஒருதரம் ச்ரவணம் செய்வதாலும் வாயால் சொல்வதாலும், யாரை நமஸ்கரிப்பதாலும், யாரை ஒருதரம் எண்ணுவதாலும், நாய் மாமிசத்தைத் தின்னும் சண்டாளனையும் பாபங்களினின்றும் முக்தனாகி யக்ஞத்தைச்செய்ய அருகதையுள்ளவனைப்போல் உடனே விஷ்ணுபக்தியடைகிறான் என்றால் ஹே பகவன்! அப்பேர்ப்பட்ட தங்களை நேரில் பார்த்தபின் நான் ஸார்த்தக்யமடைந்துவிட்டேனென்று சொல்லவும் வேண்டுமோ? அஹோ பரச்வபசோதோ கரீயான் யஜ்ஜிஹ்வாக்ரே வர்த்ததே நாமதுப்யம்। தேபுஸ்தபஸ்தேஜுஹுவு: ஸஸ்நுராத்யான் ப்ரம்மானூசு: நாமகிருணந்தியேதே॥ விஷ்ணுபக்தி இல்லாமல் யாகம் செய்பவர்களையும் விஷ்ணுபக்தியுள்ள சண்டாளர்களையும் சீர்தூக்கிப்பார்த்தால், விஷ்ணுபக்தியுள்ள சண்டாளர்கள்தான் அந்த தீக்ஷிதர்களைவிட மேலானவர்கள்; ஏனெனில் அந்த சண்டாளர்களின் நாக்கின் நுனியில் நாராயணாய நம: என்று தங்கள் திருநாமம் இருந்துவருகிறது. அவ்வாறு அவர்களுக்கு விஷ்ணுபக்தி ஏற்பட்டதற்கு காரணம் அவர்கள் முன்ஜன்மங்களில் தபஸ்ஸைச் செய்து தேவர்களைக்குறித்து ஆஹுதிகளைக்கொடுத்து வேதாத்யயனம் செய்தவர்களாய் அந்தக்காரண சக்தி படைத்தவர்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்குத்தான் நாராயணாய நம: என்று உச்சரிக்கத்தோன்றும். சதுர்த்தஸ்கந்தத்தில், அச்யுதானந்த: கலுதத்வகோவிதை: ச்ரத்தாஹுதம் யன்முக ஈட்யநாமபி:। நவைததா சேதனயா பஹிஷ்க்ருதேஹுதாசனே பாரமஹம்ஸ்யவர்யகு:॥ பகவத் தத்வத்தை அறிந்தவர்களால் துதிக்கப்படும் பகவானின்



நாமங்களைச்சொல்லி ப்ராம்மணர்களின் முகத்தில் சிரத்தையுடன் அளிக்கப்படும் அன்னத்தை பகவான் எப்படி புஜிக்கிறாரோ எப்படி பிராம்மணர்களிலேயும் ஸன்யாஸிகளுக்கு அளிக்கப்படும் அன்னத்தால் அவர் திருப்தியடைகிறாரோ அப்படி, ஜடமான அக்னியின் முகத்தில் ஹோமம் செய்வதால் திருப்தியடைவதில்லை. ஔத்தானபாதே பகவான் தவசாரங்கதன்வாதேவ: க்ஷிணோத்வவனதார்த்திஹரோ விபக்ஷான்। யன்நாமதேயமபிதாய நிசம்யசாத்தா லோகோஞ்ஜஸா தரதிதுஸ்தரமங்கம்ருத்யும்॥ துருவா! வணங்குகிறவர்களின் சங்கடத்தைப்போக்கும் சாரங்கபாணியான பகவானின் நாமத்தை ஸ்மரித்துக்கொண்டு யுத்தம் செய்தால் அவர் உன் சத்ருக்களை கொல்வார். அவருடைய நாமத்தைச்சொல்லி, அதை சிரவணம் செய்து, ஜனங்கள் தாண்டமுடியாத மரண துக்கத்தைப்போக்குகின்றனர். பஞ்சமஸ்கந்தத்திலேயும், நைவம் வித: புருஷகார உருக்ரமஸ்ய பும்ஸாம் ததங்க்ரி ரஜஸாஜிதஷட்குணானாம்। சித்ரம் விதூரவிகத: ஸக்ருதாதீத யன்நாமதேயமதுனா ஸஜஹாதி பந்தம்॥ பகவானின் சரண ரேணுக்களை பஜனம்செய்து காமாதி ஆறுவகை சத்ருக்களை ஜயித்த அவருடைய பக்தர்களுக்கு இப்பேர்ப்பட்ட மகிமை இருப்பது ஆச்சரியமன்று. பிராம்மணர்களைவிட்டு தூர விலகிப்போகவேண்டிய சூத்ரனுக்கும்கூட தூரத்தில் விலகிப்போக வேண்டிய சண்டாளன் அவருடைய நாமத்தை ஒருதரம் சொல்வானேயானால் அவன் சம்சார பந்தத்தையே விலக்கிக்கொள்கிறான். அதகதஞ்சித்ஸ்கலனக்ஷுத்பதனஜ்ரும்பணதுரவஸ்தானுதிஷு விவசாநாம் ந: ஸ்ரீமச்சரணாரவிந்தஸ்மரணாய ஜ்வரமரணதசாயாமபி ஸகலகச்மல நிரஸனானி தவகுண க்ருதநாமதேயானி வசனகோசராணி பவந்து॥ இடறினாலும் காரியுமிழ்ந்தாலும், கொட்டாவி விட்டாலும் சங்கடமான நிலைமையில் அகப்பட்டிருந்தாலும் ஜ்வரத்தால் சங்கடப்பட்டபொழுதும் மரணகாலத்திலேயும் எல்லா பாபங்களை தொலைக்கக்கூடியதான உம்முடைய குணங்களைக்கொண்டு ஏற்பட்ட உம்முடைய நாமங்களைச்சொல்லு அசக்தர்களான எங்களுக்கு உம்முடைய சரணாரவிந்த ஸ்மரணமிருக்க அவைகள் நாவால் உச்சரிக்கும்படியாய் ஏற்படட்டும்.

ஷஷ்ட ஸ்கந்தத்தில், அயம் ஹி க்ருத நிர்வேசோ ஜன்மகோட்யம்

ஹஸாமபி | யந்ம்யாஜஹார விவசோ நாம ஸ்ஸாங்கேத்யபாதம் ஹரே:|| ஸ்தேன: ஸுராபோ மித்ரத்ருக் ப்ரம்மஹா குருதல்பக:| ஸ்த்ரீ ராஜ பித்ரு கோஹந்தாயே ச பாதகினோபரே || ஸர்வேஷாமப்யகவதாம் இதமேவ ஸுநிஷ்க்ருதம் | நாம வ்யாஹரணம் விஷ்ணோ யத: தத் விஷயாமதி:|| ந நிஷ்க்ருதை: உதிதை ப்ரம்மவாதிபி: ததாவிசுத்தத்யகவான் வ்ரதாதிபி:| யதாஹரே நாமபதை: உதாஹ்ருதை: ததுத்தமச்லோக குணோ பலம்பகம் || ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வா ஸ்தோபம் ஹேளநமேவவா | வைகுண்ட நாமக்ரஹணம் அசேஷாகஹரம் விது:|| அஜ்ஞானாதவாஜ்ஞானாத் உத்தமச்லோக நாமயத் | ஸங்கீர்த்திதமகம் பும்ஸோ தஹேதேதோ யதாநலம்||

எந்தக் காரணத்தாலோ ஸ்ரீ ஹரியின் மங்களங்களுக்கு எல்லாம் இருப்பிடமாகிய அவருடைய நாமத்தை பரவசனாய் ஸங்கீர்த்தனம் செய்ததால், இந்த அஜாமிளன் கோடி ஜன்மங்களில் செய்த பாவங்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் பண்ணிக்கொண்டவனாவான். திருடியவன், கள்ளைக் குடித்தவன், மித்ரத்ரோகம் செய்தவன், பிரம்மஹத்யை செய்தவன் குருஸ்திரீயிடம் சம்போகம் செய்தவன், ஸ்திரீஹத்யை செய்தவன், பித்ருஹத்யை செய்தவன், ராஜஹத்யை செய்தவன், கோஹத்யை செய்தவன் இன்னமும் இதுபோன்ற மகாபாபங்களைச்செய்த மகாபாபிகளுக்கெல்லாம் இந்த விஷ்ணுவின் நாம ஸங்கீர்த்தனம்தான் பிராயச்சித்தமாகும். எனெனில் நாம ஸங்கீர்த்தனம் செய்பவனுக்கு பகவானிடம் பக்தி ஏற்பட்டிருக்கிறது. மகா பாபியானவன் தன்னால் உச்சரிக்கப்பட்ட ஸ்ரீஹரியின் நாமங்களால் பரிசுத்தனாவதுபோல் பிரம்மரிஷிகளால் சொல்லப்பட்ட பிராயச்சித்தங்களாலும் கிருச்ரசாந்திராயணம் முதலான விரதங்களாலும் பரிசுத்தனாவதில்லை. எனெனில் பிராயச்சித்தம் செய்துகொண்டாலும் மனது பாபத்திலேயே ஓடும். அதனால் அது நிச்சேஷமாய் பாபத்தை போக்கடிப்பதில்லை. அவர்களுக்கு ஹரியின் குணங்களைக்காட்டும் அவருடைய நாம ஸங்கீர்த்தனம் தான் முக்யப்ராயசித்தமாகும். ஒருவரின் பெயராகவோ பரிகாசமாகவோ கோபத்தை உண்டாக்க மர்மமாகவோ கேலிபண்ணவோ ஸ்ரீஹரியின் நாமமாயிருப்பதை, அப்பெயரின் உண்மையான பொருளைக் கொண்டவர் ஸ்ரீஹரிதான் என்ற ஞாபகத்துடன் சொன்னால்



அச்சமயம் ஸ்ரீஹரியின் ஞாபகம் ஏற்படுவதன் நிமித்தம் எல்லா வகை பாபங்களும் தொலைந்து போவதாய் பெரியோர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் பகவானுடைய நாமங்களின் உண்மையான பொருளை ஸம்பூர்ணமாய் அறிந்தோ அறியாமலோ பகவானுடைய நாமம் என்று மட்டில் பொதுவாய் அறிந்து பக்தியுடன் அதை உச்சரிக்கும் பக்ஷத்தில் அது பகவானுடைய எந்தநாமமாயிருந்தாலும் எந்த அக்னியும் எந்தவிறகையும் எரித்துவிடுவதுபோல் மனுஷ்யர்களின் பாபத்தை கொளுத்திவிடுகிறது. நஹிபகவன் நகடிதமிதம் த்வத்தர்சனாந் ந்ருணமகில பாபக்ஷய:| யந்நாம ஸகிருத்ச்ரவணாத் புல்கஸோபி விமுச்யதேஸம் ஸாராத்|| பெரியோர்கள் ஓர் பிரயோஜனத்தை கருதி தங்களை உபாஸிப்பதில்லை, முன்செய்த நல்ல வினையின் பயனாக உபாஸிக்கின்றனர். அதனால் தங்கள் தரிசினமடைந்து ஸமஸ்தபாபங்களும் நாசமடைகின்றன. தங்கள் திருநாமத்தை ஒருதரம் பக்தியுடன் ஒருவன் சொன்னாலுமே அவன் சண்டாளனாயிருந்தாலும் அவனுடைய பாபங்கள்தொலைகின்றன. அப்படியிருக்க தங்கள் தரிசினத்தால் பாபநிவிருத்தி உண்டாவது ஆச்சரியமன்று.

(தொடரும்.)

# தீண்டாதார் ஆலயப் பிரவேசக் கண்டனம்.

## ஸ்ரீரங்கத்தில் பெருங்கூட்டம்.

திருவனந்தபுரம் மகாராஜா அவர்களின் தீண்டாதார்ஆலயப்ரவேச விளம்பரத்தைக் கண்டிக்கவும் ஆஸ்திகர்களின் மனத்தாங்கலை அறிவிக்கவும் ஸ்ரீரெங்கம், திருச்சிறாப்பள்ளி முதலியவிடங்களிலுள்ள ஆஸ்திகர்களின் கூட்டமொன்று 30—1—37 சனிவாரம் மாலை ஸ்ரீமான்கள் தேசபூஷண, தர்மகார்யப்ராவீண, ஸத்வித்யா போஷகராவ் ஆர். கே. பிரஸன்ன வெங்கடேச ராவ், ஸ்ரீரங்கம் தேவஸ்தான டிரஸ்டி எம். எல். ரகுநாத தாதாசாரியார், டிடையர்டு ஆடிடர் டி. வி. ரங்கநாதராவ் ஆகியவர்களின் முயற்சியால் ஸ்ரீவியாஸ ராஜமடத்தில் கூட்டப்பட்டது.

ஆரம்பத்தில் ஸ்ரீமான் பிரஸன்ன வெங்கடேச ராயர் அவர்கள் பேசுகையில் அனந்த விரதத்தை கைக்கொண்ட மாத்வர்களுக்கு பிரஸ்தாப விளம்பரத்தைக் கண்டிக்க விசேஷப்பொறுப்பு இருப்பதாயும் வைஷ்ணவர்கள் நிறைந்ததும் ஸ்வயம் வியக்த க்ஷேத்திரங்களில் முதலாவதான ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் இதுகாறும் கூட்டம் கூட்டப்படாததும் மடாதிபதிகளும் நாட்டுக்கோட்டை செட்டிமார்களும் முன்வாராததும் பிரதம பாத கலியின்கோலமென்பதாயும் விஸ்தரித்து ஸ்ரீமான் பண்டித மெய்யு அய்யங்கார் ஸ்வாமிகளை தலைமை வகிக்கும்படி வேண்டிக்கொண்டார்.

ஸ்ரீமான் அய்யங்கார் அவர்கள் தலைமை வஹித்து திருவாங்கூர் ஆலயப்ரவேச விளம்பரத்தைக் கண்டித்தப்பிறகு குப்பகோணம் அக்னிஹோத்ரம் ஸ்ரீமான் ராமானுஜ தாதாசாரியார் ஸனாதனிகள் தற்கால ராஜீய நெருக்கடியில் உதாஸீனமாயிருக்கக்கூடாதென்றும் ஏப்ரல் மாதமிருந்து அமுலுக்கு வரும் அரசியல் சீர்திருத்தத்தில் திருமண், விபூதி, முதலிய நெற்றி அடையாளங்களை அணியக்கூடாது. பூணூலை அறுத்தெறியவேண்டும் என்றது போன்ற மத சீர்திருத்தமும் எளிதில் சட்டங்களாகி அமுலுக்கு வந்துவிட பாத்யதை ஏற்பட்டுவிடுகிறதென்றும் வாக்காளர்கள் சட்டசபை அபேக்ஷகர்களிடம் ஆலயப்பிரவேச விஷயமாக வற்புறுத்தி உறுதிமொழிகளை வாங்கவேண்டியதென்றும் இந்த ஆலயப்பிரவேச அறிக்கை சாஸ்திரங்கள், ஆகமங்கள் பாரம்பரையான கொள்கைகள் இவற்றிற்கு முரண்பட்டதென்றும் பல பிரமாணங்களுடன் கண்டித்து பல தீர்மானங்களைத் தமிழில் பிரேரித்தார்.

பிரம்ம ஸ்ரீ போலகம் ராமா சாஸ்திரிகள் அத்தீர்மானங்களை ஆமோதித்து ஆலஸ்யம்தான் நம்மவர்களுக்கு பலத்த விரோதியென்றும் அதையொழித்து அனைவரும் முன்னணியில் நின்று உழைக்கவேண்டும் என்று கூறினார்.

கும்பகோணம் ஸமீரஸமயவீரில் ஆசிரியர் ஸ்ரீமான் M. ராமராவ் அவைகளை ஆதரித்து ஸமூக வாழ்க்கையிலேயே சண்டாளர்களை ஸ்பரிசிப்பது முதலியவை தோஷம் என்றும், கடும் பாபத்தின் பயனாகப் பிறந்த சண்டாளர்கள் தங்களுக்கு ஏற்பட்ட வீரன் காட்டேரி முதலிய தெய்வங்களைப் பூசித்தாலேயே பகவான் அனுக்ரஹம் பண்ணுவதாகக் கீதையில் வாக்களித்திருப்பதாயும் பதவிகள் உயர உபாஸனைகளும் ஜாஸ்தியானதால் கருணையுள்ள மகரிஷிகள் சண்டாளர்கள் சுலபமான உபாயங்களை பின்பற்றி பச்சாத்தாபமடைந்தாலே சுத்தியடைவார்கள் என்றும் சமீபத்தில் கும்பகோணத்தின் நடந்த மாதா கோவில் நகரில்



ஜாதிபேதமில்லை என்பவர்களே வற்புறுத்தியிருக்கும் ஜாதிபேதம் கவனிக்கத்தகுந்ததென்றும் முன்பு ஸ்ரீமான் மாளவியா கூறின வசனங்கள் யாவும் அர்த்தவாதங்களென்றும் பேசினார்.

பிறகு கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் பாகவத ரங்கனுதாசாரியார், இதுவரை ஸனாதனியாகவிருந்துவந்த ஸ்ரீமான் புரோபஸர் K. சுந்தரராமய்யர் தற்சமயம் தமது கொள்கையை மாற்றி ஆலயப்பிரவேசத்தை ஆதரித்து ஹிந்து பத்திரிகையில் எழுதியிருப்பதை அழுத்தமாய்க்கண்டித்தும் புரொபஸரவர்கள் 'சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம்' என்பதின் அடுத்த பாதமான குணகர்மவிபாகச: என்பதை மறந்தார் போலும் என்றும் அவருக்கு வர்ணம், ஜாதி இவ்விரண்டின் விஷயமாக குழப்பம் ஏற்பட்டிருக்கிறதென்றும் வேத துல்யமாய் எல்லோருக்கும் தெரிந்ததான ஸ்ரீமத்ராமாயணத்திலே கூறப்பட்ட ஆலயப்பிரவேச விஷயத்தில் அதமமான ஓர் ஜந்துவுக்கு இருந்த அறிவுகூட நம்மிற் பெரும்பான்மையோருக்கு இல்லாதிருப்பது வருந்தத்தக்கதென்றும் மிக உருக்கமாகப்பேசினார்.

மற்றும் இவர்கள் பேசிய பிறகு அக்ராஸனர், பஞ்சராத்ர ஆகமம் முதலியவைகளிலிருந்தே சண்டாளர்கள் ஆலயப்பிரவேசம் செய்வதால் விதிக்கப்பட்ட பிராயச்சித்தங்களிலிருந்தே அவர்கள் அசுத்தர்களென ஸ்பஷ்டமாக ஏற்படுகிறதென்றும் பகவத் ராமாநுஜர் திருநாராயணபுரத்தில் சண்டாளர்களை வருஷத்துக்கொருநாள் ஆலயப்பிரவேசம் செய்ய அனுமதித்ததன் தத்வத்தை விளக்கி அது மற்ற கோயில்களில் அவர்களை அனுமதிக்க ஓர் உதாரணமாகாதென்றும் கூறினார்.

கடைசியில் இக்கார்யத்தைக் கூட்டிவைப்பதில் மிகுந்த ஊக்கமும் சிரமமும் எடுத்துக்கொண்டு தர்மம் சீரழியும் காலத்தில் முன்வந்த ஸ்ரீமான் தேசபூஷண ஆர். கே. பிரஸன்ன வேங்கடேசராவ் அவர்களால் தலைவருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை இனிது கலைந்தது. இங்கு ஸ்ரீமான் ராயர் அவர்களின் அரியஸேவை மிகப் போற்றத்தக்கதென குறிப்பிடத் தகுந்தது.

(நமது நிருபர்)

## சென்னை மாகாண ஸநாதன தர்ம மகாநாடு.

1937-ஞ பிப்ரவரி-மீ 6, 7உ களில் சென்னை திருவல்லிக்கேணியில் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமியின் தவன உத்ஸவத்தின் பங்களாவில்

எலெக்ட்ரிக் லைட்டுகளால் விசேஷமாய் சோபிதமான பெரியதொரு அலங்காரப்பந்தலில் இம்மகாநாடு கூடுவதாய் பூர்வாங்கமாய் எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டிருந்ததாலும் அழைப்புக் கடிதங்கள் பெருவாரியாய் அனுப்பப்பட்டிருந்ததாலும் குண்டூர், கோயமுத்தூர், பாலக்காடு, மதுரை, திருநெல்வேலி, தேவக்கோட்டை, காரைக்குடி, திருச்சினாப்பள்ளி, கும்பகோணம், சீர்காழி, ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம் முதலிய பல பிராந்தியங்களிலிருந்தும் பிரதிநிதிகள் ஏராளமாய் வந்திருந்தனர். ஸ்ரீரங்கம் தேசபூஷணம் முதலிய பிருதுகளுள்ள ஸ்ரீமான் பிரஸன்ன வெங்கடேசலுராயர் அவர்களால் கும்பகோணம் மாத்வ கலாக்ஞான சங்கத்தின் காரியக்கமிட்டி அங்கத்தினர்களான இப்பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் பாகவத ரங்கனாசாரியாரும் ஸ்ரீமான் M. ராமாராவும் மாத்வ சமூகத்தின் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டிருந்தனர். இவர்கள் தஞ்சைஜில்லா பிராம்மணசபையின் பிரதிநிதிகளாகவும் மகாநாட்டில் கலந்துகொள்ள தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனர். இம்மகாநாட்டிற்கு ஸ்ரீமான்களான திவான்பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ் அவர்கள் வரவேற்பு கமிட்டி தலைவராகவும் மதுரை அட்வொகேட் ராவ்சாஹிப் N. நடேச அய்யர் B.A.,B.L., அவர்கள் மகாநாட்டு அக்கிராஸனராகவும் அமர்ந்திருந்தனர். ஸ்ரீபார்த்தசாரதிக்கு பிரதக்ஷிணமாய் ஊர்வலம்வந்து அநேக பீடாதிபதிகள் பல ஆஸ்திகப்ரமுகர்கள் இவர்களின் அனுக்ரஹம் நல்வார்த்தைகளை முன்னிட்டு மகாநாடு துவக்கி இவ்விரண்டு அக்கிராஸனர்களின் பிரஸங்கம் படிக்கப்பட்டது. திருவாங்கூர் ஆலயப்ரவேச விளம்பரம் சநாதன தர்மத்தையும் வர்ண மத ஆசார அனுஷ்டானத்தையும் வேருடன் அறுப்பதாய் இருக்கிறதென்றும் பாலனான திருவனந்தபுரம்மகாராஜா அவருடைய முன்னோர்களைப்போல் ஸநாதன தர்மானுஷ்டானத்தைப் பின்பற்ற அபிப்ராயமில்லாதிருந்தால், சுத்தவீரரான எட்டாவது எட்வர்ட் மகாராஜ சக்ரவர்த்தியைப்போல் தன் ராஜயத்திலிருந்து விலகிக்கொள்ளவேண்டுமே ஒழிய அவ்விடத்தில் உட்கார்ந்தே இவ்வாறு சீர்திருத்தக்காரர்களின் மாயவலையில் சிக்கி பத்மநாபதாஸனாய் இருப்பதை ஒழித்து ராஜ்யத்திலுள்ள ஸநாதன தர்மத்தை நாசமாக்க உரிமை இல்லையென்றும் வெகுஅழுத்தமாய் பலவாறுவாதித்து வரவேற்பு கமிட்டித்தலைவர்செய்த பிரஸங்கம் ருசிகரமாய் இருந்தது. மகாநாட்டின் அக்கிராஸனரின் பிரஸங்கம் சுமார் 40 பக்கம்கொண்ட ஓர் புத்தகமாய் அச்சிடப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு சுமார் 2 மணிகாலம் அவரால் வாசிக்கப்பட். —



அதில் ஸநாதன தர்மத்திற்கு விரோதமாய் சொல்லும் எல்லாவாதங்களுக்கும் சரியான பதில் கூறியிருப்பதுடன் அது சீரழிந்திருப்பதின் காரணங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டு புனருத்தாரணத்திற்கு பல பிரமாணங்களுடன் பல உபாயங்களும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஸநாதன தர்மத்திற்கு ஹானி ஏற்படும் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அஞ்சா நெஞ்சம் படைத்தவராயும் தர்மவீரராயும் அர்த்த புஷ்டியுள்ள மேன்மையான வார்த்தைகளை உபயோகிப்பவராயும் நியாயவாதிகளில் வயதுமுதிர்ந்து பலலோகானுபவங்களுள்ளவருமான ஸ்ரீமான் N. நடேசய்யர் அவர்களின் பிரஸங்கம் வெகுசிலாக்யமாய் சத்ருக்களின் மனத்தையும் திருப்பக்கூடியதாயிருந்தது. திருவாங்கூர் அரசரின் அறிக்கையை கண்டித்தும் அது சமயத்திற்கும் சாஸ்திரத்திற்கும் முரண்பட்டதென்று நிரூபித்தும், மைசூர்மகாராஜா, கொச்சிமகாராஜா, திருவாங்கூர் ஸீனியர் மகாராணி ஸேது லக்ஷ்மிபாய், கள்ளிக்கோட்டை ஜாமொரின் இவர்கள் ஸநாதன தர்மத்தை காப்பாற்றியதற்கு அவர்களுக்கு வந்தனமளித்தும், மதத்தில் தலையிடுவதில்லை என்று காங்கிரஸ்காரர்களிடமிருந்து உறுதிவாங்கித்தான் அவர்களை ஆதரிக்க வற்புறுத்தியும், ஸநாதன தர்மத்தை பிரசாரம் செய்ய பலவகை ஸங்கங்கள் ஏற்படுத்தவும், மதப்படிப்புகளை பள்ளிக்கூடங்களில் சொல்லிக்கொடுக்கவும், மூலதனம் வசூலிக்கவும், இம்மாதிரி முக்யப்ரச்னைகளை ஒட்டி முக்யமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஸநாதன தர்மத்தை வாதிக்கும் ஆர்யதர்மம், தர்மராஜ்யா மார்க்கபந்து, ஸநாதனிஸ்ட், மாத்வ மித்திரன், கலைமகள், பிரஸன்ன லக்ஷ்மி பத்திரிகைகளை ஆதரிகக் ஸநாதனிகளை இம்மகாநாடு கேட்டுக்கொள்வதாயும் தீர்மானம் நிறைவேறியதை நாம் மிகவும் பாராட்டுகிறோம். சீர்திருத்தக்காரர்களாலோ மற்றவர்களாலோ மதம் மதானுஷ்டானாதிகளால் எதிர்ப்பு ஏற்பட்டாலும் சட்டம்செய்ய முயற்சி செய்யப்பட்டாலும் அதைத்தவிர்த்து நிற்க சென்னை மாகாண வர்ணாச்ரமஸ்வராஜ்யசங்கம் என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தவும், இதற்கு மூலதனம் ஒரு லக்ஷ ரூபாயை சேகரிக்கவும், ஓர் தீர்மானம் வந்து அது சம்பந்தமாய் மஹோபதேசிக ஸ்ரீமான் சோமதேவ சர்மா பேசியவுடன் மகாநாட்டின் பல பாகங்களிலிருந்து வர்ஷாகாலத்து உதகவர்ஷம்போல் திரவிய வர்ஷம் விடாது அரை மணிநேரம் பெய்து அக்ஷணமே சுமார் ரூ. 1500 வரையில் சேர்ந்ததென்றால் அன்னவருடைய பேச்சு திறமையும் மகாநாட்டில் கலந்திருந்தவர்களின் மத உணர்ச்சியும் கலி நிக்ரஹத்திலிருந்த வீராவேசமும் எவ்வாறிருந்ததென்று வாசகர்களே ஊகிக்க

லாம். மகாநாட்டில் பேசினவர்கள் எல்லோரும் வெகு இலாக்யமாய்ப் பேசி ஸநாதன தர்ம இயக்கத்திற்கு புத்துயிர் கொடுத்தனர். இப்பால் பிரபலமான காங்கிரஸ்காரர்களும் தேசிய பத்திரிகைகளும் தகுந்த பதிலளிக்கும்படி ஏற்பட்டதாலும் எங்கும் ஸநாதனிகளின் வாதம் பிரசித்தமாகிவிட்டதாலும் இம்மகாநாடு வெற்றிகரமாய் தமது நோக்கத்தை பூர்த்தி செய்துகொண்டதாகவே நிச்சயிக்கிறோம். இதற்கு முக்ய காரணமாகவுள்ள காரியதரிசி ஸ்ரீமான் தண்டலம் ராமஸ்வாமி அய்யரின் விடாமுயற்சியும் தீவிர மத உணர்ச்சியும் மிகவும் பாராட்டத் தகுந்தது. ஆரம்ப சூரா: கலுதாக்ஷிணுத்யா: தென்னாட்டார்கள் ஆரம்பத்தில் சூரர்களாயிருப்பார்கள் என்னும் பழமொழிக்கேற்ப இந்த மகாநாட்டை கூட்டி தீர்மானங்களை செய்ததோடுமட்டில் நிற்காமல் தீர்மானங்கள் அமுலுக்கு கொண்டுவரும்படி மதுரை ஸநாதன ஸ்வராஜ்ய சங்கத்தின் காரியக்கமிட்டியார்கள் வேலை செய்வார்களென்று திடமாய் நம்புகிறோம்.

---

# தேவாலயங்களில் மாத்வர்களுக்குள்ள பற்றுதல்.

---

மாத்வர்களுக்கு தேவாலயத்தில் பகவத் தரிசனம்செய்வது அவசியமாவென்று ஓர் மாத்வ வயோதிகர் செய்த பிரசினம் ஆச்சரியகரமாயிருக்கிறது. மாத்வர்களில் ஒவ்வொருவரும் சாலக்ராமாதிகளை ஆராதிக்க வேண்டுமென்ற நிர்பந்தமிருப்பது உண்மையே. ஆயினும் புண்ய க்ஷேத்திரங்களிலுள்ள தேவாலயங்களுக்குச்சென்று பகவத் தரிசனம் செய்வது நம்மவர்களுக்கு மிகவும் அவசியமென்றே நாம் வற்புறுத்துவோம். பரமப்ரமாணமாய் நாம் ஒப்புக்கொண்டிருக்கும் ஸ்ரீமத் பாகவதத்தில் பாதௌ ஹரே: க்ஷேத்ரபதானுஸர்பணே கால்கள் படைத்ததற்கு ஸார்த்தகம் ஸ்ரீ விஷ்ணு க்ஷேத்திரங்களுக்கு நடந்துபோவதுதான் என்றும், முகுந்தலிங்காலய தர்சனேத்ருசௌ கண்கள் படைத்ததற்கு விஷ்ணு ஆலயங்களிலுள்ள பகவானை தரிசிப்பதுதான் என்றும் பலவாறு பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ பகவத் பாதாளும் கிருஷ்ணாமிர்தமஹார்ணவத்தில் கிம்தஸ்ய சரணை: கார்



யம் விருதாசஞ்சரணை: த்விஜ| யைஹிநவ்ரஜதே ஜந்து:கேசவாலய தர்சனே || சரணௌதேது ஸபலௌ கேசவாலய காமினௌ || தேச நேத்ரே மஹாபாக யாப்யாம் ஸந்த்ருச்யதே ஹரி:|| விஷ்ணோர் விமானம் ய: குர்யாத் ஸகிருத் பக்த்யா ப்ரதக்ஷிணம் | அச்வமேத ஸஹஸ்ரஸ்ய பலம் ப்ராப்னோதி மானவ: விஷ்ணு ஆலயத்தைப் பார்க்க போகாமலிருந்த கால்கள் வெளியில் எவ்வளவு சுற்றினாலும் என்ன பிரயோஜனம். விஷ்ணு ஆலயத்திற்கு போகும் கால்கள் தான் பிரயோஜனமுள்ளவைகள். அந்த தேவாலயத்திலுள்ள பகவன் மூர்த்திகளைப்பார்க்கும் கண்கள்தான் பிரயோஜனமுள்ள கண்கள். கோயிலிலுள்ள விஷ்ணுவின் விமானத்தை (ஸ்தூபியை) பக்தியுடன் யார் ஒருதரம் ப்ரதக்ஷிணம் செய்தாலும் அவர் ஆயிரக்கணக்கான அசுவமேத யக்ஞத்தைச்செய்தவராய் ஆவார் என்று ஸ்பஷ்டமாய் தம் சிஷ்யர்கள் கோவிலுக்குப்போவதை வற்புறுத்தியிருக்கிறார். ஸ்ரீபகவத் பாதாளும் இப்பரதகண்டம் முழுமையும் தீர்த்தக்ஷேத்திர தேவாலயாதிகளை தரிசித்து மூன்றுதரம் யாத்திரை சென்றதாய் ஸ்ரீமத்வ விஜயம் கூறுகிறது. கோயிற்பூஜை இவ்வாறு நடத்தப்படவேண்டுமென்றும் மாத்வர்களுக்கு தேவாலய பூஜை சம்பந்தம் அவசியமென்றும் அறிவிக்க உடுபியில் ஸ்ரீகிருஷ்ணரின் கோயிலைகட்டி அஷ்டமடஸ்வாமிகளால் பூஜைசெய்புமுறையையறிவித்து மாத்வர்கள் யாவரும் தம்வாழ்நாளில் ஒருதரமாவது அங்குசெல்லவேண்டுமென்ற நிர்பந்தத்தையும் பிரசித்தம் செய்தார். இதரமதத்தார்கள் பூஜைசெய்தாலும் தேவப்ரதிஷ்டிதமான கோயில்களை தரிசிக்கப் போகும் வழக்கம் நம்மவர்களில் வேரூன்றியிருக்கிறது. ஸ்ரீவைஷ்ணவர்கள் பூஜைசெய்துகொண்டிருந்த திருப்பதி ஸ்ரீனிவாஸனை ஸ்ரீவியாஸராஜர் பன்னிரண்டு வருஷம் பூஜைசெய்துவந்தார். கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமி ஸ்ரீசக்கரபாணிஸ்வாமியை பலவருஷகாலம் ஸ்ரீ விஜயீந்திரர் பூஜை செய்திருக்கிறார். ஸ்ரீவாதிராஜர் பரதகண்டத்திலுள்ள பிரதானமான சிவக்ஷேத்திரங்கள் விஷ்ணுக்ஷேத்திரங்களுக்குச்சென்று அந்தந்த மூர்த்திகளை தரிசித்து ஸ்தோத்திரம் செய்திருப்பதை தீர்த்த பிரபந்தம் என்ற ஓர் அற்புத கிரந்தத்தாலேயே விளக்கியிருக்கிறார். ஸ்ரீ உத்திராதிமடம்

ஸ்வாமிகளுக்கு ராமேசுவரத்தில் ஸ்ரீ ராமலிங்கத்தின் சன்னிதியிலுள்ள ஸர்வதீர்த்தக்கரையில் ஸ்ரீ ராமனை வைத்து பூஜை செய்யும் ஸ்வாதந்திரியமும், ஸ்ரீமுஷ்ணத்தில் ஸ்ரீ பூவராக ஸ்வாமியை மடத்திற்கு அழைத்துவந்து தம் மடத்தின் மூலராமருடன் சேர்த்துவைத்து பூஜைசெய்யும் ஸ்வாதந்திரியமும் இருந்து வருகிறது. அநேக ஊர்களில் அந்தந்த பகவன் மூர்த்திகளுக்கு நம்மூன்று மடாதிபதிகளாலும் மானியம் விடப்பட்டு பல உத்ஸவாதிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பகவத் ஸந்நிதியில் கொடுக்கப்படும் தீர்த்தம் புஷ்ப பிரஸாதங்கள் முதலியவைகளை நம்மவர்களில் பெரியார்கள் மிகுந்த பக்தியுடன் இதரமதத்து பூஜகர்களிடமிருந்து கிரஹிக்கின்றனர். சன்னதியில் பகவத்ப்ரஸாதத்தை ஏற்கமறுப்பது பகவானின் அபசாரமென்றே உறுதிகொண்டிருக்கின்றனர். சிவன்கோயிலில் சிவஸந்நிதானத்தில் கொடுக்கப்படும் விபூதி பிரஸாதத்தையும் நம்மவர்களில் பெரியோர்களும் புருவங்களின் நடுவில் பக்தியுடன் தரித்துக்கொள்கின்றனர். இதனால் பிராம்மணர்கள் எந்த மதத்தினர்களாயினும் சரியே அவர்களால் பூஜை செய்யப்பட்டால் அந்தந்த மூர்த்திகளை தரிசித்து ஸார்த்தக்யமாவதை நம்மவர்கள் ஏகோபித்து ஒப்புக்கொண்டிருப்பதாய் நன்கு விளங்குகிறது. மேலும் எந்த ஸ்வாமிகளும் ஸந்யாஸமானவுடன் பூப்ரதக்ஷிணம்செய்து ஸகல தீர்த்த க்ஷேத்திரங்களுக்கும் செல்வது வழக்கமாய் இருந்துவருகிறது. இப்பால் உடுபி ஸ்வாமிகள் எல்லோரும் பர்யாயகாலத்திற்கு முன்னுடி க்ஷேத்திராடனம் செய்துவருவதை காண்கிறோம். நம்மவர்களில் ஒவ்வொருவரும் ச்ராத்தம் செய்யும்பொழுது அவர்கள் எவ்வூரிலிருந்தாலும் சரியே கயாயை நம: கதாதராய நம: கஞ்சி வரதராஜாய நம: ஸ்ரீரங்க ரங்கநாதாய நம: ஸ்ரீமுஷ்ணப்ரம்மணே நம: ஸ்ரீபாண்டுரங்காய நம: ஸ்ரீநிவாஸாய நம: என்று கயை, காஞ்சி, ஸ்ரீரங்கம். ஸ்ரீமுஷ்ணம், பண்டரிபுரம், திருப்பதி முதலான க்ஷேத்திரங்களிலுள்ள பகவன் மூர்த்திகளை தியானிக்கிறோம். ஆத்யம் ஸ்வயம் வ்யக்தமிதம் விமானம் ரங்கஸம்க்ஞிகம் । ஸ்ரீமுஷ்ணம் வெங்கடாத்ரிம் ச ஸாலக்ராமஞ்ச நைமிஷம் । தோதாத்ரிம் புஷ்கரம் சைவ நரநாராயணாச்ரமம் । அஷ்டௌமே மூர்த்தய



ஸ்ஸந்தி ஸ்வயம் வ்யக்தா மஹீதலே ॥ என்று ஸ்பஷ்டமாய் ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருப்பதி, ஸாலக்ராமக்ஷேத்திரம், நைமிஷாரண்யம், வானமாமலை, புஷ்கரம், பதரி ஆகிய எட்டு ஸ்வயம் வியக்த க்ஷேத்திரங்களைச்சொல்லி நமஸ்கரிக்கின்றோம். இப்படியே தான்: ஸம்ஸாரகஹ்வர குஹாஸு ஸுகம் விஹர்த்தும் வாஞ்சந்தியே குருகுலோத்பவசுத்த ஸத்வா:। ஸம்பூஜ்ய ச த்ரிபுவனேசமனந்த தேவம் பத்னந்தி தக்ஷிணகரே வரதோரகம்தே ॥ என்று ஸம்ஸாரத்தில் பிரதிதினமும் அனுபவிக்கும் துக்கம் நிவிருத்தியடையவும் சுகம் ஏற்படவும் உத்தம க்ஷேத்திரமான ஸ்ரீ அநந்த சயனத்தில் எழுந்தருளியிருக்கும் அநந்தபத்மநாபனை வருஷத்திற்கொருமுறை பூஜித்து அந்தக்கயிறை ஒவ்வொருவரும் தம் ரக்ஷையாக கையில் கட்டிக்கொள்ள விதி ஏற்பட்டிருக்கிறது. அநந்த விரதம் என்பது அநந்தசயனத்திலுள்ள அநந்தபத்மநாபனின் பூஜை என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அந்த க்ஷேத்திர மகாத்மியத்தில் ஸ்பஷ்டமாய் சொல்லியிருப்பதுமன்றி அநந்தவிரதத்தின் கல்பக்கதையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கௌண்டின்யருக்கு விச்வரூபம் காட்டிய குஹை, தர்மாதர்மபுஷ்கரணிகள் முதலியவை நிதர்சனமாய் அவ்வூரில்தான் இருந்துவருகிறது. இவ்வாறெல்லாம் மாத்வர்களுக்கும் பாரத வர்ஷத்திலுள்ள புனிதமான கோயில் வழிபாடிற்கும் நெருங்கிய சம்பந்தமிருக்க நம்மவர்கள் இந்த நெருக்கடியான சந்தர்பத்தில் சரியான பரிகாரத்தைத்தேட முன்வராமல் ஒதுங்கியிருப்பது நம் தெய்வங்களுக்குச்செய்யும் பெரும் த்ரோஹமே ஆகும். நாம் அனுஷ்டித்துவரும் ஸதாசாரங்களுக்கெல்லாம் மகா ஆபத்து நேரிடும். இந்த கோரமான சந்தர்பத்தில் நம மாத்வ ஸமூகம் தைரியமாய் வெளிவந்து கூக்குரலிட்டு தீர்த்த க்ஷேத்திராதிகளைக்காப்பாற்ற எத்தனம் செய்யாவிடில் நம்முடைய விரதாதிகளையும் சிராத்தாதிகளையும் நாமே கெடுத்தவர்களாவோம் என்பதில் ஆக்ஷேபணையில்லை.

---

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 8—3—37 | சோமவாரம் | பாண்டுரங்கி ஸம்பிரதாயத்தார்களுக்கு மட்டில் ஏகாதசி |
| 9—3—37 | மங்களவாரம் | இதராளுக்கு ஏகாதசி, மேற்கண்டவர்களுக்கு த்வாதசி மணி 9-58க்கு மேல் பாரணை |
| 12—3—37 | சுக்ரவாரம் | தர்சம் |
| 23—3—37 | மங்களவாரம் | ஏகாதசி |
| 26—3—37 | சுக்ரவாரம் | பௌர்ணமி, போளிப்பண்டிகை |

# முக்யமான விளம்பரம்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

## மாத்வமித்திரன்

### ஒன்று முதல் ஏழு வால்யூம்கள்.

சுமார் 2200 பக்கங்களைக்கொண்டது. ராமாயணம், பாகவதம், விஷ்ணு புராணம், பாத்ம புராணம், மார்க்கண்டேய புராணம் முதலிய 18 புராணங்கள் 18 உப புராணங்கள் பிராம்மணம் உபநிஷத்து பிரம்ம ஸூத்திரம் பாரதம் முதலிய அநேக அரிய நூல்களின் இதிஹாஸ ரஹஸ்யங்களடங்கியதும் இதுவரை யாவராலும் எந்த பாஷையிலுமே மொழி பெயர்க்கப்பட்டு வெளிவராதிருப்பதுமான ஸ்ரீமஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் ஸ்ரீகிருஷ்ணாம்ருத மஹார்ணவம் த்வாதசஸ்தோத்திரம் முதலிய ஸ்ரீபகவத்பாதாள் இயற்றிய நூல்கள், ஷட் பிரசினம் தலவகாரம் முதலான உபநிஷத்துக்கள், புருஷஸூக்தம் ஸந்தியாவந்தனம் முதலான மந்திரங்கள், நரஸிம்ஹஸ்துதி, சிவஸ்துதி சதாபராதஸ்துதி முதலான ஸ்தோத்திரங்கள், மணி மஞ்ஜரி, மத்வ விஜயம், அணுஜயதீர்த்த விஜயம் முதலான பிரபந்தங்கள், இவைகளின் சரியான தமிழ் அர்த்தங்கள், ஸ்ரீராகவேந்திரர், ஸ்ரீவியாஸராஜர், ஸ்ரீவாதிராஜர், ஸ்ரீரகூத்தமர் முதலிய பல மகான்களின் சரித்திரங்கள், ஸ்ரீபுரந்தர தாஸர் ஸ்ரீ ஜகந்நாத தாஸர் முதலிய தாஸர்மார்களின் திவ்விய கதைகள், த்ரௌபதி பஞ்ச பத்னித்வம் அத்வைதத்தின் ப்ரச்சன்ன பௌத்தத்வம் முதலிய அநேக மதாசயங்கள், சங்கர லீலா விலாஸம், அப்பையதீக்ஷிதரின் கண்டனம் முதலிய பிற மத கண்டனங்கள், பல மாஸ மகாத்மியங்கள், பல தர்ம சாஸ்திர ரஹஸ்யங்கள், பிரதிதினமும் செய்யப்படவேண்டிய சௌசம், தந்ததாவனம், ஸ்நானம், புண்ட்ரதாரணம் வஸ்திரதாரணம். போஜன விதானம் ஆசமனம் ஸந்தியாவந்தனம் முதலியவைகளின் எண்ணிறந்த ஆசார அனுஷ்டானங்களின் முறைகள் அமிர்தமதன கதை தக்ஷயாகம், ருக்மணி ப்ரேம கலகம் ஸ்ரீ கிருஷ்ணரின் கைலாஸ யாத்திரை, முதலிய ருசிகரமான பல புராண கதைகள் அநேக கட்டுரைகள் உபன்யாஸங்கள் விஷயசர்ச்சைகள் முதலான ஆயிரக்கணக்கான விஷயங்களடங்கியது.

### தற்போது ரூ. 5 (ஐந்து) தான்.

இச்சிறு தொகையை முன்பே மணியார்டர்செய்து ரயில்வே பார்ஸல் மூலமாய் உங்கள் ஊரில் புஸ்தகங்களைப் பெறுங்கள். சொல்ப காபிகள் தான் இருப்பதால் முந்துங்கள். இவ்வரிய சந்தர்ப்பம் இனி கிடைப்பதரிது. பூரா செட்டு பிரித்தனுப்பப்படமாட்டாது.

மானேஜர், மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே துவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந் ரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங் ள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித் தக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமி யிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மே லும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்ச ிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவ ாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப் ப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் ந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா —8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் ஸ்லோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்ப தும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

த்வைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்டில் அனுப்பப்படும். விலை 1—8—0 தபாற்கூலி 0—6—0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலி யைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப் படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப வேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ ஷியாமா விலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன் பழைய வாலியங்கள்

## வெகு சொற்பம் தானிருக்கின்றன.

## உடனே அவைகளைப்பெற

## முந்துங்கள்.

MAR 1937

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வ மித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 9 — தாத்ரு நாம ஸம்வத்ஸரம். பால்குண மாஸம். — NO. 8

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

ஸ்ரீம. வே. பாகவத ரங்கனாதசாரியாரின் மொழிபெயர்ப்பு.

(முன் 200ம் பக்கம் தொடர்ச்சி.)

### இருபத்தி எட்டாவது அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தில் ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் சல்ய பர்வம் கதாபர்வம் ஸௌப்திக ஐஷீக பர்வம் விசோகஸ்திரீ பர்வம் சாந்தி பர்வத்தின் ஆரம்பம் இவைகளின் கதைகளை நிரூபணம் செய்கிறார். அன்றிரவு முடிந்து பதினெட்டாவது நாள் விடிந்தவுடன் துரியோதனன் குருபுத்ரரான அசுவத்தாமாசாரியாரால் சமாதானம் செய்யப்பட்டவனாய் சல்யராஜனை ஸேனாதிபதியாய் செய்துகொண்டு யுத்தத்திற்கு புறப்பட்டான். பாண்டவர்கள் துரியோதனனைக்கண்டு கவசம் தரித்தவர்களாய் யுத்தத்திற்கு புறப்பட்டனர். அன்று பாண்டவர்கள் சத்ருக்

குதிரைகளையும் ஸம்ஹரித்தார். சல்யன் மற்றொரு ரதத்தில் ஏறிக்கொண்டு எல்லோரையும் பாணவிருஷ்டியால் மறைத்தார். தர்மபுத்திரரை ரதமில்லாமல் செய்தார். ஸமர்த்தனை சல்யன், ஸாத்யகி த்ருஷ்டத்யும்னன் இவர்களுடைய குதிரைகளை ஸம்ஹரித்து, நகுலசகதேவர்களின் தனுஸ்ஸுகளை சேதித்து, பெரியசப்தம் ஏற்படும்படி சங்கத்தை பூரணம்செய்தார்.. பிறகு யுத்தத்தில் சல்யராஜன் ஓங்குவதை வேகமுள்ள பீமசேனர் பார்த்து, அநேக பாணச்ரேஷ்டங்களால் அவனைத்தடுத்தார். சல்யராஜனை ஓர்க்ஷணத்தில் ரதமில்லாமல்ச் செய்தார். மற்றொரு ரதத்திலேறிக்கொண்டு மறுபடியும் யுத்தத்திற்குவந்த சல்யராஜனை பீமசேனர் பாணங்களால் மர்மஸ்தானங்களில் அத்யந்தம் பேதித்து ரதமில்லாமல் செய்தார். மறுபடியும் சல்யன் ஏறிவந்த மூன்றும் ரதத்தையும் நாசம்செய்தார். அவர் திருப்பித்திருப்பி தூக்கிய எல்லா ஆயுதங்களையும் பீமசேனர் பாணங்களால் சேதித்தார். பாணங்களால் அவனுடைய மர்மஸ்தானங்களையும் விசேஷமாய் பிளந்தார். சல்யன் முஷ்டியை உயரத்தூக்கி தர்மபுத்திரரிடம் வந்தான். பீமசேனரால் மர்மஸ்தானங்கள் பிளந்துபோய் கவசம் ஆயுதமில்லாதவனாய்ச்சுவாசம்மட்டில்மீர்ந்து, இறக்கவே தன்னிடம் எதிர்த்துவரும் சல்யராஜனைப்பார்த்து, தர்மபுத்திரர் மற்றொரு ரதத்தில் ஏறிக்கொண்டு, வீரனை சல்யனைக்கொல்ல ஆசையுள்ளவராய் யுத்தத்தில் அமோகமான சக்தி ஆயுதத்தை எடுத்தார். அப்பொழுது தர்மபுத்திரர் அந்த சக்தி ஆயுதத்தை திவ்யமான அஸ்திரங்களாலும் தன் ஸத்ய தர்மங்களின் பலன்களாலும் சேர்த்துவைத்து, அவஸரமுள்ளவராய் சல்யராஜனின் ஹிருதயத்தில் பிரயோகம் செய்தார். சல்யராஜனின் ஹிருதயம் பிளந்துபோய் தர்மபுத்திரரின் அபிமுகமாய் பூமியில் இறந்து விழுந்தான். ஸத்யதர்மங்களில் ஈடுபட்ட சல்யராஜன் இந்திரனுக்கு அதிதியாய் ஸ்வர்க்கம் சென்றார்.

## துரியோதனன் ஒண்டியாய் ஒடிப்பதுங்கியது

பதினெட்டாவது நாள் மத்தியானம் சல்யராஜன் இறந்துபோகவும், இறந்துபோய் மிச்சம் மீதியுள்ள ஸம்ஸப்தகர்களுடன்



சேர்ந்து ஸுசர்மா அர்ஜுனனிடம் வந்தான். அர்ஜுனன் ஸுசர்மாவை ஸம்ஸப்தகர்களுடன் சேர்ந்து யமனிடம் அனுப்பினான். மிச்சம் மீதியுள்ள துரியோதனன் தம்பிகளை எல்லாம் பீமசேனர் ஸம்ஹரித்தார். யுத்தத்தில் கௌரவ ஸைனியங்களை எல்லாம் பாக்கியில்லாமல் செய்தார். பிறகு ஸகதேவன் உலூகனையும் மகாபாபியான சகுனியையும் ஸம்ஹாரம் செய்தான். நகுலன் த்யூதசாலத்தில் ப்ரதிக்ஞை செய்தபடி சகுனியின் ஓர் பிள்ளையை கொன்றான் என்பது அறியவேண்டியதாகும். பிறகு பீமார்ஜுனர்கள் அசுவத்தாமா கிருதவர்மா கிருபாசாரியார் இவர்களை பலதடவை ரதமில்லாதவர்களாய்ச்செய்து அடுத்தடுத்து ஸங்கடப்படுத்தி விரட்டிவிட்டனர். அசுவத்தாமா கிருபர் கிருதவர்மா பீமார்ஜுனர்களால் பயமுறுத்தப்பட்டவர்களாய் வனத்தில் பிரவேசித்தனர். பிறகு ஸாத்யகியால் கைப்பற்றப்பட்ட ஸஞ்சயன் அநந்த சக்தி படைத்த ஸ்ரீ வேதவியாஸரால் தப்புவிக்கப்பட்டார். பிறகு துரியோதனன் சகாயமில்லாமல் பாண்டவர்களுடன் யுத்தத்திற்கு வந்தான்.

பாண்டவர்களுக்கும் துரியோதனனுக்கும் பயங்கரமான யுத்தம் நடந்தது. துரியோதனன் பலதடவை அர்ஜுனனை மூர்ச்சையுள்ளவனாய்ச் செய்தான். தர்மபுத்திரர் நகுலன் சகதேவன் இவர்களை பிரயத்தினமன்னியில் ரதசூன்யர்களாய்ச் செய்தான். பீமசேனர் துரியோதனனை ரதமில்லாதவனாய்ச் செய்தார். துரியோதனன் யானையின்மீது ஏறிக்கொண்டு மறுபடியும் யுத்தத்திற்கு வந்தான். மறுபடியும் ஸாத்யகி, சிகண்டி, த்ருஷ்டத்யும்னன் நகுலன் சகதேவன் தர்மபுத்திரர் இவர்களை ஆயுதங்களில்லாமல் செய்தான். பாணங்களால் பீமசேனர், துரியோதனனின் யானையைக் கொன்றுவிடவும், துரியோதனன் பயம் சிறிதுமில்லாமல் சிரேஷ்டமான குதிரையின்மீது ஏறிக்கொண்டான். அவன் கையில் ப்ராஸாயுதத்தை தரித்துக்கொண்டு யுத்தத்தில் சஞ்சரித்தான். சத்ரு ஸம்ஹாரகனை துரியோதனன் ஸாத்யகியை ப்ராஸாயுதத்தால் அடித்தான். ப்ராஸாயுதத்தால் அடிவிழுந்த ஸாத்யகி மூர்ச்சையடைந்தான்.

நகுல சகதேவர்கள் ப்ராஸாயுதத்தால் அடிவிழுந்தவர்களாய் ரதத்தில் விழுந்தார்கள். தர்மபுத்திரரிடம் வந்த துரியோதனனைப் பார்த்து பீமசேனர் துரியோதனனின் குதிரையையும் கொன்றார். அவர் ப்ராஸாயுதத்தை சேதிக்கவும், துரியோதனன் யுத்தரங்கத்தை விட்டு ஓடினான். ச்ரேஷ்டமான கதாயுதத்தை எடுத்துக்கொண்டு துரியோதனன் ஓடி, த்வைத வனத்தில் த்வைபாயனரின் விஸ்தீர்ணமான குளத்திற்குள்பிரவேசித்தான்.

இவ்வாறு பீமசேனர் யுத்தத்தில் துரியோதனனின் பதினொன்று அக்ஷௌஹிணியில் ஆறு அக்ஷௌஹிணியையும் கொன்றார். கலிங்கராஜனுடைய பாதி அக்ஷௌஹிணியைத் தவிர நாலரை அக்ஷௌஹிணியையும் அர்ஜுனன் ஸம்ஹரித்தான். வேறு கிரந்தத்தில் பீமசேனர் பாதி ஸைனியத்தையும் அர்ஜுனன் பாதி ஸைனியத்தையும் கொன்றான் என்று சொன்னதற்கு, கலிங்கராஜனின் ஒரு அக்ஷௌஹிணியை பீமசேனர் கொன்றதைத் தவிர பாக்கி ஸைனியங்களில் பீமார்ஜுனர்கள் பாதிபாதி கொன்றார்கள் என்று பொருள் படுவதாய் தெரிந்துகொள்ளவும். பாக்கி பாதிஅக்ஷௌஹிணி சைனியம் பின்னால் இருபத்திஆறாவது அத்தியாயத்தில் சொன்னபடி த்ருஷ்டத்யும்னாதிகளால் கொல்லப்பட்டது. பாண்டவர்களின் ஏழு அக்ஷௌஹிணி சைனியத்தில் அசுவத்தாமாசாரியார் நான்கு அக்ஷௌஹிணி சம்ஹரித்தார். பாக்கி மூன்று அக்ஷௌஹிணி சைனியம் த்ரோணாதிகள் எல்லோராலும் கொல்லப்பட்டது. அதிலும் த்ரோணர் கொன்ற ஸைனியத்தைவிட கர்ணன் கொன்றது குறைவுதான். அதைவிட துரியோதனன் கொன்றது குறைவு. அவனைவிட பகதத்தன் குறைவாகக்கொன்றவன், என்று இந்த கிரமத்தை அறிய வேண்டும்.

## துரியோதனனின் வதம்.

மகாத்மாக்களான பாண்டவர்கள் ஜயமடைந்து ஸிம்ஹநாதம் செய்யும்பொழுது துரியோதனன் ஜலஸ்தம்பம் செய்துகொண்டு மந்திரங்களை ஜபித்துவந்தான். அந்த மந்திரங்கள் தூர்வாஸ



மகா முனிவரால் உபதேசிக்கப்பட்டவைகள். இறந்துபோனவர்களை உயிர்ப்பிப்பவைகள். துரியோதனன் ஜலத்தில் மூழ்கியிருந்து இந்த மந்திரங்களை ஏழுநாள் ஜபித்தால் இறந்துபோன எல்லா சைனியங்களையும் அவன் பிழைக்கவைப்பான். அப்படி உயிர்வந்து எழுந்த த்ரோணாதிகள் மீண்டும் கொல்லப்படமுடியாமல் ஆவார்கள், என்றிவ்வாறு துரியோதனனுக்கு இருந்துவரும் வித்யா ஸாமர்த்தியத்தை அறிந்து, துரியோதனனைத்தேடும் பாண்டவர்கள், துரியோதனன் ஜலத்தில் மூழ்கியிருக்கிறான் என்று வேடர்களிடமிருந்து தெரிந்துகொண்டார்கள். பிறகு பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனை முன்னிட்டுக்கொண்டு த்வைபாயன ஸரோவரத்திற்கு வந்தார்கள். அப்பொழுது ஜலத்தை விட்டு எழுந்து, அசுவத்தாமாசாரியார் கிருபாசாரியார் கிருதவர்மா இந்த மூவர்களுடன் யோசனை செய்துகொண்டிருந்த துரியோதனனைக் கண்டார்கள். அம்மூவர்களும் பாண்டவர்களைப் பார்த்து ஓடிவிட்டார்கள். துரியோதனன் ஜலத்திற்குள் மூழ்கினான். ஸ்ரீ கிருஷ்ணரின் ஆக்ஞையின்பேரில் தர்மபுத்திரர் துரியோதனனைப்பார்த்து மிக்க அதிகமான நிஷ்டூர வாக்யங்களைச்சொல்லி அவனை யுத்தத்திற்கழைத்தார். பிறகு துரியோதனன் பொறுமையில்லாதவனாய் தடியால் அடிவிழுந்த கிருஷ்ண ஸர்ப்பம்போல் பெருமூச்சு விட்டுக்கொண்டு வஞ்சனையுடன் இவ்வாறு பேசினான். நான் தபம் செய்ய வனத்திற்கு செல்கிறேன். தாமே எல்லா பூமியையும் ஸம்ரக்ஷணம்செய்யும், என்று துரியோதனன் சொல்லவும், அப்பொழுது தர்மபுத்திரர் பேசினார். ஹே துரியோதனா! ஸ்ரீகிருஷ்ணர் தூதனாய் வந்திருக்கும்பொழுது ஊசிமுனை குத்தும் பூமியையும் எங்களுக்குக் கொடுக்க நீ விரும்பவில்லை. இப்பொழுது பீஷ்மத்ரோணாதிகளைக்கொல்லச் செய்து எங்களுக்கு எல்லா பூமியையும் தானம்செய்ய இப்பொழுது இச்சிக்கிறாய். இப்பொழுது நாம் உன்னைக்கொல்லாமல் பூமியை எடுத்துக்கொள்ளமாட்டோம். வா, யுத்தத்தில் ஸ்திரமாக நில். நீ பயந்து ஜலத்திற்குள் பிரவேசித்துவிட்டதால், நீ குருவம்சத்தில் பிறந்தவனன்று, என்று இவ்வாறெல்லாம் தர்மபுத்திரர் சொன்ன க்ரூரமான வார்த்தை

கேட்டு, துரியோதனன் கோபத்துடன் கிருஷ்ணஸர்பம் போல் பெருமூச்சு விட்டுக்கொண்டு, ஜலஸ்தம்பத்தை விட்டு விட்டு எழுந்தான். அப்பொழுது இவ்வாறு சொன்னான். ஹே தர்மபுத்திரா! நான் ஒருவன். கிரீடம் கவசமி இல்லாமல் இருக்கிறேன். நீங்கள் அநேகம் பேர்கள் இருக்கிறீர்கள். கவசம் கிரீடம் இவைகளுடன் இருக்கிறீர்கள். இப்படியிருந்தும் நான் உங்களுடன் சேர்ந்து யுத்தம் செய்வது ஸமமாகும் என்று நீர் அறியும் பக்ஷத்தில், நான் உங்களுடன் யுத்தம் செய்கிறேன். அல்லது ஒருவருடன் வேண்டுமானாலும் யுத்தம் செய்கிறேன். எனக்கு பயமில்லை, என்றிவ்வாறுசொல்லப்பட்ட தர்மாத்மாவான தர்மபுத்திரர் பின்வருமாறு சொன்னார். உனக்கு கவசம் கிரீடாதிகளைத் தருகிறேன். எங்கள் ஐவர்களுக்குள் உனக்கு பதில் வீரன் யாரென்று நீ விரும்புகிறாயோ அவனைத் தேர்ந்தெடுத்துக்கொள். அந்த ஒருவனைக்கொன்று நீ ராஜ்யத்தை அனுபவிப்பாய். மற்ற நால்வர்கள் வனத்திற்குச்செல்கிறோம். அந்த ஒருவனால் நீ கொல்லப்பட்டு போனால் எல்லா பூமியையும் நாம் அனுபவிக்கிறோம். நீ எந்த ஆயுதத்தைக் கொண்டு சத்ருக்களை ஜயிக்கவிரும்புகிறாயோ அந்த ஆயுதத்தை எடுத்துக்கொள் என்று தர்மபுத்திரரால் சொல்லப்பட்ட துரியோதனன் பேசியதாவது:—துர்பலர்களாயுள்ள அர்ஜுனன், நீர் முதலான நால்வர்களுடன் நான் யுத்தம் செய்வதில்லை. பீமசேனனுடன் கதாயுதத்தைச் செய்கிறேன். எனக்கு எப்பொழுதுமே கதாயுதம் பிரியமாயுள்ளது. ஆகையால் நான் வேறு ஆயுதத்தைத் தொடுவதில்லை. இவ்வாறு துரியோதனன் சொன்ன வார்த்தையை பீமசேனர் கேட்டு துரியோதனனின் கதாயுதத்தை விட முன்னை மடங்கு பாரம் அதிகமாயுள்ள கதாயுதத்தை சந்தோஷமாய் எடுத்துக்கொண்டு, வீரரான பீமசேனர் யுத்தத்தில் மனமுள்ளவராய் சிம்ஹநாதம்செய்துகொண்டு எழுந்தார்.

(தொடரும்)



# விதவா விவாக கண்டனம்.

(முன் 172ம் பக்கம் தொடர்ச்சி.)

35 சுருதிர்ஹிச்ரூயதே புண்யா ப்ராம்மணானாம் யசஸ்வினாம்।
இஹலோகே ச பித்ருபி: யாஸ்திரீயஸ்ய மஹாமதே ॥
அத்பிர்தத்தா ஸ்வதர்மேண ப்ரேத்ய பாவேபி தஸ்ய ஸா ॥

(ஸ்ரீமத் ராமாயணம் அயோத்யா காண்டம்)

பிரசித்தர்களான பிராம்மணர்கள் சொன்ன புண்யகரமான ஓர் செய்தியை நான் கேட்டிருக்கிறேன். அதாவது இந்த பூலோகத்தில் எந்த ஸ்திரீ அவளுடைய உறவினர்களால் யாருக்கு உதகதாரா பூர்வமாய் வாழ்க்கைப்படுகிறாளோ அவன்தான் அந்தக்காரணத்தால் அந்த புருஷன் இறந்தபின்பும் அவனுக்கே சேர்ந்தவள். இவ்வாறு வேத: ப்ராசேதஸாத் ஆஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா, என்று வேதத்திற்கு சமானமாய் கொண்டாடப்பட்டுவரும் ஸ்ரீ வால்மீகி ராமாயணத்திலும் காணப்படுகிறது.

இனி ஸப்தபதியை முடித்த கன்னியைக்கு புனர் விவாகம் கூடாதென்று காட்டும் ஸ்பஷ்டமான பிரமாணங்களைக் காட்டுகிறோம்.

36 பாணிக்ரஹண மந்த்ராணாம் நிஷ்டாஸ்யாத் ஸப்தமே பதே॥

(மகாபாரதம் அனுசாஸன பர்வம்)

ஸப்தபதியான பின் விறதாகுவாக மந்திரங்கள் முடிவடைந்ததாய் ஆகிறது.

37 பாணிக்ரஹண ஸம்ஸ்காராந்நியதம் பதிலக்ஷணம்।
தேஷாம் நிஷ்டாது விக்ஞேயா வித்வத்பிஸ்ஸப்தமே பதே।

(பாராசரர் தர்மசாஸ்திரம்)

பாணிக்ரஹணமென்னும் ஸம்ஸ்காரத்தால்தான் பதித்வம் என்பது ஏற்படுகிறது. அந்த மந்திரங்கள் சம்பூர்ணமாக முடிவடைகிறதென்பது ஸப்தபதியான பிறகுதான்.

38 ஸ்வகோத்ராத் ப்ரச்யதே நாரீ உத்வாகாத் ஸப்தமே பதே॥

(லிகிதஸம்ஹிதா)

ஒரு ஸ்திரீயானவள் விவாகமாகி ஸப்தபதியான பிறகுதான் தன் பித்ருகோத்திரத்திலிருந்தும் விலக்கப்படுகிறாள்.

39 ஸ்வகோத்ராத் ப்ரச்யதே நாரீ விவாகாத் ஸப்தமே பதே॥

(யமர்)

விவாகமாகி ஸப்தபதியான பிறகுதான் அவளுடைய பித்ருகோத்ர ஸம்பந்தம் நீங்குகிறது. இதனால் ஸப்தபதியான பிறகுதான் விவாகம் முடிவடைந்ததாயும் அதற்குமுன் சரியான முடிவைப்பெறாததாகவும் தெளிவாய் விளங்குகிறது. விவாகம் முடிவடையாதிருக்கும்பொழுது புருஷனுக்கு ஆபத்துக்கள் நேரிட்டால் மறுமணம் செய்ய அனுமதிக்கப் பட்டிருப்பது யுக்திக்கும் பொருத்ததாய் இருக்கிறது.

40 பிராம்மாதிஷ்வபி கன்யாதானேத்தரமபி ஸப்தவிதே:
பூர்வம் வரஸ்யஷண்டத்வாதி க்ஞானே வரமிருதௌ
வா கன்யான்யஸ்மைதேயா

(தர்மஸிந்து)

பிராம்மம் முதலிய விவாகங்களிலும் கன்யாதானம் செய்த பின்பும் ஸப்தபதி நிறைவேறாத முன்பும் வரனுடைய நபும்ஸகத்தன்மை முதலான தோஷங்கள் வெளியானாலும் சரி அல்லது வரன் இறந்து போனாலும் சரி அந்த கன்னிகையை அன்னியனுக்கு விவாகம் செய்து வைக்கலாம்.

41 ஸப்த பத்யுத்தரம் பர்த்தா ம்ரியேத யதி யோஷித:।
விதவேத்யுச்யதே ஸைவ ந ஸம்ஸ்கார்யேதி கௌதம:॥

(கௌதமர்)

ஸப்தபதியான பின்பு ஓர் ஸ்திரீக்கு பர்த்தா இறந்துபோகும் பக்ஷத்தில் அந்த ஸ்திரீ விதவை என்று தான் சொல்லப்படுகிறாள். அவள் புனர்விவாகத்திற்கு அருகமுள்ளவள் அல்ல என்பது கௌதமரின் அபிப்பிராயம்.

42 அர்வாக் ஸப்தபதாத்யஸ்யா: பர்த்தா ப்ராப்னோதி சாபத:॥
புனர் விவாஹ்யா ஸைவஸ்யாத் யாவத் ஸாஸ்யாத் ரஜஸ்வலா॥

(விருத்தாத்ரி)

ஸப்தபதிக்கு முன்பு ஓர் ஸ்திரீயின் புருஷன் ஆபத்துக்களை அடைந்தால் அவள் ப்ரௌடையாகாதவளாய் இருந்தால்தான் புனர் விவாகம் செய்துகொள்ள அருகமுள்ளவள் ஆவாள்.

43 ஸப்தபத்யுத்தரம் நைவ விவாஹ: சாஸ்திர சோதித:।
யோஷிதாம் ஸர்வகாலேபி கன்யானாமிதி ஸன்மதம்॥

(விபாண்டகர்)

ஸப்தபதியானபின் கன்னிகைகளுக்கு புனர் விவாகம் என்பது எந்தகாலத்திலும் சாஸ்திரங்களால் அனுமதிக்கப்படவில்லை என்பதே சாதுக்களின் மதமாகும்.



44 பூர்வம் ஸப்தபதீ விதே நதிகதே தோஷே வரேவாமிருதே
தேயான்யஸ்ய:

(முகூர்த்தமார்த்தாண்டம்)

ஸப்தபதீ நடப்பதற்கு முன் வரனின் தோஷங்கள் வெளியானாலும் வரன் இறந்தாலும் மற்றொரு வரனுக்கு அந்த கன்னிகை விவாகம் செய்துவைக்கப்படத்தகுந்தவள்.

45 க்ராந்த ஸப்தபதாம் கன்யாம் நோத்வஹேச்ச கலௌ த்விஜ:॥

(வாயவீய ஸம்ஹிதா)

ஸப்தபதி கருமத்தை நிறைவேற்றிய ஓர் கன்னிகையை த்விஜர்கள் எனப்படும் பிராம்மண க்ஷத்திரிய வைசியர்கள் கலியுகத்தில் புனர் விவாகம் செய்துகொள்ளக்கூடாது.

46 தத்தாயாஸ்சைவ கன்யாயா: புனர்தானம் பரஸ்யச।
வர்ஜயீத கலௌ॥ (பிருஹந்நாரதீயம்)

ஒரு தரம் ஒருவனுக்கு கொடுக்கப்பட்ட கன்னிகையை மறுமுறை மற்றொருவனுக்கு கொடுப்பதென்பது இக்கலியில் கூடாது.

47 புனர் விவாக கரணம் யக்ரோக்தம் ராஜஸத்தம।
தத் ந ஸப்தபதாத் பூர்வம் ஸ்திரிணா முக்தம் மகாபதி।
பூர்வ பர்த்து ரஜோ த்ருஷ்டே: பூர்வம் பிராம்மண யோஷிதாம்।
யஸ்த்வன்யதா ப்ரமாணார்த்தம் வதேத் ஸப்ரம்மஹா மத:॥

(பிருஹந்நாரதீயம்)

நாரதர் யுதிஷ்டிரரைப் பார்த்து சொல்வதாவது! ஹே! யுதிஷ்டிரா! ஸ்திரீகளுக்கு புனர் விவாகம் செய்யலாமென்று சொல்லப்பட்டிருப்பது ஸப்தபதி நடப்பதற்குமுன், முதல் புருஷனுக்கு மகா ஆபத்து நேரிட்டால்தான், ஸ்திரீகளுக்கு அவ்வாறு செய்யலாமென்று சொல்லப்பட்டிருப்பதாய் ஆகும். மேலும் பிராம்மண ஸ்திரீகளாய் இருந்தால் அவர்கள் புனர் விவாகம் செய்துகொள்ள ப்ரௌடையாகாதவர்களாய் இருக்கவேண்டும். இதற்கு மாறாகச்சொல்லி அதை எவன் பிரமாணமென்று சாதிக்கிறானோ அவன் பிரம்மஹத்தி செய்தவனும் ஆகப்படுவான்.

48 ஸமுத்ரயாத: ஸ்வீகார: கமண்டலு விதாரணம்।
தத்தாக்ஷதாயா: கன்யாயா: புனர்தானம் பரஸ்யச॥
தீர்க்க காலம் பிரம்மசரியம் வர்ஜயீத கலௌயுகே।
ஏதான்யஸ்து த்விஜோ தர்மான் ஸத்வி[illegible] தோஷபாக் பவேத்॥
தஸ்யவை நிஷ்க்ருதிர் நாஸ்தி தப்தக்ருச்ர சதைரபி॥

(தேவலர்)

சமுத்ரயானம் செய்தவனை சேர்த்துக்கொள்ளுதல், கமண்டலுவைப்பிடித்தல், ஒருமுறை விவாகமான ப்ரௌடையான ஸ்திரீயை மறுமுறை அன்பனுக்கு விவாகம் செய்வித்தல், வெகு நீண்டகாலம் பிரம்மசாரியாகவே இருத்தல், இவைகளை கலியுகத்தில் விலக்கவேண்டும். இந்த தர்மங்களை அனுஷ்டிக்கும் எந்த த்விஜனும் பாபம்செய்தவனாகவே ஆவான். நூற்றுக்கணக்கான திருச்சரங்கள் செய்தபோதிலும் அந்த பாபம் நீங்காது.

(தொடரும்.)

# விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 215ம் பக்கம் தொடர்ச்சி)

ஸப்தம ஸ்கந்தத்தில், யதாக்ரஹக்ரஸ்தஇவ க்வசித்ஹஸத்யாக்ரந்ததே த்யாயதி வந்ததே ஜனம் । முஹுச்வஸன் வக்தி ஹரே ஜகத்பதே நாராயணேத்மாகதி: கதத்ரப:॥ ததாபுமான் முக்த ஸமஸ்தபந்தன: தத்பாவபாவானுகிருதாசயாகிருதி:। நிர்தக்த பீஜானுசயோ மஹீயஸா பக்திப்ரயோகேண ஸமேத்யதோக்ஷஜம்॥ பிசாசு பிடித்தவன் எவ்வாறு செய்வானோ அவ்வாறு ஒருசமயம் கூவிக்கொண்டும் ஒருசமயம் பெரியார்களை வணங்கிக்கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும், ஹரே! ஜகத்பதே! நாராயணனென்று பகவன் நாமாவைச்சொல்லி லஜ்ஜையைவிட்டு பகவானை சரணம் புகுந்தானேயானால், பகவானுடைய ஸ்வரூபத்தில் ஏற்பட்ட பக்திக்கு அனுகூலமான காரியங்களுள்ளவனாய் அவனுடைய கர்மபீஜம் பொசிந்துபோயுள்ள சம்சாரமுள்ளவனாய் எல்லா பந்தங்களும் விலகிப்போய் மகாபக்திசெய்து ஸ்ரீஹரியை அடைகிறான். அஷ்டம ஸ்கந்தத்தில், யக்ஞேச யக்ஞபுருஷாச்யுத தீர்த்தபாத தீர்த்தச்ரவ: ச்ரவண மங்கள நாமதேய । ஆபன்ன லோக விருஜினோப சமோதயாத்ய சம்ந: கிருதீசபகவன்னவஸன்னநாத॥ யக்ஞத்திற்கு நியாமகனே! யக்ஞத்தால் ஆராதிக்கப்படுகிறவனே! ஹே அச்யுத! கங்கையைப்பெற்ற காலுள்ளவனே! சாஸ்திரங்களைக் கேட்கும் காதுகளை மங்களமாகச்செய்யும் திவ்விய நாமங்களுள்ளவனே! சரணாகதர்களின் துக்கத்தைப்போக்கி அவ



தாரம் செய்பவனே! க்ஷீணித்து வருபவர்களை காப்பவனே! எங்களுக்கு க்ஷேமத்தைத்தாரும். நவம ஸ்கந்தத்தில், யந்நாமச்ருதிமாத்ரேணபுமான் பவதி நிர்மல:। தஸ்ய தீர்த்தபத: கிம்வாதாஸானுமவசிஷ்யதே॥ யாருடையநாமாவைகேட்ட மாத்திரத்தாலேயே ஒருவன் எல்லாபாபங்களும் போய் பரிசுத்தனாகிறானோ அந்தகங்கையை பெற்ற காலுள்ள ஹரியின் தாஸர்களுக்கு கிடைக்காமல் பாக்கியிருப்பது யாது உண்டு. தசமத்தில் ச்ருண்வன் கிருணன் ஸம்ஸ்மரயன் ச சிந்தயன் நாமானி ரூபாணி ச மங்களானிதே । க்ரியாஸுயஸ்த்வச்சரணார விந்தயோ: ஆவிஷ்டசித்தோ ந பவாயகல்பதே॥ பகவன்! உம்முடைய மங்களமான நாமங்களை அவைகளால் குறிக்கப்படும் எல்லா காரியங்களைச் செய்பவரென்று பூஜ்யபுத்தியுடன் சிரவணம் செய்தும், சுயம் வாயால் சொல்லியும், நன்கு ஸ்மரணம் செய்தும், தங்களுடைய சரணாரவிந்தங்களில் மனது பதிந்து தங்களுடைய ரூபங்களை தியானம் செய்துகொண்டும் ஸம்ஸாரத்தை மீண்டும் அடைவதில்லை. ஏகாதச ஸ்கந்தத்தில், சிருண்வன் ஸுபத்ராணி ரதாங்கபாணே: ஜன்மானி கர்மாணி ச யானிலோகே॥ கீதானி நாமானி ததர்த்தகானி காயன் விலஜ்ஜோ விசரேத் அஸங்க:॥ பகவத் பக்தனாயிருப்பவன் சக்ரபாணியான பகவானுடைய மங்களகரமான உலகில்செய்த அவதாரங்களையும் அவதார காரியங்களையும் அவைகள் சம்பந்தமாய் பெரியோர்களால் சொல்லப்பட்டுவரும் அநேக நாமங்களையும் லஜ்ஜையை விட்டு உரக்கச்சொல்லிக்கொண்டு துஸ்ஸங்கமில்லாமல் சஞ்சாரம் செய்துவரவேண்டும். த்வாதசத்தில் யந்நாமதேயம் ம்ரியமாண ஆதுர: பதன்ஸ்கலன் வா விவசோ கிருணன்புமான் । விமுக்தகர்மார்கல உத்தமாம் கதிம் ப்ராப்னோதி யக்ஷ்யந்தி ந தம் கலௌ ஜனா:॥ எந்த ஹரியின் நாமாவை இறக்கும் தருவாயில் இருப்பவனோ சங்கடப்பட்டிருப்பவனோ இடறுபவனோ விழுபவனோ தானாகவே மெய்மறந்து வாயால்சொல்லி அதனால் பகவானுடைய ரூபத்தில் பக்தி ஏற்பட்டு அவன் கர்மபந்தத்தைப் போக்கிக்கொள்கின்றானேயன்றி, கலியுகத்தில் ஜனங்கள் யக்ஞாதிகளைச் செய்வதில்லை. பிரம்மாண்ட புராணத்தில் நாமனோஸ்தி யாவதீ சக்தி: பாபநிர்ஹரணேஹரே:। தாவத் கர்த்தும் ந சக்னோதி பாதகம் பாதகீஜன:॥ மனுஷ்யன் எவ்வளவு பாபம் செய்யக்கூடுமோ அவ்வளவு செய்தா

னும் பகவானுடைய நாமாவுக்கு அவைகளை எல்லாம் சம்பூர்ண மாய் நாசமாக்க சக்தியுண்டு. அதன் சக்தியுள்ள வரையில் இவன் பாபங்களைச்செய்யமுடியாது. பிரம்மாண்டோத்தர புராணத்தில் யத்கண்டே துளஸீமாலா யத்ஹஸ்தே ச பவித்ரகம் । யஜ்ஜிஹ்வாயாம் ஹரேர் நாம நதம் வை பாததே கலி:॥ யாருடைய கழுத்தில் துளசி மணி மாலையும் கையில் பவித்ரமும் நாக்கில் ஸ்ரீஹரியின் நாமங்களும் இருந்துவருகிறதோ, அவனை கலி பாதிப்பதில்லை. நரஸிம்ஹ புராணத்தில் ஹரேர் நாமைவ நாமைவ நாமைவ மம ஜீவனம் । கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ கதிரன்யதா । ஸ்ரீஹரியின் நாமாதான், மும்முறை சொல்லுகிறேன், அதுவேதான் எனக்கு கதி, கலியில் வேறுகதியில்லை. இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஸ்காந்த புராணத்தில், ராமேதித்வ்யக்ஷரம் நாம ஸர்வவேதாதிகம் சுபம் । விஷ்ணோரேகைக நாமானி ஸர்வவேதாதிகானிச ॥ தாத்ருஸ்யச அநந்த நாமப்யோ அதிகம் நாம ஸஹஸ்ரகம் । தாதிருங் நாம ஸஹஸ்ரேண ராம நாம ஸமம் மதம்॥ பகவானுடைய ராமாவென்னும் இரண்டு எழுத்துக்களைக்கொண்ட மங்களகரமான நாமம் எல்லா வேதங்களைவிட மேலானதாகும். பகவானுடைய ஒவ்வொரு நாமாவும் அப்படித்தான். அப்படி பகவானுக்கு அனந்த நாமங்கள் உண்டு. அந்த அனந்தமான நாமங்களில் விஷ்ணு ஸஹஸ்ர நாமமாகிய ஆயிரம் நாமங்கள் உத்தமமானவைகள். அந்த ஸஹஸ்ரம் நாமாக்களுக்கும் சமானமாயுள்ளது பகவானுடைய ராமாவென்னும் நாமம்.

பவிஷ்யத் புராணம் ஸஹஸ்ர நாம படனம் ய: குர்யாச்ச தினே தினே । தஸ்ய புண்ய பலம் வக்தும் க: சக்தோ திவி வா புவி ॥

விஷ்ணுவின் ஸஹஸ்ர நாமத்தைச்சொல்லி யார் ஒவ்வொரு நாளும் படனம் செய்துவருகிறாரோ அவருக்கு ஏற்படும் புண்யத்தின் பலனைச்சொல்ல பூலோகத்திலும் சரியே அல்லது ஸ்வர்க்கத்திலும் சரியே யாருக்குத்தான் சக்தியுண்டு.

கருட புராணத்தில் ஸஹஸ்ர நாமபி: தேவம் பூஜயேன் மதுஸூதனம் । தஸ்யலோகா: க்ஷீயந்தே யுக கல்பாதிவ்யத்யயே॥

விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைச் சொல்லி யார் ஸ்ரீஹரியை அர்ச்சனை செய்கிறாரோ அவருக்கு வரும் புண்யலோகங்கள் யுகங்கள் கல்பங்கள் மாறினாலும் அழியமாட்டா.



வாஹ புராணத்தில் பாரதம் ஸர்வ சாஸ்த்ரேஷு பாரதே கீதிகா வரா । விஷ்ணோ: ஸஹஸ்ர நாமாபி க்ஞேயம் பாட்யம் ச தத்வயம் ॥

எல்லா சாஸ்திரங்களிலும் மகாபாரதம் உத்தமமானது. மகாபாரதத்தில் பகவத்கீதை உத்தமம். விஷ்ணுவின் ஸஹஸ்ர நாமாவும் அதற்கு சமானம் தான். இவ்விரண்டும் படிக்கத்தகுந்தது; அர்த்தம் அறியத்தகுந்தது.

சாஸ்த்ரேஷு பாரதம் ஸாரம் தத்ர நாம ஸஹஸ்ரகம்॥ வைஷ்ணவம் க்ருஷ்ண கீதா ச தத்க்ஞானான் முச்யதேஞ்ஜஸா॥

எல்லா சாஸ்திரங்களிலேயும் மகாபாரதம் உத்தமமானது. மகாபாரதத்தில் விஷ்ணு ஸஹஸ்ர நாமாவும் பகவத்கீதையும் தான் உத்தமமானவை. அவைகளின் அர்த்தத்தை நன்கு அறிந்தால் ஸம்ஸார பந்தம் விலகும்.

ஸ்தோத்ராணாம் உத்தமம் ஸ்தோத்ரம் விஷ்ணோர் நாம ஸஹஸ்ரகம் । ஹித்வா ஸ்தோத்ர ஸஹஸ்ராணி படனீயம் மஹாமுனே । யஸ்ய ஸ்மரணமாத்ரேண ஜன்ம ஸம்ஸார பந்தனாத் । விமுச்யதே நமஸ்தஸ்மை விஷ்ணவே ப்ரப விஷ்ணவே॥

எல்லா பகவத் ஸ்தோத்திரங்களைவிட உத்தமமானது விஷ்ணுவின் ஸஹஸ்ரநாமஸ்தோத்திரம். ஆயிரக்கணக்கான ஸ்தோத்திரங்களைச் சொல்வதை நிறுத்தியாவது விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரத்தை படனம் செய்யவேண்டியதவசியமாகும். எவனில் எந்த ஹரியை ஸ்மரணை செய்த மாத்திரத்தால் ஜன்மம் ஸம்ஸாரம் இவைகளின் பந்தத்தினின்றும் ஒருவன் முக்தனாகிறானோ அந்த ஸர்வசக்தியுள்ள விஷ்ணுவுக்கு நமஸ்காரம்.

இவ்வாறு மத்ஸ்ய புராணம் முதலான எல்லா புராணங்களிலேயும் விஷ்ணுவின் நாமங்களின் மகா மகிமையையும் விஷ்ணு ஸஹஸ்ர நாமாவின் மகா மகிமையையும் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. வைத்தியசாஸ்திரம் மந்திர சாஸ்திரம் முதலியவைகளில் விஷ்ணு ஸஹஸ்ர நாம ஜபத்திற்கு அபூர்வமான குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லாவகை ஜ்வரங்கள் [illegible] க்ஷயரோகம் முதலியவைகளுக்கு ஸஹஸ்ரநாமமே [illegible] மென்று சரக்ஸம்ஹிதை அறிவிக்கிறது. [illegible] களும் [illegible] களின் வீரியமும் [illegible] விஷ்ணு ஸஹஸ்ரநாம படனம் மிகவும் அவசியமென்று புராணங்களில்

ஸ்பஷ்டமாய் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. அவதாரிகையாக பீஷ்மாசாரியாரே தர்மபுத்திரருக்கு இந்த விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தின் மகாபலனை விஸ்தாரமாய் அறிவித்திருக்கிறார்.

## அவதாரிகை.

வைசம்பாயனர்:—ராஜ தர்மம் மோக்ஷ தர்மம் தானதர்மம் முதலான தர்மங்களையும் தீர்த்த யாத்திரை முதலிய பரிசுத்தம் செய்யும் காரியங்களை ஸம்பூர்ணம் கேட்டபிறகு தர்மபுத்திரர் திரும்பவும் பீஷ்மரை நோக்கி பிரசினம் செய்தார். உலகில் உத்தமமான தெய்வம் எது? எல்லாவற்றிற்கும் மேலான புருஷார்த்தம் எது? மனுஷ்யர்கள் யாரை ஸ்தோத்திரம் செய்தும் யாரை பூஜை செய்தும் சுபத்தை அடைவார்கள். எல்லா தர்மங்களிலும் உத்தம தர்மமென்று நீங்கள் எண்ணியிருப்பது எது? எதை ஜபம் செய்வதால் ஜன்மம் ஸம்ஸாரம் இவைகளின் பந்தத்தினின்றும் மனுஷ்யன் விடுதலையடைவான்.

பீஷ்மர்:—ஸ்தாவர ஜங்கமாத்மகமான எல்லா ஜகத்துக்கும் ஸ்வாமியும் தேவர்களுக்கெல்லாம் தேவனும் அந்தமில்லாதவரும் புருஷோத்தமனுமான விஷ்ணுவை எப்பொழுதும் முயற்சியுள்ளவனாய் அவருடைய ஆயிரம் நாமங்களினால் ஸ்தோத்திரம் செய்வதால் மனுஷ்யன் எல்லா துக்கங்களையும் கடந்தவனாய் ஆவான். நாசமில்லாதவரான அந்த விஷ்ணுவையே பக்தியுடன் தினம் பூஜித்துக்கொண்டும் தியானம் செய்துகொண்டும் ஸ்தோத்திரம் செய்துகொண்டும் நமஸ்காரம் செய்துகொண்டும் யாக யக்ஞாதிகளால் ஆராதித்துக்கொண்டும் இருப்பவன் எல்லா துக்கங்களையும் கடந்தவன் ஆவான். ஆதி அந்தமில்லாதவரும் எங்கும் வியாபித்திருப்பவரும் எல்லா உலகங்களுக்கும் முதல்வரும் உலகங்களுக்கு நியாமகருமான நாராயணனை இந்த ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரத்தால் ஸ்தோத்திரம் செய்கிறவன் எல்லா துக்கங்களையும் கடந்தவன் ஆவான். வேதங்களால் சொல்லப்படுகிறவரும் எல்லா தர்மங்களை அறிந்தவரும் உலகத்தாருக்கு கீர்த்தியை விருத்திசெய்பவரும் ஜகத் ஸ்வாமியும் பெருந்தெய்வமும் எல்லா பிராணிகளின் நிலைக்கு காரணமுமான நாராயணனை இதனால் ஸ்தோத்திரம் செய்பவன் எல்லா துக்கங்களையும் கடந்தவனாவான். புண்டரீகாக்ஷனை



ஹரியை ஒரு மனிதன் பக்தியுடன் ஸ்தோத்திரங்களைச்சொல்லி பூஜிப்பானேயானால் அதுதான் எல்லா தர்மங்களிலும் மிகச் சிறந்த தர்மமென்று நான் முடிவு செய்திருக்கிறேன். யார் ஸர்வோத்தமமான மகா தேஜோரூபியாய் இருக்கிறாரோ, யார் ஸர்வோத்தமமான மகா தபோ ரூபியாய் இருக்கிறாரோ, யார் ஸர்வோத்தமமான அனந்த கல்யாண குணங்கள் நிறைந்த பரபிரம்மமாக இருக்கிறாரோ, யார் உத்தமமான கதியாய் இருக்கிறாரோ, யார் பரிசுத்தம் செய்யும் வஸ்துக்களையும் பரிசுத்தம் செய்பவரோ, யார் மங்களகரமானவைகளுக்கும் மங்களத்தைத்தருபவரோ, யார் பிரம்மாதி உத்தம தேவதைகளுக்கும் உத்தமதேவதையாய் இருக்கிறாரோ யார் ஸகலப்ராணிகளுக்கும் ஸம்ரக்ஷகரோ, சிருஷ்டி காலத்தில் யாரிடமிருந்து எல்லாபிராணிகளும் பிறக்கின்றனவோ, மறுபடியும் பிரளயகாலத்தில் யாரிடத்தில் எல்லா பிராணிகளும் அடங்கி விடுகின்றனவோ, உலகத்துக்கெல்லாம் காரணமான அந்த ஜகந்நாதன் ஸ்ரீ விஷ்ணுவின் ஆயிரம் நாமங்களைச்சொல்லுகிறேன். பாபம் பயம் இவைகளைப்போக்கும். அவருடைய அனந்த கல்யாண குணங்களைக் காட்டக்கூடியதாய் உலகில் பிரசித்தமானதாயும் மகரிஷிகளால் நன்கு கீர்த்தனம் செய்யப்பட்டதாயுமுள்ள அந்த விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை உன் ஐசுவரியம் விருத்தியாவதற்காக உனக்குச்சொல்லுகிறேன்.

(தொடரும்)

## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமத்வ விஜயம்.

(முன் 209ம் பக்கம் தொடர்ச்சி.)

29. (உபஜாதி விருத்தம்) உலகத்துக்கு தீபம் போன்ற கிரணங்களுள்ள சூரியனும் ஸாதுஉலகத்துக்கு பராபரதத்வத்தை போதிக்கும் வாக் சமூகங்களுள்ள ஸ்ரீமத்வாசாரியாராகிய சூரியனும் கண்ணுக்குப்படாமல் மறைந்துபோகவும், அதாவது சூரியன் அஸ்தமனமடைந்து இருளடைந்து ஸ்ரீமத்வாசாரியாரும் கங்கையைத்தாண்டி மறைந்துபோய் விடவும், கங்கையின் கரையில்

இருட்டில் சிக்கியிருக்கும் சிஷ்யர்களின் கண்தாமரைகள் ஜலத்திலுள்ள தாமரைகளுடன் தன்சோபையை சீக்கிரம் விட்டுவிட்டது. 30. ஓர் பசுவின் குளம்படி ஜலத்தை கருடன் தாண்டுவதுபோல் அநாயாஸமாய் பூர்ண பலத்தோடு கூடிய ஸ்ரீமத்வாசாரியார் கங்கையைத்தாண்டி, உடுத்த வஸ்திரம் ஈரமாகாமல் அக்கரை வந்துசேர்ந்து, அதி ஆச்சரியத்துடன் பார்த்திருந்த அவ்வூர் அரசனாலும் பிராம்மணர்கள் முதலியவர்களாலும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யப்பட்டார். 31. பிறகு சத்ருவினின்றும் மிகவும் பயந்தவர்களாய் யாரையும் படகைக்கொண்டு கங்கையைத் தாண்டவைக்காமலிருப்பவர்களான படகுக்காரர்களை ஸ்ரீமத்வாசாரியாரின் ஜலஸ்தம்பம் முதலிய அபூர்வ சாமர்த்தியத்தைக் கண்டு ஆச்சரியமடைந்த அரசன் பிரேரிபிக்க அவர்களால் படகைக்கொண்டு அக்கரையிலுள்ள தம் சிஷ்யர்களை ஆசாரியார் கங்கையைத்தாண்டச்செய்தார். 32. அந்த சிஷ்யர்கள் ஸ்ரீமத்வாசாரியாரை எப்போது காண்போம் என்று மிகுந்த ஆவலுடன் கங்கையைத்தாண்டி இக்கரை வந்துசேர, விளக்குகளின் வெளிச்சம் அதிகமாயுள்ளதும் ஜனக்கும்பல்கள் பூர்ணமாய் நிறைந்ததும் சந்தேகமுள்ள பிரமேயங்களை பிரசினம்செய்யும் பண்டித சமூகங்களுள்ளதுமான கங்கையின் கரையைப்பார்த்தனர். 33. இந்த கங்காதீரத்தின் சபையில் வேதார்த்தங்களைதெரிந்தவர்களில் நிபுணராயும் விசேஷமான அபிப்பிராயங்களுடன் கூடியதாய் வேதத்தை அர்த்தம் செய்பவராயுமுள்ள ஸ்ரீமத்வாசாரியாரை தேவசபையில் வீற்றிருக்கும் சதுர்முகப்ரம்மாவைப்போல் இவர்கள் கண்டனர்.

### ஸங்கல்பம் உட்கார்ந்தது.

34. அந்த கங்காதீரத்திலிருந்து கிளம்பி ஸ்ரீமத்வாசாரியார் ஹஸ்தினை நகரம் வந்து, கங்கையிலிருந்து ஜாஸ்தி தூரமில்லாததாய் ஜனசஞ்சாரமில்லாததான ஓர் மடத்தில் சாதுர்மாஸ்ய விரதத்திற்காக நான்கு மாஸ காலம் விஷ்ணுவின் குணங்களில் மனம் செலுத்தியவராய் வாசம் செய்தார்.

### கங்கை ஸேவித்தது.

35. ஸ்ரீமத்வாசாரியார் அங்கு வசிக்கும்பொழுது தேவநதியான கங்கை அவரை ஸேவிப்பதற்காக அந்த மடத்தின் சமீபத்



திலுள்ள ஓர் விருக்ஷத்தின் கிளையால் அதன் சமீபத்தில் பூமியை கிழிக்கச்செய்து அதனின்றும்வெளிவந்து ஸ்ரீமத்வாசாரியாருக்கு உபயோகப்பட்டுக் கொண்டிருந்தாள். பரமசிவன் முதலியவர்களால் வணங்கப்படும் ஸரஸ்வதி தேவியே ஸ்ரீமத்வாசாரியாரின் வேலைக்காரியாக இருந்து ஸார்த்தக்யமடைந்தவளாயிருக்கும்பொழுது, அவளைவிட குணங்களில் குறைந்தவளான கங்கை ஸ்ரீமத்வாசாரியாருக்கு தொண்டு புரிந்தது ஆச்சரியமன்று. 36. அந்த கங்கை ப்ரத்யக்ஷமாய் எல்லோர் கண்ணிற்படும்படி திவ்விய சரீரமுள்ளவளாய் குருவர்யரான ஸ்ரீமத்வாசாரியாரின் பாதாரவிந்தத்தை தூரத்தில் நின்றபடிக்கே நமஸ்காரம் செய்தாள். மஹத்தாயும் ஸுந்தரமாயுள்ள ஸ்வரூபமுள்ள ஸ்திரீ ரூபங்கொண்ட கங்கையை சிஷ்யர்கள் கண்டு மிகுந்த ஆச்சரியமடைந்தார்கள்.

### கைச்சண்டை போட்டது.

37. சாதுர்மாஸ்யம் முடிந்தபின் ஹஸ்தினா நகரை விட்டு பாபத்தைப்போக்கும் ஸ்ரீமத்வாசாரியார் கிரமமாய் காசிக்ஷேத்திரம் வந்து அங்கு வசித்துவருகையில் ஒரு சமயம் தேகாப்யாஸ விளையாட்டில் கர்வங்கொண்ட பலிஷ்டர்களான தம் சிஷ்யர்களைப் பார்த்து இவ்வாறு சொன்னார். 38. நாங்கள் தான் மகா பலசாலிகள் என்று கர்வங்கொண்டிருக்கும் நீங்கள் எல்லோரும் ஒரு கக்ஷியாகவும் நான் மட்டில் ஒரு கக்ஷியாகவும் இருந்து த்வந்த யுத்தம் செய்ய சீக்கிரமே என்னிடம் வந்துசேருங்கள். உங்களில் யாராவது ஒருவன் தாக்ஷிண்யத்தால் இந்த யுத்தத்தில் தன் பூரா சக்தியையும் என்னிடம் உபயோகிக்காமல் இருந்துவிட்டால் அவன் என் ஆக்ஞையை மீறிய பாபத்திற்குள்ளாவான். 39. என்றிவ்வாறு சொல்லிக்கொண்டு ஆசாரியாருடைய ஆக்ஞையை மீறியதாய் ஆகலாகாதென்று பூராசக்தியுடன் மல்யுத்தம் செய்துகொண்டு ஏககாலத்தில் எதிர்த்து வந்த சரியான யௌவன வயதுடைய பதினைந்து சிஷ்யர்களை தடுத்து, பூமியில் தள்ளி எழுந்திருக்கமுடியாமல் பிடித்துக்கொண்டு உங்களுக்கு திறமையிருந்தால் எழுந்திருங்கள் பார்ப்போம், என்று சொல்லி மந்தஹாஸம் செய்தார். 40. பிரியரான ஆசாரியரே! கைகள் முதலிய

தங்கள் சரீர அவயவங்களும் சரியே, கைகால் விரல்களும் சரியே, எங்கள் சரீரத்தில் மேரு பர்வதம் போல் மிகுந்த பாரத்தை வகித்திருக்கின்றன. ஆகையால் நாம் சங்கடப்படுகிறோம். கருணையுள்ளவரே! எங்களை விட்டுவிடுங்கள். 41. இவ்வாறு அவர்கள் பிரார்த்தித்தபின் ஸ்ரீமத்வாசாரியாரால் விட்டுவிடப்பட்ட அந்த சிஷ்யர்கள் அவருடைய ஸ்வரூபம் இப்பேர்ப்பட்டதென்பதை நன்கு ஆலோசிக்காமலேயே மிகுந்த சந்தோஷத்தை அடைந்தார்கள். அவர்கள் நன்கு யோசித்திருந்தார்களேயானால் ஸ்ரீமத்வாசாரியார் விஷயத்தில் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டார்கள். அவருடைய ஸ்வரூபம் எப்பேர்ப்பட்டதெனில் அவருடைய புருவத்தின் அசைவால் ருத்திரன் இந்திரனுடன்கூடிய எல்லா உலகமும் அவருடைய இஷ்டப்படி பிரேரிக்கப்படுகிறது. இப்படியிருக்க பதினைந்துபேர்களை அடக்கியது ஆச்சரியமன்று

## மதப்பிரசாரம்.

42. ஒருசமயம் சாதுர்யமாய் எல்லா ஸித்தாந்தங்களையும் நிராகரித்துப்பேசிய இந்திரபுரீ என்று பெயருள்ள ஓர் அத்வைத ஸன்யாஸி ஸ்ரீமத்வாசாரியாரை ஜயிக்கவிருப்பங்கொண்டு, க்ஞானத்துடன் சேர்ந்த கர்மா புருஷார்த்தத்திற்கு ஸாதனமென்பதை நிரூபணம் செய்யுங்கள் என்று கேட்டார். 43. (இந்திரவம்சா விருத்தம்) க்ஞானசகாயமான கர்மா புருஷார்த்த ஸாதனமென்பதை யுக்திகளைக்கொண்டு ஸ்ரீமத்வாசாரியார் சாதித்தவிடவும் மேல்யுக்தியை அறிந்திராத க்ரூரமான சித்தமுடைய இந்திரபுரி ஸன்யாஸி ஞானமென்றால் என்னவென்று ஸ்ரீமத்வாசாரியாரைக் கேட்டார். அதற்கு ஆசாரியார், ஹே வாதியே! நீர் சிறிதுஞானமுடையவராய் இருந்தால் க்ஞானமென்னும் பதத்தை நீர் முன்னாடியே அறிந்தவராயிருக்கிறீர், என்றால், க்ஞானபதத்தின் அர்த்தத்தை முன்னாடியே அறிந்திருப்பதால் உம்முடைய பிரசினத்திற்கு ஸித்தார்த்ததா என்னும் தோஷமுண்டாயிருக்கிறது. எந்த வஸ்துவின் க்ஞானமும் உங்களுக்கு இல்லை என்றால் உம்முடைய பிரசினமும் பொருந்துவதில்லை. சப்தமும் அதன் அர்த்தமும் எப்போதும் சேர்ந்திருக்கும் தனித்து நில்லாது. நீர் சப்தத்தினுடையவும் அதன் அர்த்தத்தினுடையவும் க்ஞானமில்லை என்கிறீர். க்ஞானத்தின் சுபாவத்தை மட்டில் ஒப்புக்கொண்டு



க்ஞானத்தைவிட்டு தனித்திராத ப்ரச்னத்தை ஒப்புக்கொள்வது பரஸ்பரம் விருத்தமாகும். 44. ஸ்ரீவியாஸரின் சிஷ்யரான ஸ்ரீமத்வாசாரியார் எப்படி ஒவ்வொரு சரத்காலத்திலும் சந்திரன் எங்கும் அதிகமாய் பரவியுள்ள இருட்டுக்கு முடிவை உண்டுபண்ணும் சந்திரிகையின் சம்பந்தத்துடன் தாமரையை மூடச்செய்துகொண்டு விளங்குவதுபோல் எங்கும் அதிகமாய் பரவியிருக்கும் அக்ஞானமாகிய அத்வைத மதத்திற்கு நன்கு முடிவை உண்டாக்கும் வேதவியாக்யானத்தால் எல்லா சித்தாந்தி வித்வான்களின் தாமரைக்கைகளின் கூப்புதலைப்பார்த்து அபிநந்தனம் செய்துகொண்டு ஒவ்வொரு வித்வத் சபையிலும் பிரகாசித்தார். 45. (தோடகவிருத்தம்) ஸ்ரீமத்வாசாரியார் நிரூபணம் செய்து வந்தது யாதெனில், வேதாந்த சாஸ்திரத்தில் முக்யமாய் ஸர்வ சப்தங்களால் வாச்யன் (சொல்லப்படுபவன்) என்ற பிரசித்தமாயுள்ளதாய் அதாவது அவாச்யன் அநிர்வசனீயன் என்றில்லாததாய், பிரயாண பிரசித்தமான ஜீவசமூகம் தன் சமீபத்தில் வந்து சேரும்பொழுது அதாவது ஐக்யம் எப்போதும் ஏற்படாதிருக்கும்பொழுது காலத்தால் உண்டாகும் விநாசமில்லாததாய், கேவலமான க்ஞான ஸ்வரூபியாய் உள்ள தெய்வமாகிய பரபிரம்மத்தில் இருந்துவரும் இணையற்ற அவருடைய சுவேச்சையால்தான் மாயையால் அல்லாமல் அந்தந்த காலங்களில் ஜகத்தின் ஸம்ஹாரம் பாலனம் இவைகளோடுகூடிய சிருஷ்டியுண்டாகிறது. 47. பரபிரம்மமாகிய லக்ஷ்மீபதி நாராயணன் அவருக்கு ஸமானவரும் உத்தமரும் இல்லாதவர். எல்லாஜகத்தைவிட அத்யந்தம் விலக்ஷணர். எல்லா ஸத்தான ஆகமங்களாலும் அறியப்பட்டவர். இது முதலான உத்தமமான அர்த்தங்களை வெகுவாய் அவர் செய்த வியாக்யானம் வெளிப்படுத்தியது.

(தொடரும்.)

# ஆசாரமாலை.

(முன் 210ம் பக்கம் தொடர்ச்சி.)

## ஸந்தியார்த்த விமரிசை.

ஸந்தியாவந்தனம் மாத்யான்ஹிகம் இவைகளின் மந்திரங்களின் ஸ்ரீமத்வசித்தாந்தத்தை அனுஸரித்துள்ள அர்த்தமும் பல்வகை குறிப்

களும் மாத்வமித்திரன் நான்காவது வாலியம் முதற்கொண்டு சுமார் ஐந்து வருஷகாலமாய் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அத்வைதம் விசிஷ்டாத்வைதம் இந்த சித்தாந்தபரமாயுள்ள ஸந்தியாவந்தன மந்திரங்களின் அர்த்தம்தான் தமிழில் பிரசித்தமாய் பிரசாரத்திலிருக்கிறதேயன்றி த்வைத சித்தாந்தபரமான அர்த்தம் மாத்வமித்திரன் பக்கங்களில்தான் முதன்முதலில் வெளியாயிருக்கிறது. நூற்றுக்கணக்கான பக்கங்களைக்கொண்ட பலவாலியங்களில் வெளியான இதன் தத்வார்த்தம் மாத்வமித்திரன் வாசகர்களுக்கு எளிதில் மனதிற்பதியுமாறு சங்கிரஹமாய் அதன் தாத்பரியத்தை விமரிசைசெய்து இந்த நிருபத்தின் மூலமாய் அறிவிக்கப்படுகிறது.

## அவதாரிகை.

ஸந்தியாவந்தனம் என்பது, உபநயனம் ஆனமுதல் சாகுமளவும். பிரதிதினமும் மூன்றுவேளையும் எவ்வகை சந்தர்ப்பத்திலும் பிராம்மணனாயிருப்பவன் எவனும் அவசியம் செய்யவேண்டியதென்றும், அப்படி செய்யாவிடில் அவனுக்கு ரௌரவாதி நரகங்கள் ஏற்படுவதோடு அவனுடைய பிராம்மண்யமும் பாழாய்போய் வேறு எவ்வகை ஸத்கர்மமும் செய்ய அருகதையில்லாதவனாய்ப்போகுமென்றும், எமது சாஸ்திரங்கள் எல்லாம் அபிப்ராயபேதமின்றி அழுத்தமாய் வாதிக்கிறதென்றால், அந்த ஸந்தியாவந்தனமாகிய கர்மாவுக்கு எவ்வளவு உயர்ந்த அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை நாம் அவசியம் கவனிக்கவேண்டும். சாஸ்திரங்களில் மட்டுமல்ல. சமூகவாழ்க்கையிலும் அவ்வாறே எண்ணப்படுகிறது. ஒருவன் வேதவேதாங்கங்களில் மகா வித்வானாயிருப்பினும் ஸ்நானம் ஸந்தியாவந்தனாதிகளை ஒழுங்காய்ச் செய்யாதிருந்தால், "அவன் என்ன படித்திருந்தால் தானென்ன? அவன் கர்மப்ரஷ்டன், பதிதன்" என்று அவனிடம் அருவெறுப்பும், ஒருவன் அதிகமாய் படிக்காமல் ஸம்ஸ்கிருதத்தில் வியுத்பத்தியே இல்லாதவனாய் இருப்பினும் "அவன் ஒழுங்காய் அவைகளைச் செய்திருந்தால், அவன் அதிகம் படித்தவனன்று, ஓர் ஸாது. ஸ்நான ஸந்தியாவந்தனாதிகளை ஒழுங்காய்ச்செய்துகொண்டு ஆசாரசீலனாய் இருக்கிறான்" என்று அவனிடம் கௌரவமும் ஜனங்களுக்கு இருந்துவருவதை காண்கிறோம். ஏ அன்யத்ர குருதே யத்னம் தர்மகார்யேஷ்வபித்விஜ:। விஹாய ஸந்த்யா ப்ரணதிம் ஸ யாதி நரகாயுதம்॥ ஸந்தியா வந்தனம் செய்வதைவிட்டு ஒருவன் எவ்வகை புண்யகரமான தர்மகாரியங்களைச் செய்தபோதிலும் அவனுக்கு அந்த புண்யபலன் ஏற்படாததோடு நரகங்கள்தான் பல வருஷங்கள் வந்துசேரும் என்று வியாஸரும், "ஸந்தியாதிக்ரமணாத் விப்ர: ப்ராம்மண்யாத் பததேயத:" ஸந்தியாவந்தனத்தை விட்டால் ப்ராம்



மண்யம் தொலைந்துபோவதன் நிமித்தம் எந்த கர்மங்களையும் செய்ய யோக்யதை இல்லை என்று யோக யாக்ஞவல்க்யரும், "ஸாயம் ப்ராத: தாஸ ஸந்த்யாம் ஏ விப்ரா: நோபாஸதே। காமம் தான் தார்மிகோ ராஜா சூத்ர கர்மஸு யோஜயேத்" காலையிலும் மாலையிலும் எந்த பிராம்மணர்கள் ஸந்தியா வந்தனத்தைச்செய்வதில்லையோ அவர்களை தார்மிஷ்டனான அரசன் சூத்ரர்களைப்போல் நடத்தவேண்டுமென்று போதாயனரும், இப்படி பலமகரிஷிகளும் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். ஸந்யாஸியாய் போனாலும் அவனுடைய பிராம்மண்யம் நிலைத்திருக்க ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டியது அவசியமாய் இருக்கிறது. இத்யாதி காரணங்களைக்கொண்டு ஸந்தியாவந்தனத்துக்குள்ள அஸாதியான மகத்துவம் நன்கு விளங்குகிறது. இது ஏன் ஏற்பட்டது என்பதை யோசிக்க வேண்டும்.

ஸந்தியாவந்தனம் என்பதற்கு சூரியனிடமுள்ள பகவான் விஷ்ணுவை தியானம் செய்வதென்று நாம் அர்த்தம் கொண்டிருக்கிறோம். சூரியனிடமுள்ள விஷ்ணுவை தினம் மூன்றுவேளை தியானம் செய்வது ஒவ்வொரு பிராம்மணனின் கடமை என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. எவ்வாறு தியானம் செய்யப்படவேண்டுமென்பதைத்தான் இருபத்திநான்கு எழுத்துக்களைக்கொண்ட காயத்ரீ மந்திரம் அறிவிக்கிறது. இதனால் காயத்ரீயை பிரதிதினமும் பிரதிவேளையிலும் பிராம்மணன் ஜபிக்கவேண்டுமென்று விதி ஏற்பட்டது. காயத்ரி என்பது சாதாரணமான மந்திரமன்று. பிரதிதினமும் சூரியனை உதிக்காமல் தடுத்துவரும் மூன்றரைகோடி மந்தேஹாள் என்ற ராக்ஷஸக்கும்பல்களை ஸம்ஹாரம் செய்ய காயத்ரியால் ஜபிக்கப்பட்ட ஜலப்ரயோகம் செய்யப்பட அதனாலவர்கள் இறந்துபோய் சூரியன் வழக்கப்படி உதயமாகிறான் என்றால், அந்த மந்திரத்தின் வீரியத்தைப்பற்றி என்ன சொல்வது, இதுவே பிரம்மாஸ்திரமென்று கருதப்பட்டிருக்கிறது. எமது நூல்களில் குருபாண்டவ யுத்தாதிகளில் பிரம்மாஸ்திரம் முதலிய அஸ்திரங்கள் ப்ரயோகம் செய்யப்பட்டதென்றால், ஆசமனம்செய்து காயத்ரீ முதலிய அந்தந்த தேவர்களை தேவதையாகக்கொண்ட மந்திரங்களை ஜபித்து பாணங்கள் விடப்பட்டதாய் தெரிந்துகொள்ளவேண்டும். அந்தந்த மந்திரங்களை ஜபித்து மந்திர வீர்யம் புகுந்த பாணங்கள் அமானுஷமான காரியங்களைச் செய்திருக்கின்றன. காயத்ரியால் அபிமந்திரித்த ஜலம், அர்க்யம் என்று பிரசித்தியடைந்து சூரியனின் இடையூறுகளைப்போக்குகின்றன. விஷத்தைப்போக்கசக்தியுடையது கருடமந்திரம் என்று எமது நண்பர் ஒருவர் புத்தகமூலியமாய் அறிந்து, கருடோபநிஷத்திலுள்ள

மந்திரத்தை அநேக ஆயிரந்தடவை ஜபித்தவர்தும் அந்த உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி பாம்பு தேள் முதலியவைகளின் விஷத்தை நிவிருத்திசெய்ய முடியவில்லை. அந்த மந்திரத்தின் ஸித்திபெற்றுள்ள ஓர் குருமுகமாய் சுபமுகூர்த்தத்தில் அந்தமந்திரமே உபதேசமடைந்தால் கோறிய பலனுண்டாகும் என்றறிவிக்க, அவ்வாறே அவர் குருமுகமாய் அந்த மந்திரம் உபதேசமடைந்து, ஐந்து அக்ஷரங்களைக்கொண்ட அந்த சிறுமந்திரத்தால், பலமருந்துகளால் சொஸ்தமடையாத பலவகை விஷப்புண்கள் முதலியவைகளையும் சொஸ்தம்செய்வது பிரத்யக்ஷமாயிருக்கிறது. இவ்விதமாகவே காயத்ரியால் சூரியனுடைய இடையூறுகள் நிவிருத்தியடைவது பிரமாணமேயாகும். அஷ்டமகாமந்திரங்களை ஜபித்தாலும் அவைகளின் அங்கமாக காயத்ரீ ஜபிக்கப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. மிக்க அபூர்வமான பலன்களை ப்ரத்யக்ஷமாய் காட்டும் நீலகண்டமந்திரம்கூட சரியான வீரியமுள்ளதாய் ஏற்பட காயத்ரீமந்திரமும் ஒரு லக்ஷ தடவை ஜபிக்கவேண்டியதாயிருக்கிறது. இப்படி பல மந்திரங்களுக்கு காயத்ரீ மந்திரம் அடிப்படையாக இருப்பது உண்மை. காயத்ரியை ஜபிப்பதால் மகாபலன்கள் சித்தி உண்டாகிறது. "யோ ஜபேத் பாவனீம் தேவீம் காயத்ரீம் வேதமாதரம் । ந ஸீதேத் ப்ரதிக்ருஹ்ணன: ப்ருதிவீம் ச ஸஸாகராம் ॥ யே சாஸ்ய துஸ்திதா: கேசித் க்ரஹா: சூர்யாதயோ திவி ॥ தே சாஸ்ய ஸௌம்யா ஜாயந்தே சிவா: சுபகராஸ்ததா ॥ யத்ர யத்ர ஸ்திதாஸ்சைவ தாருணா: பிசிதாசநா:॥ கோரரூபா: மகாகாயா: தர்ஷயந்தி நதம் த்விஜம்॥" ஒருவன் காயத்ரியை ஜபித்துவந்தால் ஸப்த ஸமுத்ராந்த பூமியை தானம் வாங்கினாலும் அந்த ப்ரதிக்ரஹ சம்பந்தமான பாபம் இவனை அணுகாது. ஆதித்யன் அங்காரகன் சனி முதலான எந்த கிரகங்கள் குரூரமாயிருந்தாலும், ஒருவன் காயத்ரீ மந்திரத்தை ஜபித்துவந்தால் அந்த நவக்ரஹ பாதைகள் நீங்கி அவைகளை ஸௌமுகமாய் நிற்கும். பயங்கரமாய் மாமிஸத்தை புஜிப்பதாய் பெருத்த சரீரங்களுள்ளதாய் கோரமான ரூபமுள்ள பிசாசுகள் பூதங்கள் வேதாளங்கள் முதலியவைகள் குடிகொண்டிருக்கும் கடுங்காட்டில் போனாலும் காயத்ரீ மந்திரம் ஜபிப்பவனை அவைகள் ஹிம்சிக்காமல் விலகிவிடும், என்று மகாபாரதம் அசுவமேத பர்வம் ஸ்பஷ்டமாய் அறிவிக்கிறதோடு பலருக்கு அனுபவமும் இருந்துவருகிறது. தினம் காயத்ரீ மந்திரம் ஜபிப்பவனுக்கு முகத்தில் பிரம்ம வர்சஸ்ஸும் நீண்ட ஆயுளும் விசேஷமான பலம் வீரியம் ப்ரக்ஞை யசஸ் ஐசுவரியம் இருக்குமென்று உறுதி கூறப்பட்டிருக்கிறது. காயத்ரி மந்திரத்தின் பதம் ஸந்தி ஸந்தானம் ஒவ்வொரு அக்ஷரம் இவைகளின் மகாமகாத்மியமும் இன்னின்ன



பாபங்களைப்போக்கும் சக்தியும் முன்னாடி விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. காயத்ரியால் ப்ரதிபாதிக்கப்படும் எண்ணிறைந்த பகவத்ரூபங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதன் அர்த்தத்தை கவனித்தாலும் விஷ்ணுவின் விசேஷ மகாத்மியமும் நாங்கள் செய்யவேண்டிய பிரார்த்தனையும் இம்மந்திரத்தால் ஸ்பஷ்டமாய் விளக்குகிறது. இதுவே ஸகல வேதங்களினுடையவும் ஸாரமென்று பன்முறை உறுதி கூறப்பட்டிருக்கிறது. "பரிஹாப்யாபி வேதான் த்ரீன் கர்மாணி விவிதானி ச । ஸாவித்ரீ மாத்ர மாச்ரித்ய த்விஜோபவதி நிர்பய:।" மூன்று வேதங்களை அத்யயனம் செய்வதை விட்டும் பலவகை ஸத்கர்மங்களைச்செய்வதை விட்டும் ஒருவன் காயத்ரியைமட்டில்விடாது ஜபித்திருந்தால் மேற்கண்டவைகளை விட்ட பாபம் அவனுக்கு ஏற்படாதென்றும், "சதுர்ணாமபி வேதானாம் சாயத்ரீ ஜனனீ பவேத்" நான்கு வேதங்களின் சாரம்தான் காயத்ரி என்று யோகயாக்ஞவல்க்யரும் இம்மாதிரி பலவாறு பலமகரிஷிகள் அறிவித்திருக்கின்றனர். ஆகவே சூரியோதயத்திற்கு தடையாயுள்ளவைகளை நிவிர்த்தித்து சூரியோதயமானபின்பு அவரைத்தொழுது அவரிடமுள்ள விஷ்ணுவை தியானித்து எங்கள் பிரார்த்தனைசெலுத்துவது ஸந்தியாகர்மமென்று சுருக்கிச்சொல்லலாம். நாம் அவ்வாறு தியானாதிகளைச்செய்ய தினந்தோறும் நாம் சரீரத்தாலும் வாக்யத்தாலும் மனதாலும் செய்யும் பாபங்கள்விலகி நாம் பரிசுத்தமாயிருப்பது அவசியமாதலால், அந்த தியானம் சரியானதாய் ஏற்பட்டு தகுதியான பலன்கள் ஏற்பட முன்னும் பின்னும் மார்ஜனம் உபஸ்தானம் முதலியவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால் காயத்ரி மந்திரத்தின் சரியான பலன் சித்திக்கவேண்டுமென்றால் சந்தியாவந்தனத்தில் சொல்லியுள்ள ஒவ்வொரு கர்மாவிலும் பூரா கவனத்தை செலுத்தி அந்தந்த விதிகளின்படி செய்யவேண்டும். விதிகளின்குறிப்புகள் விஸ்தாரமாய் முன்னாடி அறிவிக்கப்பட்டிருக்கின்றன. கருடமந்திரத்தை ஜபிக்கும்பொழுது அங்கந்யாஸாதிகள் செய்யப்பட்டால்தான் அந்த மந்திரம் பலனைத்தருகிறது. அதுபோல் காயத்ரி ஜபத்திற்கு பூர்வாங்கங்களாய் சொல்லப்பட்டிருக்கும் எல்லா விதிகளை யதோக்தமாய்ச்செய்தால்தான் காயத்ரிஜபம் சித்தித்து பிரம்மக்ஞானம் நிலைநிற்கும்; பகவத் அனுக்ரஹமும் சித்திக்கும். வைத்தியன் சொன்ன பத்தியத்தை மேற்கொண்டால்தானே அவன் கொடுத்தமருந்தின் வீரியம் சரீரத்தில் ஏறி வியாதியை நிவர்த்தித்து ஆரோக்கியத்தைத்தரும். ஆதலால் காயத்ரி ஜபத்திற்கு அங்கங்களாய்ச் சொன்ன ஸந்தியாவந்தன விதிகளையெல்லாம் சிரத்தையுடன் செய்யப்படவேண்டியதவசியம். (தொடரும்.)

# ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தின் கால நிர்ணயம்.

## ஓர் ப்ராசீனக் குறிப்பு.

வைவஸ்வத மன்வந்திரத்து இருபத்தி எட்டாவது மகா யுகத்தைச்சேர்ந்த எட்டு லக்ஷத்து அறுபத்திநான்காயிரம் வருஷங் கொண்ட த்வாபரயுகத்தில் எட்டு லக்ஷத்து அறுபத்தி மூவாயிரத்து எண்ணூற்றி எழுபத்திநான்கு வருஷம் நான்கு மாஸம் இருபத்தி ஒன்றுநாள் கழிந்தபின், ஸுபானு ஸம்வத்ஸரம் சிராவணமாஸம் கிருஷ்ணபக்ஷத்தில் நவமி திதி கலந்த அஷ்டமி திதியன்று பாதிராத்திரிகாலத்தில் விருஷபலக்னத்தில் ஏற்பட்ட அபிஜின் முகூர்த்தத்தில் ரோஹிணி நக்ஷத்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் மதுராநகரில் பிறந்தார். நூற்றி இருபத்தி ஐந்து வருஷம் ஏழு மாஸம் எட்டரைநாள் தான் பூலோகத்தில் ஸ்ரீகிருஷ்ணர் வசித்திருந்தார். அவர் பூமியைவிட்ட நாள் ப்ரமாதி ஸம்வத்ஸரம் சைத்ரமாஸம் சுக்லபக்ஷம் ப்ரதமை. ஸ்ரீ கிருஷ்ணர் பூலோகம் விட்டபிறகு, இந்த ஈசுவர ஸம்வத்ஸரம் சைத்ர சுக்ல ப்ரதமை வரை 5038 ஐயாயிரத்து முப்பத்தி எட்டு வருஷமாகிறது. ஸ்ரீ கிருஷ்ணர் அவதாரம்செய்த இரவன்றே நவமிதிதி காலத்தில் யசோதையிடம் துர்க்கை அவதரித்தது.

## பாகவதம் சம்பந்தமாய் ஓர் முக்ய சம்பாஷணை.

வினா:—நான் சக்தி பூஜையைக்கொண்டவன். சக்தியின் மகிமையை விளக்கச்செய்பவன். நீங்கள் மாத்வர்கள் விஷ்ணுவை ஸர்வோத்தமமாய் விளக்கும் சுகர்செய்த பாகவதத்தை விசேஷமாய் கொண்டாடுகிறீர்கள். இந்த உங்கள் பாகவதம் வியாஸரால் செய்யப்பட்டதன்று. ஹேமாத்ரி என்னும் ப்ரபுவின் ப்ரேரணையின்பேரில் பொப்பதேவன் என்னும் கவியால் இது செய்யப்பட்டதாகும்.



விடை:—இல்லவே இல்லை. பொப்ப தேவராலேயே இயற்றப்பட்ட பக்தி முக்தாபலம் என்னும் நூலிலேயே பாகவத அத்யாயார்த்தஸாரம், பக்திமுக்தாபலம் பக்திலஹரீ என்ற மூன்று கிரந்தங்களை மட்டில் செய்திருப்பதாய் சொல்லியுள்ளார்.

வினா:—மகாபாரதத்திலுள்ள சுலோகங்களின் ரீதியைப்பாரும். பாகவத சுலோகங்களின் ரீதியைப்பாரும். இவ்விரண்டு நூல்களையும் ஒருவரே செய்திருக்கமுடியாது என்று எந்த விவேகியும் கண்டுகொள்வான்.

விடை:—மகாகவிகள் வெவ்வேறான பாகம் (style) பாவங்களுடன் சுலோகங்கள் உள்ள நூல்களை இயற்றும் சாமர்த்தியமிருப்பதை நாம் பல காவியங்களிலிருந்து கண்டு வருகிறோம். ஸ்ரீவியாஸரும் மகா கவியாயிருப்பதால் அவர் அவ்வாறு செய்தது தோஷமாகாது. மேலும் பரிசீலனை செய்தால் பாரத பாகவத சுலோகங்கள் ஒரே ஜாதியாயிருப்பதையும் ரூபிக்கலாம்.

வினா:—பாகவதத்தின் சிரவணபலம் ஏற்பட அதை தங்கமயமான சிம்ஹத்தின் மீது வைத்து தானம் செய்யவேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்கள். சிம்ஹவாகனமென்பது தேவிக்குத்தான் உண்டு. அதனால் தேவிதான் பாகவதத்தில் சொல்லப்படுகிறாள் என்பதுதான் அபிப்ராயம்.

விடை:—அது தவறு. தேவிக்குத்தான் சிம்ஹவாஹனமுண்டு என்று நிஷ்கரிஷம் செய்யக்கூடாது. விஷ்ணுவுக்கும் சிம்ஹவாஹனம் உண்டு. வைகானஸஸூத்ரத்தில் சொல்லப்படுவதாவது:—'அத விஷ்ணோர் வாஹனானி வ்யாக்யாஸ்யாம: ப்ரதமோ ஹம்ஸ: த்விதீயோ ஸிம்ஹ: த்ருதீயோ ஆஞ்ஜனேய:" என்று விஷ்ணுவின் வாகனங்களைச்சொல்கிறோம். முதல் ஹம்ஸவாகனம், இரண்டாவது ஸிம்ஹவாகனம். மூன்றாவது ஹனுமார் வாகனம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விஷ்ணுவின் பத்னியாயிருப்பதால்தான் தேவிக்கும் சிம்ஹவாஹனம் ஏற்பட்டிருக்கிறது. விஷ்ணுவின் அம்சம் அரசர்களுக்

கும் உள்ளதால் ஸிம்ஹாஸனம் ஏற்பட்டிருக்கிறது. இந்த காரணங்களைக்கொண்டு விஷ்ணுக்கு ஸிம்ஹாஸனம் முக்யமென்று ஏற்படுகிறது.

வினா:—புராணங்களில் பாகவதம் ஹயக்ரீவ ப்ரம்ம வித்யையை குறிப்பதாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஹயக்ரீவ ப்ரம்மத்தால் அகஸ்தியருக்கு சொல்லப்பட்டது ஸ்ரீவித்யை தான். அதனால் தேவீ பாகவதம் தான் பாகவதமே ஒழிய விஷ்ணு பாகவதம் பாகவதமாகாது.

விடை:—ஹயக்ரீவரென்னும் விஷ்ணுவால் பிரம்மாவுக்கு சொல்லப்பட்ட வித்யை என்று ஹயக்ரீவ ப்ரம்ம வித்யை என்பதற்கு பொருளாகும். இந்த லக்ஷணம் விஷ்ணு பாகவதத்திற்குத்தான் உண்டு தேவி பாகவதத்தில் இவ்வாறு உபக்ஷேபித்ததாய் இல்லை. பாகவதம் காயத்ரிக்கு வியாக்யானம் என்று வேறிடங்களில் சொல்லப்பட்ட லக்ஷணம் விஷ்ணு பாகவதத்திற்கு ஏற்படுகிறதேயல்லாது தேவி பாகவதத்திற்கு இல்லை. ஆகலால் பாகவதம் என்றால் சுகர் சொன்ன விஷ்ணு பாகவதமே ஒழிய தேவி பாகவதம் அல்ல.

வினா:—பதினெட்டு புராணங்கள் பதினெட்டு உப புராணங்கள் செய்தபின் மகாபாரதம் இயற்றப்பட்டதாகும். பிறகு தான் விஷ்ணு பாகவதம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்த விஷ்ணு பாகவதம் புராணங்களில் சேர்ந்ததன்று.

விடை:—பதினெண்புராணங்கள் உப புராணங்களை இயற்றினபின் தான் பாரதம் இயற்றப்பட்டதென்பதற்கு என்ன பிரமாணம். அதை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது.

வினா:—இதிஹாஸ புராணங்கள் எப்போதும் உண்டு. ஸ்ரீ வேத வியாஸர் தன் சிஷ்யர்களைக்கொண்டு வெகு பந்தோபஸ்தாய் அவைகளைக்காப்பாற்றி வெளியிட்டாரே ஒழிய அவர் இயற்றினவரன்று. அப்படி அவர் இயற்றியவரானால் இனி நடக்கப்போகும் விருத்தாந்தங்களை எல்லாம் அவர் முன்னாடி எப்படி அறியக்கூடும்.

விடை:—ஸ்ரீவேத வியாஸர் விஷ்ணுவின் அவதாரமென்று பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஈசுவரனுக்கு முக்காலத்திலும் ஞானமிருப்பதால் அவர் எல்லாவற்றையும் அறிந்து எழுதியிருப்பது பொருத்தமேயாகும்.



# செய்தித்திரட்டு.

திருவனந்தபுரத்தில் நடந்ததுபோல் மைசூர் ராஜ்யத்திலும் தீண்டாதார்களை ஆலயபிரவேசம்செய்ய ஸ்ரீமான் காந்தியின் அடியார்கள் எத்தனித்து அந்த ராஜாங்க சட்டசபையில் ஸ்ரீமான் பி. சுப்பராமசெட்டி என்பவர் ஓர் தீர்மானத்தைக்கொண்டு மைசூர் கவர்ன்மெண்டார் அதற்கிணங்காமல் தீர்மானத்தை வாபீஸ்வாங்கி தார்மிகர்களுக்கு நல்வழிகாட்டியது ஸநாதனிகளுக்கு மிகுந்த ஆதரவளிக்கிறது.

கொச்சி ஸம்ஸ்தானத்திலுள்ள இருஞால கூடாநெடும்பள்ளி என்ற ஊரிலுள்ள கோடாமாணிக்கம் கோயிலில் சாயங்கால பூஜை நடக்கும் பொழுது திருவனந்தபுரம் ஸமஸ்தான கோயில் பூஜகர்களான பரமேசுவரன் ஜாதவேதன் என்ற இருவர் அந்தகோயிலுக்குள் வரவும், தீண்டாதார் பிரவேசித்த கோயில்களை அவர்கள் பூஜிப்பவர்களாதலால் இக்கோயில் பூஜை அசுத்தமாய் போய்விட்டதாய் நிச்சயித்து, பூஜகர்கள் வெளியே வந்துவிட்டார்கள். நைவேத்யத்திற்கு வைத்திருந்த அன்னத்தையும் யாவரும் தொடாமல் எலம் போடவேண்டியதாயிற்று. தீண்டாதார் நுழையும் கோவில்களுடன் கொச்சிராஜ்யத்திலுள்ள கோவில் பூஜகர்கள் எவ்வித சம்பந்தமும் கூடாதென்று கொச்சிமகாராஜா உத்திரவு போடப்பட்டிருப்பதாய் தெரியவருகிறது.

உத்திராதிமடம் ஸமஸ்தானாதிபதி ஸ்ரீஸத்யதியான தீர்த்தஸ்வாமிகளின் ஆளுகைக்குட்பட்ட ரிஜிஸ்டரான திருப்பதி ஸ்ரீமத்வஸித்தாந்த அபிவிருத்திகாரிணி சபையின் டிரஸ்டி பத்திரத்தை ஒட்டி தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி தாலூக்காவைச் சேர்ந்ததாயும் அதற்கு சுமார் 7 மைல் தூரத்திலுள்ளதுமான சுமார் 80 வேலி நஞ்சை புஞ்சை தென்னந்தோப்புகள் சவுக்கை தோப்புகள் ஏராளமான குடிப்படைகள் கொண்ட சர்க்கின் கோவிந்தராயரின் எஸ்டேட்டுக்குச் சொந்தமான ராஜகோபாலபுரம் என்னும் ஏகபோக கிராமத்தை ஒரு லட்சரூபாய்க்கு ஸ்ரீஸ்வாமிகள் கிரயம்பெற்று இவ்வருஷத்திய மகாசமாராதனை உற்சவத்தை அங்கேயே நடத்தி ஆனந்தபரவசரானார். இனி தக்ஷிணாதிமடம் என்று பெயரை மாற்றி வைத்துக்கொள்ளவும் இடமேற்பட்டது என்று சில சிஷ்யர்கள் தன்யவாதங்களை கூறினார்கள்.

திருவனந்தபுரம் மகாராஜாவின் ஸீனியர் மகாராணியார் தமது ஆளுகைக்குட்பட்டிருக்கும் பலகோயில்களில் சண்டாளர்களை பிரவேசிக்க அனுமதிக்காததோடு அத்திங்கல் என்னும் பிரசித்தக்ஷேத்திரத்

தில் நடந்த உத்ஸவத்திற்கு வழக்கப்படி அவசியம் வரவேண்டிய திருவனந்தபுரம் மகாராஜா வர மறுத்ததை பொருட்படுத்தாமல் தர்மமே சரணம் என்று உறுதிகொண்டார்.

அகில இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தின் மகாநாடு பூரி என்கிற ஜகந்நாத க்ஷேத்திரத்தில் இந்த மார்ச்சுமீ 27, 28, 29உகளில் கூடப்போவதாயும் அச்சமயமும் மதுரை வக்கீல் ஸ்ரீமான் ராவ்சாஹிப் என். நடேச அய்யர் அவர்கள் அக்கிராசனம் வகிக்கப்போவதாயும் எல்லா சநாதனிகளும் வந்திருந்து முக்யமான தீர்மானங்களையும் நிறைவேற்றிவைக்கும்படிக்கும் மதராஸ் மாகாணம் வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் டி. எஸ். ராமசாமிய்யர் அறிவிக்கிறார்.

தருமபுரி ஸ்ரீமத்வசபாவின் ஆதரவின்கீழ் தருமபுரி விருபாக்ஷிபுரம் ஸ்ரீ ஆஞ்ஜனேய சுவாமி கோவிலில் ஸ்ரீமத்வ நவமி உற்சவத்தின் 13வது ஆண்டு கொண்டாட்டம் மகாஜனங்களால் 19—2—37ல் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டதென்றும் அன்று, காலை ஸ்ரீபகவத்பாதாள் படத்துடன் ஆஞ்சனேயருக்கு உற்சவமும் மத்தியானம் சுமார் 700பேர்களுக்கு பிராம்மண ஸந்தர்பணையும், மாலை ஸ்ரீமான் குஞ்சுமேடு சாமாசாரியார் அவர்களால் ஸ்ரீபகவத்பாதாளின் சரித்திர உபன்யாஸமும் உடுபி புத்தகிமடம் வித்வான் ஸ்ரீமான் எ. சுப்பிரமணிய ஆசாரியாரால் சம்ஸ்கிருதத்தின் முக்யம் வேத சாஸ்திராதிகளை அப்யஸிப்பதின் அவசியம் என்பதைப்பற்றி உபன்யாஸமும் நடந்ததென்றும் ஷை சபையின் காரியதரிசி ஸ்ரீமான் பி. ஆர். ஸ்ரீனிவாசன் அறிவிக்கிறார்.

---

# மாத்வமித்திரன் ஷீட் காலண்டர்.

வழக்கப்படி இப்புதிய வருஷத்திற்கு மாத்வமித்திரன் ஷீட் காலண்டரை வெளியிடவேண்டுமென்றும் மாத்வ சமூகத்திற்கு வைதிக காரியங்களை நடத்த இது பேருதவியாயிருக்கிறதென்றும் எமது நண்பர்கள் வற்புறுத்தியிருப்பதை மிகவும் பாராட்டுகிறோம். எல்லாவிதத்திலும் மத்வமதத்திற்கும், மாத்வ சமூகத்திற்கும் சேவை செய்வதையே நாம் பூஷணமாகக் கொண்டிருக்கி



றோமென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அப்படியிருக்க எமது நண்பர்களில் சிலர் அதை உணராமலிருப்பதோடு பாதகங்களைச் செய்யவும் முற்படுவது வருந்தத்தக்கதாயிருக்கிறது. மாத்வர்களில் பலவகை சம்பிரதாயங்கள் காணப்படுவதால் வருஷம் ஆரம்பம் முதல் தூங்கியிருந்து உபவாஸ நாள் காலைவரையில் அந்தந்த சம்பிரதாயத்து ஒரு சில பண்டிதர்கள் கூடி சச்சரவு செய்து ஒருவாறு நிர்ணயம் செய்துவிடுவதும், அதை அறிய சந்தர்ப்பமில்லாமல் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வெளியூர் வாசிகளில் சிலர் உபவாசம் செய்வதும், சிலர் போஜனம் செய்வதும், இவ்வாறு அலங்கோலமாய் ஆசார அனுஷ்டானம் சிதறிப்போய் பாழாய்ப்போவது ப்ராசீன காலத்திலிருந்து நிதர்சனமாயிருக்கிறது. நம் மாத்வ சமூகத்தினிடையே வேரூன்றியிருக்கும் இந்த பழக்கத்தை மாற்ற வேண்டுமென்று நாம் பல சந்தர்ப்பங்களில் வற்புறுத்தியிருக்கிறோம். மாத்வ சமூகத்தாருக்கென்று பொதுவாய் பிரசித்தமான இப்பத்திரிகை ஏற்பட்டதால் எங்கும் அந்தந்த சம்பிரதாயத்தின்படிக்குள்ள ஆசார அனுஷ்டானம் ஒரே வகையாய் நிலையாய் நிற்க இம் மாத்வமித்திரன் காலண்டர் வெளியாகி அதில் அந்தந்த சம்பிரதாயத்து மூல கிரந்தங்களை பரிசீலனைச் செய்தும், முக்கியஸ்தர்களைக் கலந்து யோசித்தும், பலவகை பஞ்சாங்கங்களை சோதனை செய்தும், முன் ஜாக்கிரதையுடன் வருஷ ஆரம்பத்திலேயே அந்தந்த சம்பிரதாயத்தார்கள் அனுஷ்டிக்கவேண்டிய உபவாசாதிகளின் கால நிர்ணயம் பிரசுரிக்கப்படுகிறது. அதில் ஏதாவது அபிப்பிராயபேதமிருந்தால் அந்தந்த சம்பிரதாய பேதத்தைப் பிரமாண மூலமாய் அறிவித்து அதை நிரூபணம் செய்யும்பக்ஷத்தில் நாம் அதையும் முன்னாடி அறிவித்துக் காலண்டரிலுள்ள நிர்ணயத்துடன் சேர்த்துக்கொள்ளும்படி அறிவிக்கத் தயாராயிருக்கிறோம். இதை நன்கு உணர்ந்தும் அறிந்தும் முதலிய அன்யபத்திரிகைகளில் இதாராளுக்கு மறுப்பு எழுதகூட சாவகாசம் கொடாமல் உபவாஸ தினத்தன்றே வெளியாகும்படி அபிப்பிராய பேதத்தை வெளியிட்டு, அந்தந்த சம்பிரதாயத்தார்களில் குழப்பத்தை உண்டாக்கும் பிராசீன சம்பிரதாயத்தை இன்னமும் கைக்கொண்ட அந்த எமது நண்பர்கள் இனி அதை மாற்றிக்கொள்

வார்கள் என்று நம்புகிறோம். வழக்கப்படிக்கு இம் மாத்வமித்திரன் காலண்டரில் அயனம், ருது, மாஸம், மாஸ மூர்த்தி வாரம் நக்ஷத்திரம், சிராத்த திதி, ஸந்தியாவந்தன திதி, இங்கிலீஷ், தமிழ் மாத தேதி வாரங்கள், ஸங்கிரமண புண்யகால நிர்ணயம், ஏகாதசி சிரவணம், விஷ்ணு பஞ்சகம், கோகுலாஷ்டமி முதலிய உபவாஸங்களின் நிர்ணயம், ஸ்ரீ உத்தராதி மடம், வியாஸராஜ மடம், ராகவேந்திரஸ்வாமி மடம், ஸ்வாமிகளின் புண்ய தினங்களின் பிரசித்த தாஸர்களின் புண்ய தினங்கள், பல பண்டிகைகள், விரதங்கள், கல்பங்கள் தசமி ஹரிவாஸரம், த்வாதசி ஹரிவாஸரம், ஸாதனி முதலியவைகளின் கணக்குப்படிக்குள்ள நிர்ணயம் முதலிய அநேக விபரங்கள் அடங்கியிருக்கும். இதன் விலை பிரதி 1-க்கு அணா இரண்டு. தபால் செலவு பிரதி 1-க்கு 0--0—9. பிரதி 1-க்கு 0—2—9 வீதம் எத்தனை காபிகள் ஆர்டர் செய்தாலும் போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அட்வான்ஸாக அனுப்பவேண்டியது அவசியம். சிறிது குறைந்தாலும் கியாலண்டர்கள் அனுப்பப்பட மாட்டாது. 2 டஜனுக்கு மேற்பட்டு ஆர்டர் செய்கிறவர்களுக்கு இரண்டு க்யாலண்டர்கள் இனாம். தேவைக்குத் தகுந்தபடி பிரதிகள் அச்சிடப்படுவதால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போதே ஆர்டர் செய்வது அவசியம். V. P. P-யில் அனுப்பப்படமாட்டாது.

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீ [illegible] விலாஸம், கும்பகோணம்.

---

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 30—3—37 | மங்களவாரம் | ஸ்ரீவாதிராஜஸ்வாமிகள் புண்யதினம் |
| 31—3—37 | புதவாரம் | ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகள் புண்யதினம் |
| 6—4—37 | மங்களவாரம் | சிரவணம். உப. இல்லை, விஷ்ணு பஞ்சக உப. இல்லை |
| 7—4—37 | புதவாரம் | ஏகாதசி உபவாஸம். |
| 10—4—37 | குருவாரம் | திலதர்ப்பணம் |
| 12—4—37 | சோமவாரம் | ஈச்வர ஸம்வத்ஸரம் ஆரம்பம், ஸம்வத்ஸரப் பண்டிகை. அப்யங்கம். வேப்பம்பூ பக்ஷணம், பஞ்சாங்க சிரவணம் அவசியம் |
| 13—4—37 | மங்களவாரம் | மேஷ ஸங்கிரமணம். புண்யகாலம் காலை மணி 6-45 முதல் 2-45 வரையில் |
| 19—4—37 | சோமவாரம் | ஸ்ரீ ராம நவமி |
| 21—4—37 | புதவாரம் | ஏகாதசி [illegible] |
| 25—4—37 | பானுவாரம் | சித்[illegible] பௌர்ணமி, வைசாக [illegible] ஆரம்பம் வி[illegible] உப. |

20870

# மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திகைக்கும்படியான அநேக ஆரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபால் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனச்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1—8—0 தபாற்கூலி 0—6—0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். ' *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ. 3. Regd. No.

# டி. எஸ். ஆர்

அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

நந்நி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனா திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் நினுசுகள் |
| ஸ்னோப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் [தைலம் |
| அம்பர், அரகஜா | பற்பொடி |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

...வும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

13—4
19—4—37
21—4—37
25—4—37

Venkateswar Power Printing Works and
...tha Ranganathachariar, Kumbakon...